

# கோபுரம்



தகவல் இதழ் | விகிர்திவருடம் | மார்கழி 2010



புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு

இந்து, சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மலர் 20 இதழ் 02

# கோபுரம்

## தகவல் இதழ்

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

இதழாசிரியர்
**திருமதி. தேவகுமாரி ஹரன்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்

மலர்க்குழு
**திரு. ய. அநிருத்தனன்**
உதவிப்பணிப்பாளர் (இந்து விவகாரம்)

**திரு. ம. சண்முகநாதன்**
உதவிப்பணிப்பாளர் (ஆலயம்)

**திருமதி. ஹேமலோஜினி குமரன்**
உதவிப்பணிப்பாளர் (அறநெறி)

**திருமதி. நித்தியவதி நித்தியானந்தன்**
ஆராய்ச்சி அலுவலர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு
ஆய்வுப்பிரிவு,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இல. 248 1/1 காலி வீதி, கொழும்பு 04,
தொலைபேசி : 2552641 / 2552643
தொலைநகல் : 2552825

# எண்ணம்

ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிப்படைப்பது மனம். மனதில் பிறக்கும் உணர்வே எண்ணம். மனிதனின் நல்ல எண்ணங்கள் நல்ல மனிதனையும் கெட்ட எண்ணங்கள் கெட்ட மனிதனையும் உருவாக்குகின்றது. இதனையே "மனிதனின் எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன" என்றார் புத்தர். பிறவிப் பெருங்கடலில் நீந்துவதும் பிறவிப் பயனைப் பெறுவதும் எண்ணங்கள் தான். ஆகவே எண்ணங்களைத் தூயனவாகவும், பக்தியாகவும், அன்பாகவும், அமைதியாகவும் வைப்பது நமது கடன். நல்ல எண்ணங்களாலும் தூய சிந்தனைகளாலும் மனம் பண்பட்டு பல ஆக்கமான காரியங்களைப் புரிகிறது.

எண்ணம் அசுர பலம் கொண்டது, இன்பம், துன்பம், நல்லது, கெட்டது, நண்பன், விரோதி, நன்மை, தீமை யாவும் மனதிலேயே உள்ளது. இவை மனிதனது எண்ணங்களாலேயே உருவாக்கப்படுகின்றது. அதுவே மனிதனின் வாழ்வையும் ஒழுக்கத்தையும், நற்பண்புகளையும் வாழ்வின் இறுதியையும் உருவாக்குகின்றது. எனவே சமுதாயத்தினரிடையே எண்ணங்களை தீயவழிகளில் சிதற விடாது பண்படுத்த வேண்டும். பேராசை சுயநலம், போட்டி, பொறாமை போன்ற தீய எண்ணங்கள் நமது எண்ணங்களை பாழாக்குகின்றன. இவற்றினால் ஞாபக மறதி, மனஅமைதி குறைகின்றது. வேண்டாத உலக ஆசைகள் எண்ணங்களைச் சீர்குலைக்கின்றன. ஆகவே வேண்டாத தீய எண்ணங்களை மனிதரிலிருந்து அகற்றி விட வேண்டும். அப்போது தான் ஒருவர் நலமாக, வளமாக, மனமகிழ்வாக சிறப்பாக வாழமுடியும். எனவே பலமிக்க எண்ணத்தினை நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றமான இலக்கினை நோக்கி மனிதமனத்தினைச் செலுத்தவேண்டும். எண்ணங்களை நல்ல வழியில், நல்ல சிந்தனையில் செலுத்தி இளைய சமுதாயம் ஒழுக்கமான சமுதாயமாக வாழவேண்டும் என்பதற்காக தியானங்கள் பெரிதும் உதவுகின்றன. இவ் எண்ணங்களின் படி வாழாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்து சமயம் தர்மங்களைக் கூறுகின்றது. தனிமனித தர்மம், சமூகதர்மம், குடும்ப தர்மம் என்பவற்றை கூறுகின்றது.

# பொருளடக்கம்

| | |
|---|---|
| திணைக்களச்செய்திகள் | 4 - 30 |
| திருக்கோயில் சித்திர வேலாயுதர் கோவில் | 31 |
| கவுணியர் கன்று செப்பிய சைவவிழுமியங்கள் | 32 - 40 |
| தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு | 41 - 44 |
| உருத்திராட்சம் | 45 - 49 |
| மட்டுநகர் ஸ்ரீ மாமங்கப்பிள்ளையார் கோயில் | 50 |
| விநாயகர் | 51 - 54 |
| இராஜாராம் மோகன்ராய் | 55 - 58 |
| இராமாயணம் புலப்படுத்தும் இந்து தெய்வீக வரலாற்று அம்சங்கள் | 59 - 63 |
| சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புக்கள் | 64 - 71 |
| தாய்த்தெய்வ வழிபாடு | 72 - 74 |

# சாசனவியற் பயிலரங்கு-2010

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆய்வுப்பிரிவின் செயற்பாடுகளாக வருடாந்தம் ஆய்வரங்கினை நடத்துதல் இந்துக் கலைக்களஞ்சியம் வெளியிடுதல், கிடைத்தற்கரிய நூல்கள் மறுபதிப்புச்செய்தல், ஆய்வரங்க நூல் வெளியிடுதல், ஆய்வரங்கு தொடர்பாக சிறப்பு மலர் வெளியிடுதல், கோபுரம், பண்பாடு ஆகிய பருவ இதழ்களை வெளியிடுதல், சாசனவியற் பயிலரங்கு, இந்துக்கட்டடக்கலை, சிற்பக்கலை தொடர்பான பயிலரங்கு ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வகையில் 06.07.2010 ஆம் திகதி தொடக்கம் 15.07.2010 ஆம் திகதி வரை திணைக்களக்கேட்போர் கூடத்தில் சாசனவியல் தொடர்பான பயிலரங்கு நடைபெற்றது.



இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப்பல்கலைக்கழகம், தென்கிழக்குப்பல் கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சார்ந்த இந்து நாகரிகம், தமிழ், வரலாற்றுத்துறை, தொல்லியற்துறை ஆகியவற்றைச் சார்ந்த மாணவர்கள் பங்குபற்றினர். இப்பயிலரங்கு திணைக்கள ஆய்வுப் பிரிவின் ஆலோசகரான தலைவர் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களாலும், இந்திய தொல்லியற்துறைப் பேராசிரியர்களான முனைவர் வெ. வேதாசலம், முனைவர் இராஜகோபால் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் ஆகியோரால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப்பயிலரங்கின் மூலமாக மாணவர்கள் சாசனம் பற்றிய விரிவான அடிப்படையைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு அவர்களால் கல்வெட்டுக்களை வாசித்தல், படியெடுத்தல் ஆகிய செயற்பாடுகளை செய்யவும் முடிகின்றது. இப்பயிலரங்கில் 60 பல்கலைக்கழக மாணவர்களும், 3 விரிவுரையாளர்களும் இப்பயிலரங்கில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். 10 தினங்கள் நடைபெற்ற இப் பயிலரங்கின் பாடத்திட்டங்கள் தமிழ், பிராமி, அசோகபிராமி, வட்டெழுத்துக்கள், கிரந்த எழுத்துக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.



இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்கள் இறுதி நாளன்று பரீட்சை யொன்றுக்குத் தோற்றினர். இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர் களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் அமைச்சின் செயலாளர் திரு. டி டபிள்யு டி. ஜெயதிலக்க அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கான

சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்கள் இப்பயிற்சி நெறி தமக்கு பயனுடையதாக அமைந்திருந்ததாகவும் இது காலம் கருதிய செயற்பாடு எனவும் புகழாரம் சூட்டினார்.

## இந்து சமய ஆய்வரங்கு.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தனது ஆய்வுப்பிரிவின் செயற்பாடுகளுள் ஒன்றாக வருடாந்தம் இந்து சமய தமிழ் இலக்கிய ஆய்வரங்கினை நடத்தி வருகின்றது. இவ் ஆய்வரங்குகள் இந்து சமயம், பண்பாடு. தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வேறு விடயங்களை பல்வகைப்பட்ட பரிணாம நோக்கில் ஆராயும் வகையில் அமைகின்றன.



1992ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இவ் ஆய்வரங்குத் தொடரில் இவ் வருடம் **"அறநெறிக்காலமும் தமிழகப்பண்பாட்டு மரபுகளும்"** என்னும் தலைப்பில் ஆய்வரங்கு நடைபெற்றது. இவ்வாய்வரங்கு செப்ரம்பர் மாதம் 23,23,24,25,26 ஆகிய தினங்களில் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. திணைக்களத்தின் ஆய்வுகள் வரலாற்றுத்தறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையிலேயே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஆய்வரங்கின் தொடக்க வைபவ நிகழ்ச்சி 22.10.2010 ஆம் திகதி அன்று நடைபெற்றது. இத்தொடக்க வைபவ நிகழ்வினை பிரதம விருந்தினரான புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் மாண்புமிகு எம். கே. ஏ. டி. எஸ் குணவர்த்தனா அவர்கள் சம்பிரதாய பூர்வமாக மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.



இவ் வைபத்தில் சிறப்பு விருந்தினர்களாக மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு.எச் .பி. கசியன் ஹேரத் கிழக்குப்பல்கலைக்கழக த்துணைவேந்தர் பேராசிரியர் கே. பிரேம்குமார், பேராசிரியர் வி. விஜயவேணுகோபால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. ம.செந்தூரனின் தேவாரத்துடன் ஆரம்பமா கிய ஆய்வரங்கில் அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களின் ஆசியுரையும் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசனின் தொடக்கவுரையையும் போராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையுரையும்

புத்தசாசன மத அலுவல்கள் பிரதி அமைச்சர் மாண்புமிகு எம்.கே. டி. எஸ். குணவர்த்தனா அவர்களின் பிரதமவிருந்தினர் உரையும் அமைச்சின் செயலாளர், துணைவேந்தர் கே.பிரேம்குமார் ஆகியோரின் சிறப்புரைகள், பேராசிரியர் வி.விஜயவேணுகோபால் அவர்களின் ஆராதசுருதியுரை, கலாநிதி எஸ். இராஜவேலுஅவர்களின் நூல்வெளியீட்டுரை, ஆராய்ச்சி அலுவலர் திருமதி தேவகுமாரி ஹரன் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றன.



இவ்வாய்வரங்கில் தென் இந்திய பேராளர்களான கலாநிதி சொ. சாந்தலிங்கம் கலாநிதி வெ. வேதாசலம், பேராசிரியர் கே.இராஜன், பேராசிரியர் வி.விஜயவேணுகோபால், போராசிரியர் சு. வெங்கடராமன், கலாநிதி எஸ். இராஜவேலு, பேராசிரியர் பழமுத்துவீரப்பன் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.




இலங்கை அறிஞர்களில் பேராசிரியர் சி. பத்மநாதன் கலாநிதி கிருஷ்ணவேணி, நோபேர்ட், கலாநிதி எம். வேதநாதன், கலாநிதி வ. மகேஸ்வரன் கலாநிதி துரை மனோகரன் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஜயர், திருமதி நாச்சியார் செல்வநாயகம், திரு.எஸ். துஷ்யந், திரு.க இரகுபரன், திருமதி வசந்தா வைத்தியநாதன், திரு.இ.குமரன். திருமதி. ரூபி வலன்ரினா, கலாநிதி எ.ஸ். செல்வரஞ்சிதம், திருமதி விக்னேஸ்வரி பவனேசன். திருமதி எம். நதீரா, பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சிவலிங்கராஜா பேராசிரியர் எஸ். மௌனகுரு, திரு. ரி.சி.இராஜேந்திரம் திரு. ஸ்ரீ. பிரசாந்தன்,திரு எஸ். முகுந்தன், திரு எம். ரூபவதனன், திரு தம்மிக்க ஜெயசிங்க, கலாநிதி செ. யோகராசா, பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் திருமதி சாந்தி கேசவன், திருமதி சுகந்தினி ஸ்ரீதரன், செல்வி எஸ். செல்வகுமாரி ஆகியோரும் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.



இவ் வாய்வரங்கில் கிழக்கு, தென்கிழக்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழகங்களிலிருந்தும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலிருந்தும், கொழும்பு, வவுனியா மாவட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி பாடசாலை மாணவர்கள் பலரும் இவ் ஆய்வரங்கில் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## விஜய நகரப்பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

சென்ற வருடம் நடைபெற்ற விஜய நகரப்பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் என்னும் தலைப்பில் நடைபெற்ற ஆய்வரங்கின் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புக்கள் நூலுருவாக்கம் பெற்று இவ்வருட ஆய்வரங்கின் தொடக்க வைபவத்தில் கௌரவ எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன அவர்களினால் பேராசிரியர் பழமுத்துவீரப்பனிடம் கையளித்து வெளியீடு செய்து வைக்கப்பட்டது.




இந்நூலானது அரசும் சமூகமும், சமயமும் தத்துவமும், மொழியும் இலக்கியமும், கோயிலும் கலைகளும் என்னும் தலைப்புகளில் 45 கட்டுரைகளைத் தாங்கி அழகிய வர்ணப் படங்களுடன் 625 பக்கங்கள் கொண்டதாக வெளிவந்துள்ளது. திணைக்கள வெளியீடான இந்நூலின் விலை ரூபா 500 ஆகும்.

## சிறப்பு மலர்

அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும் ஆய்வரங்கு தொடர்பாக சிறப்பு மலர் ஒன்று திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.



இச்சிறப்பு மலர் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், இன்னாநாற்பது, கார்நாற்பது, பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை, சிலப்பதிகாரம், மணிமேகலை காவியங்கள், சிலப்பதிகார ஆய்வுரை, களப்பிரர், நீதியும் அறமும், நீதிஇலக்கியத்தின் இயல்புகள், தமிழ்மொழியில் நீதி இலக்கியம், இனியவை நாற்பது என்னும் பல கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந் நூல் திணைக்களத்தின் இலவச வெளியீடாகும்.

## பண்பாடு

2010ஆம் ஆண்டு பண்பாடு மலர் 19 இதழ் - 02 வெளிவந்துள்ளது. இப் பண்பாடு மலரில் பல்வேறு பட்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது:




* ஈழத்து தமிழ் இலக்கியங்களில் இராமாயணம், மகாபாரத செல்வாக்கு.
* இந்து சமய இலக் கியங்களிலும் இந்து சமய தத்துவங்களிலும்பிரபஞ்சம் ஓர் அறிமுகம்.
* திருக்கரைசைபுராணம் பகரும் சைவசித்தாந்த மெய்யியற் சிந்தனைகள் ஒரு நோக்கு.
* தொல்காப்பிய பதிப்பு வரலாற்றில் ஈழத்து அறிஞர்கள்.
* தமிழகத்தில் சோழராட்சிக்கால முடிவுவரை இசைக்கலை வளர்ச்சி.

இவ்விதழைப் பெற்றுக்கொள்ள விரும்புவர்கள் ரூபா 25 பெறுமதியான முத்திரை யொட்டப்பட் சுயமுகவரியுடைய கடித உறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

## உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து நூல் கொள்வனவு.

இலங்கை எழுத்தாளர்களை ஊக்கிவிக்கும் முகமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து நூல்களை கொள்வனவு செய்து வருகின்றது. 2010ஆம் ஆண்டிற்காக 45 எழுத்தாளர்களிடமிருந்து 1274 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

***சைவசித்தாந்த வகுப்பு:-*** இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்படும் சைவசித்தாந்த வகுப்பு டிசம்பர்

மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை நடாத்தப்படும். இவ் வகுப்பின் விரிவுரைகளை தமிழ்நாடு திருவிடைமருதூர் சைவசித்தாந்த பயிற்சிமைய ஆதீனப் புலவர் பேராசிரியர் சு. குஞ்சிதபாதம் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். இவ் வகுப்புக்கள் தினமும் காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையிலும் மாலை நேர வகுப்புக்கள் தினமும் பிற்பகல் 3.00மணி தொடக்கம் 5.30மணி வரையிலும் நடாத்தப்படவுள்ளன.

## நவராத்திரி விழா

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த தேசிய நவராத்திரி விழாவானது மொனராகலை மாவட்டத்தில் விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலயத்தில் 16.10.2010 ஆம் திகதியன்று மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.



திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. ய. அருநித்தனன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதமவிருந்தினராக கௌரவ சுமேதா. ஜி. ஜெயசேன (பாராளுமன்ற விவகார அமைச்சர்) அவர்கள் கலந்து கொண்டார்.போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.



கல்லூரி மாணவர்களுடைய நடனம், பேச்சு, பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் மொனராகலை மாவட்ட பாடசாலைகளில் நடாத்தப்பெற்ற போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

## திணைக்கள நவராத்திரி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடம் தோறும் அலுவலகத்தில் நவராத்திரி பூசையினை நடாத்தி வருகின்றது. அவ்வகையில் இவ்வருடமும் ஒன்பது நாட்களும் காலை 9.00 மணிக்கு பூசைகள் நடைபெற்று பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

## பாராளுமன்றத்தில் நவராத்திரி விழா

இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் பாராளுமன்றத்தில் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் அநுசரணையுடன் ஒக்டோபர் மாதம் 08ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் பாராளுமன்ற முன்றலில் மங்கள இசையுடன் கலைமகள் விழா ஆரம்பமாகியது.





சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், மற்றும் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. கசியன் ஹேரத், மேலதிகச் செயலாளர், பிரதம கணக்காளர், அமைச்சு அலுவலர்கள், மற்றும் எமது திணைக்களப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள், கணக்காளர், திணைக்கள அலுவலர்கள், பாராளுமன்ற அலுவலர்கள், இந்துக்குருமார்கள், சமய அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





மூன்று தேவியர்களுக்கும் விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நடனநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## மாவட்டங்கள் தோறும் நவராத்திரி


திணைக்களத்தின் அநுசரணையுடன் மாவட்டங்கள் தோறும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, பதுளை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற நவராத்திரி புகைப்படங்கள் சில

**திருகோணமலை**





**பதுளை**



யாழ்ப்பாணம்






## மட்டக்களப்பு நாவற்குடா கலாசார மண்டபத்தில் நவராத்திரி விழா

மட்டக்களப்பு இந்து கலாசார நிலையத்தில் நவராத்திரி நிகழ்வுகள் 10 நாட்களும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.





முதலாம் நாள் கும்பம் வைத்தல், பூசை நிகழ்வுகள் சிவஸ்ரீ விஜயகுமார் குருக்கள் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலாம் நாள் பூசை நிகழ்வுகளின் போது நாவற்குடா விவேகானந்தா அறநெறிப்பாடசாலை ,கல்லடி முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, வேலூர் பத்திரகாளியம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருடன் இந்து கலாசார நிலையத்தில் பரதநாட்டியம் பயிலும் மாணவர்களும் ஆசிரியரும் கலந்து கொண்டனர்.



ஒவ்வொரு நாட் பூசை நிகழ்வுகளின் போதும் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, ஆன்மீக சொற்பொழிவு என்பன நடைபெற்றன, பி.ப 3.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி பி.ப 5.30 மணிவரை நடைபெற்றது. நவராத்திரி தின பூசை நிகழ்வுகளின் போது பின்வரும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். கல்லடி முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, கல்லடி பாலவிநாயகர் அறநெறிப்பாடசாலை, கல்லடி பத்திரகாளியம்மன் அறநெறிப்பாடசாலை, மட்டக்களப்புஅர்த்தநாரீஸ்வர்அறநெறிப்பாடசாலை, மட்டக்களப்பு நாகதம்பிரான் அறநெறிப்பாட சாலை, பெரிய ஊறணி இந்து இளைஞர் மன்ற


கொழும்புத் தமிழ்ச் சங்கம்

அறநெறிப்பாடசாலை, நாவற்குடா விவேகானந்தா அறநெறிப்பாடசாலை ஆகியோருடன் இந்து கலாசார நிலையத்தில் பரதநாட்டியம் பயிலும் மாணவர்களும் தினமும் நடைபெற்ற பூசைகளில் கலந்து கொண்டனர்.



16.10.2010 அன்று மு.ப 8.00 மணிக்கு பூசை நடைபெற்றது. பூசையினைத் தொடர்ந்து முதல் நிகழ்வாக இந்து கலாசார நிலைய பரதநாட்டிய கலையக மாணவர்களின் வரவேற்பு நடனமும், ஏனைய நிகழ்வுகளும் இடம்பெற்றன. கலை நிகழ்வுகளினிடையே புலவர் திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம் அவர்களினாலும், சிவத்தொண்டர் ஞானமுத்து பேரின்பம் அவர்களினாலும் ஆன்மீக சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. ஏழு நடனங்களும், ஆறுமுகத்தான் குடியிருப்புவாணி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் தாளலயமும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இந்து இளைஞர் பேரவை தலைவருமான கௌரவ திரு. சீ. யோகேஸ்வரன் அவர்களால் நவராத்திரியின் சிறப்புபற்றி சொற்பொழிவு ஆற்றப்பட்டது. 16.10.2010ஆம் திகதி அன்று நடைபெற்ற நிகழ்வுகள் பி.ப 1.30 மணியளவில் இனிது நிறைவடைந்தது.



17.10.2010 அன்று விஜயதசமி அன்று மு.ப 8.30 மணிக்கு பூசை ஆரம்பமானது. பூசையின் போது 4 மாணவர்களுக்கு வித்யாரம்பம் செய்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நவதானியம் அறுவடை செய்து, கும்பம் சொரிதல் நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய நிகழ்வில் இந்து கலாசார நிலையத்திற்கருகிலுள்ள பாலர்பாடசாலை மாணவர்கள், பெற்றோர், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விஜயதசமி பூசை நிகழ்வுகள் மு.ப 11.45 மணியளவில் இனிது நிறைவடைந்தது.


# இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக எழுச்சிப்பட்டறை

இந்து இளைஞர்,யுவதிகளுக்கு ஆன்மீக, உளவள பயிற்சிகளை வழங்கும்முகமாக ஆன்மீகஎழுச்சிப்பட்டறை ஒன்றை வருடாந்தம் ஒழுங்கு செய்து நடாத்துகின்றது. அப் பயிற்சிப்பட்டறை இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரை மண்டபத்தில் ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது. இன் ஆன்மீக எழுச்சிப்பட்டறையில் 18 வயது தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட இந்து இளைஞர்கள், யுவதிகள் 200 பேர் பயிற்சி பெற்றனர். இப் பயிற்சிப் பட்டறையானது ஏழுநாள் வதிவிடப் பயிற்சியாக இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நடைபெற்றது. இப் பயிற்சி நெறியினை வழங்குவதற்காகவிந்து சேவா சங்கத்தினைச் சார்ந்த நன்கு பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சியாளர்களான திரு. இராதாகிருஷ்ணன், சுவாமி விக்ஞானந்தா ஆகியோர் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்தனர். இப்பயிற்சிப் பட்டறையானது உடல், அறிவு, மனம், என்னும் மூன்றிற்கும் பயிற்சி கொடுக்கும் முகமாக ஆன்மீக உரைகள், தலைமைத்துவப் பயிற்சி, யோகாசனம், தியானம், விளையாட்டு, கட்டுப்பாட்டுப் பயிற்சி போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டதாக அமைந்திருந்தது.

இப் பயிற்சிப்பட்டறையின் முடிவில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, உணவு, தங்குமிடவசதிகள் போன்ற இதர வசதிகளும் பயிலாளர்களுக்கு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.









## குருபூசை

### கம்பஹா மாவட்டம்

**திருஞானசம்பந்தர் குரு பூசை**

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மண்டபத்தில் 30.05.2010 ஆம் திகதியன்று திருஞானசம்பந்தர் குருபூசை வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. விசேட பூசை, மங்கள விளக்கேற்றல், தேவாரத்துடன் ஆரம்பமாகிய இக்குருபூசை நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இவ்வாலயத்தின் காப்பாளர் திரு.கே தமிழ்வாணன் அவர்கள் கலந்து கொண்டார்.

இக்குருபூசை நிகழ்வினை ஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆசியுரையுடன் இனிதே ஆரம்பித்து வைத்தார் திணைக்களத்தின் சார்பில் திருமதி கே. நிர்மலா கருணானந்தராஜா வரவேற்புரையையும் சமய சொற்பொழிவுகளை கலாபூஷணம் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் **"தமிழ்ஞானசம்பந்தர்"** என்னும் தலைப்பிலும், திருவாவடுதுறை சமயபரப்புனரும் சைவநீதியின் ஆசிரியருமான திரு நவநீதகுமார் **"மூல இலக்கியங்கள்"** என்னும் தலைப்பிலும், நிகழ்த்தினர். இச் சொற்பொழிவுகளுடன் அறநெறிப்பாடசாலை மாணவர்களது நடனம், பஜனை, பக்திப்பாடல், பேச்சு போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இக்குருபூசை நிகழ்வில் வத்தளை நகரைச் சார்ந்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சமய ஆர்வலர்கள், அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### கொழும்பு மாவட்டம்

**சேக்கிழார் குருபூசை**

கொழும்பு மாவட்டத்தில் முகத்துவாரம் இந்துக் கல்லூரியில் 23.05.2010 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சேக்கிழார் குருபூசை வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விசேட பூசை, மங்களவிளக்கேற்றல், தேவாரம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்ச்சி திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்த ராஜாவின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் வடகொழும்பு இந்து பரிபாலனசபைச் செயலாளர் திரு. எஸ். செல்வரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையை நிகழ்த்தினார்.

இக்குருபூசை நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளும், சமய சொற்பொழிவுகளும், நடனம், பஜனை, பக்திப்பாடல்கள், பேச்சு என்பனவும் இடம்பெற்றன. "சேக்கிழார் காட்டும் வாழ்க்கை நெறி" என்னும் தலைப்பில் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்நாயகம் கலாபூஷணம் திரு. குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்களும், "வாகீசர்வாக்குவளம்" என்னும் தலைப்பில் திருவாவடுதுறை ஆதீன சமயபரப்புனர் திரு. சி. நவநீதகுமார் ஆகியோரும் சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சமய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அம்பாறை மாவட்டம்.

**சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை :-**

அம்பாறை மாட்டத்தில் பாண்டிருப்பு மகாவிஷ்ணு ஆலயம், விஷ்ணு அறநெறி பாடசாலை ஆகியோர் இணைந்து இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 15.08.2010 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையினை வெகு சிறப்பாகக் கொண்டாடினர். திருமுறை ஓதுதல், விசேடபூசை ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய இக்குருபூசை நிகழ்வில் சமயச் சொற்பொழிவுகளும், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், பஜனை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன. சுந்தர

மூர்த்தி நாயனார் குருபூசையையொட்டி இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

**மாணிக்கவாசகர் குருபூசை :-**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பொத்துவில் சாலயம்பாடி பிள்ளையார் ஆலய நிர்வாகம் அறநெறிப்பாடசாலை பொத்துவில் சாலையடிப்பிள்ளையார், பொத்துவில் ஊறணி விநாயகர் அறநெறிப்பாடசாலை ஆகியன இணைந்து மாணிக்கவாசகர் குருபூசையினை 18.07.2010 ஆம் திகதியன்று சிறப்பான முறையில் கொண்டாடினர்.

விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகிய இக்குருபூசை கலாசார உத்தியோகத்தர் திரு. குணநாயகம் தலைமையில் நடைபெற்றது. இக் குருபூசை நிகழ்ச்சிகளாக சமய சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## சிலாபம் மாவட்டம்

**திருஞானசம்பந்தர் குருபூசை**

புத்தளம் மாவட்டத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை 30.05.2010 ஆம் திகதியன்று முன்னேஸ்வரம் வடிவாம்பிகை தமிழ் மகாவித்தியாலயத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முன்னேஸ்வரம் தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் திருமுறை ஓதுதலுடன் ஆரம்பமாகிய குருபூசை நிகழ்ச்சியில் தொடக்கவுரையை முன்னேஸ்வரம் தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. பி. பத்மநாபசர்மா அவர்களும், ஆசியுரையை சிவஸ்ரீ. நடராஜக்குருக்கள் அவர்களும் நிகழ்த்தினர். இக்குருபூசை நிகழ்ச்சியில் **"திருஞானசம்பந்தநாயனாரின் வாழ்க்கை வரலாறும் அற்புதங்களும்"** என்னும் தலைப்பில் அறநெறிப்பாடசாலை மாணவன் போதிராஜசர்மாவின் சமயப் பேச்சும், பஜனைப்பாடல்களும் நடைபெற்றன. இக் குருபூசை நிகழ்ச்சிகள் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி விமலரஞ்சினி தலைமையில் நடைபெற்றன.

**மாணிக்கவாசகர் குருபூசை :-**

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களமும், இந்து அறநெறிக்கழகத்தினரும் இணைந்து 15.07.2010 ஆம் திகதியன்று மாணிக்கவாசகர் குருபூசையினை உடப்பூர் ஆண்டாள் அறநெறிப்பாடசாலையில் கொண்டாடினர். இக்குருபூசை வைபவத்தில் ஆண்டிமுனை இராமகிருஷ்ண அறநெறிப்பாடசாலை, உடப்பூர் கோகிலம் அறநெறிப்பாடசாலை, உடப்பூர் திருமூலர் அறநெறிப்பாடசாலை, ஆகிய இந்து அறநெறிப் பாடசாலையினைச் சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

உடப்பூர் திரௌபதி அம்மன் ஆலயத்திலிருந்து மணிவாசகப் பெருமானின் திருவுருவப்படம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருவாசக முற்றோதுதலுடன் ஊர்வலமாக வைபவம் நடைபெறும் இடத்திற்கு எடுத்துவரப்பட்டு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இக் குருபூசையில் திரு.எஸ் சண்முகநாதன் அவர்களின் **"திருவாசகம் என்னும் தேன்"**. திரு வி. நடராஜா அவர்களின் **"மாணிக்கவாசக சுவாமிகள்"** என்னும் சமய சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இராமகிருஷ்ண அறநெறிப்பாடசாலை மாணவர்களின் **"பிட்டிற்கு மண் சுமந்த கதை"**, குழு பஜனை, நடனம், ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்

பெற்றன. இக் குருபூசை நிகழ்வுகள் ஆண்டாள் அறநெறிப்பாடசாலையின் ஆசிரியர் திரு. ச. முருகானந்தம் தலைமையில் நடைபெற்றன.

### சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

சிலாபத்தில் குசலை ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலையில் 15.08.2010 ஆம் திகதியன்று சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுந்தர மூர்த்தி நாயனாரின் திருவுருவப்படத்திற்கு பூசை அநுஷ்டானங்கள் மேற்கொள்ளப்பட்டு திருமுறைப்பண்ணிசையோடு ஆலயத்தினைச் சுற்றி ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

இக்குருபூசை வைபவத்தில் ஆலயக்குருக்களின் ஆசியுரையும், அறநெறிப்பாடசாலையின் அதிபர் திரு. வ. நாகராசாவின் வரவேற்புரையும் இடம்பெற்றன. **"சுந்தரமூர்த்தி நாயனார்" "ஏழாம் திருமுறை"** என்னும் தலைப்புக்களில் சமய சொற்பொழிவுகளும் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## கண்டி மாவட்டம்

### சேக்கிழார் குருபூசை

கண்டி மாவட்டத்தில் சேக்கிழார் குருபூசை 13.06.2010 ஆம் திகதியன்று புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி மண்டபத்தில் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இக் குருபூசை வைபவத்தில் புசல்லாவை விபுலானந்தர் அறநெறிப்பாடசாலை அதிபர் திரு. ஜி.கே. இராஜேந்திரன் பிரதம அதிதியாகவும் திரு. விக்டர், திருமதி சரஸ்வதி, திரு. கணேசன், திருமதி பிரியதர்ஷினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இவ் வைபவ நிகழ்வுகளாக வரவேற்புரை, நடனம், பேச்சு, குழுப்பாடல், சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், அதிதிகள், கௌரவம், அறநெறிப்பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### திருஞான சம்பந்தர் குருபூசை

கண்டி மாவட்டத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை 27.06.2010ஆம் திகதியன்று கலஹா ஸ்ரீ இராமகிருஷ்ணா அறநெறிப்பாடசாலையில் திணைக்களத்தின் அநுசரணையுடன் நடைபெற்றது. இப்பாடசாலையின் அதிபர் இக் குருபூசை நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இக் குருபூசை நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், பஞ்சாட்சர செபம், திருமுறை ஓதுதல், வரவேற்புரை, ஆசியுரை, தலைமையுரை, பஜனை, சமயப்பேச்சு, குழுநடனம், அதிதிகள் கௌரவிப்பு போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### மூர்த்திநாயனார் குருபூசை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அநுசரணையுடன் நாவலப்பிட்டி கதிர்வேலாயுத அறநெறிப்பாடசாலையில் 07.08.2010ஆம் திகதி அன்று மூர்த்தி நாயனார் குருபூசை மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனெந்தலெட்சுமி தலைமையில் நடைபெற்ற இக்குருபூசை விழாவில் நாவலப்பிட்டி கதிர்வேலாயுதசுவாமி கோயில் ஆலயத்தலைவர் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்.

அறநெறிப்பாட சாலைகளிடையே கட்டுரை, பேச்சு, நடனம், வில்லிசை ஆகியவற்றில் போட்டிகள் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் பாரதி அறநெறி, பெரிநவநாதச்சித்தர், திருவள்ளுவர் அறநெறிப்பாடசாலைகள் கலந்து கொண்டன. இவ் விழாவில் மங்கள விளக்கேற்றல் குருபூசை, திருமுறை ஓதுதல், வரவேற்புரை, ஆசியுரை, தலைமையுரை, சொற்பொழிவு, அதிதிகள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கலிகாம நாயனார் குருபூசை:

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அநுசரணையுடன் கலிகாமநாயனார் குருபூசை கண்டி மாவட்டத்தில் 08.08.2010 ஆம் திகதியன்று கண்டி இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாட சாலையில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மா. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெற்ற குருபூசை நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. இக் குருபூசை நிகழ்வில் சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.


## சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களமும் நித்தவெல விவேகானந்தர் அறநெறிப்பாடசாலையினரும் இணைந்து நடாத்திய சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை கண்டி கலைமகள் தமிழ் மகாவித்தியாலயத்தில் 04.08.2010 ஆம் திகதியன்று நடைபெற்றது. கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற இக் குருபூசை நிகழ்வில் பல கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

# மட்டக்களப்பு மாவட்டம்

## சேக்கிழார் குருபூசை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு சேக்கிழார் அறநெறிப் பாடசாலை ஆகியன இணைந்து சேக்கிழார் குருபூசையை 30.05.2010 ஆம் திகதி அன்று வாழைச்சேனையில் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். சேக்கிழார் அறநெறிப்பாடசாலையின் அதிபர் திரு வை. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் குருபூசை நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. சீ யோகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



இவ்விழாவில் பல சிறப்பு அதிதிகளும், கௌரவ அதிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சுக்கள், திருமுறைஓதுதல், சிறப்புரை, நடனம், ஆன்மீக கட்டுரைப் போட்டி என்பனவும் இடம் பெற்றன.



பொதுமக்கள், ஆர்வலர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

### மாணிக்கவாசகர் குருபூசை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவற்குடா கலாசார மண்டபத்தில் 14.07.2010 ஆம் திகதியன்று மாணிக்கவாசகர் குருபூசை மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எழில்வாணி பத்மகுமார் தலைமையில் நடைபெற்றது. இக்குருபூசை விழாவில் மாணிக்கவாசகரின் திருவுருவப்படத்திற்கு பூசை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விவேகானந்தர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை மாணவனின் **"மாணிக்கவாசகர்"** என்னும் சமயப்பேச்சு, அதிபர் வே. வி. சிங்கம்ஜெயரட்ணம் அவர்களின் ஆன்மீக சொற்பொழிவு அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஜனை என்பன இடம்பெற்றன. 18.07.2010ஆம் திகதியன்று பெரியகல்லாறு மண்டபத்தடி அறநெறிப்பாடசாலையிலும் இக்குருபூசை அனுட்டிக்கப்பட்டது.

### இளையான் குடிமாறநாயனார் குருபூசை

இளையான் குடிமாறநாயனார் குருபூசை 07.09.2010ஆம் திகதியன்று குமாரபுரம் ஸ்ரீ பழனி-முருகன் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. மேற்படி நிகழ்வில் பஜனை, ஆன்மீக சொற்பொழிவு, பேச்சு, விசேட பூசைகள் என்பன நடைபெற்றன. மருங்கை நகர் நாகதம்பிரான் அறநெறிப்பாடசாலையிலும் 12.09.2010 ஆம் திகதியன்று இக்குருபூசை அனுட்டிக்கப்பட்டது.

### பட்டினத்தடிகள் குருபூசை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாங்காடு மலைமகள் அறநெறிப் பாடசாலையில் பட்டினத்தடிகள் குருபூசை நடைபெற்றது. இக்குருபூசை நிகழ்வுகள் இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வமலர் தலைமையில் நடைபெற்றது. திரு. குணரத்தினம் அவர்களின் **"பட்டினத்தடிகளின் வாழ்க்கை வரலாறு"** என்னும் சிறப்பு சொற்பொழிவு இடம்பெற்றது.

### சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை முனைக்காடு இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலையில் நடைபெற்றது. இக்குருபூசை நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட சமய சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

### மறைஞான சம்பந்தர் குருபூசை

கல்லாறு சித்திவிநாயகர் ஆலயத்தில் 10.09.2010ஆம் திகதியன்று திணைக்களத்தின் அநுசரணையுடன் மறைஞானசம்பந்தர் குருபூசை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. திரு. ஆறுமுகம் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும் மாணவர்களது சமயப்பேச்சும் இந் நிகழ்வில் இடம்பெற்றன.

## வவுனியா மாவட்டம்

### மாணிக்கவாசகர் குருபூசை

வவுனியா தாண்டிக்குளம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய அறநெறிப்பாடசாலையில் 27.06.2010ஆம் திகதியன்று மாணிக்கவாசகர் குருபூசை கொண்டாடப்பட்டது.



இக்குருபூசை நிகழ்வில் முதல் நிகழ்வாக ஆலய சிவாச்சாரியாரினால் மாணிக்கவாசக நாயனார் திருவுருவப்படத்திற்கு தீபாராதனை காட்டப்பட்டு விழா ஆரம்பமாகியது.



மங்கள விளக்கேற்றல், பஞ்சபுராணம், அறநெறி-கீதம் ஆகியவற்றுடன் வரவேற்புரை, ஆசியுரை, பிரதமஅதிதிகள் உரை, கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றதுடன் பண்டிதை யோகா சோமசுந்தரம் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றது. இவ்விழாவில் இந்துப் பொதுமக்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.


### கலிகாம நாயனார்.

வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பக அறநெறிப் பாடசாலையில் கலிகாம நாயனார் குருபூசை 18.06.2010 ஆம் திகதியன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆலய சிவாசாரியார்களால் திருவுருவப்படத்திற்கு தீபாராதனை காட்டப்பட்டு விழா ஆரம்பமானது. பின்னர் அதிதிகளால் மங்கள விளக்கேற்றப்பட்டு மாணவர்களினால் பஞ்ச புராணம், அறநெறிக்கீதம் என்பன இசைக்கப்பட்டன. சிவஸ்ரீ முத்துஜெய ந்திநாதக்குருக்களின் ஆசியுரையும் வைத்திய கலாநிதி க. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையுரையும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தமிழ்மணி அகளங்கன் அவர்கள் கலந்து கொண்டார். இக்குருபூசை நிகழ்வில் செல்வி யோகா சோமசுந்தரம் ஆன்மீகம் அறநெறி சார்பான பல கருத்துக்களையும் எடுத்துக்கூறினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## புண்ணிய கிராமசெயலமர்வு

### பதுளை மாவட்டம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமய நம்பிக்கைகளையும் பாரம்பரியங்களையும் பேணும் பொருட்டு பல்வேறு செயற்பாடுகளை மாவட்டம் தோறும் செயற்படுத்தி வருகிறது. இதன் ஓர் அம்சமாக 2010ஆம் ஆண்டிற்கான புண்ணிய கிராமிய செயலமர்வு புளத்கொடுப்பிட்டிய நகருக்கு அருகாமையில் அமைந்த பசுமை சிறக்கும் லெவலை தோட்டத்தில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் லெவலை கீழ்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் புரட்டாதி மாதம் 19ஆம் திகதி அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.



இச் செயலமர்விற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. யஅநிருத்தனன் அவர்கள் தலைமையேற்றார். இச் செயலமர்வில் இராமகிருஷ்ண சாரதாமிஷன் மாதாஜீ வணக்கத்திற்குரிய பிரௌராஜிக அம்மா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அருள்மொழி அரசி, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

புளத்கொகுப்பிட்டிய பிரதேசத்திற்கு உட்பட்ட எதுராபொல தண்ணிமலை, யட்டதேரிய, மாத்தளை ரங்கல்ல ஆகிய தோட்டங்களில் இருந்து ஆன்மீக ஊர்வலங்கள் விழா

நடைபெறும் ஆலயத்தை நோக்கி வந்தடைந்தன. அத்தோடு பல பாடசாலைகளும் இவ் விழாவில் பங்கேற்றதுடன் லெவலை ஸ்ரீ வாணி அறநெறி பாடசாலை, வரக்காபொல ஸ்ரீ காளியம்பாள், அறநெறிப்பாடசாலை ஆகிய பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.



இவ்விழாவில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டமையோடு கொட்டும் மழையிலும் விட்டுப் போகாது விழா முடியும் வரையிலும் கண்டுகளித்தமை விசேடமாக குறிப்பிடத்தக்கது.



இவ்விழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட சமயம் சார்ந்த போட்டிகளுக்கான பரிசில்களும்,சான்றிதழ்களும் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்டன.

## மொனராகல மாவட்டம்.

மொனராகலை மாவட்டத்தில் தேசத்திற்கு மகுடம் என்னும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அலியாவத்த கும்புக்கன் ஆகிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இச் செயற்திட்டச் செயலமர்வு 9.10.2010, 10.10.2010 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. இச் செயலமர்வில் சமய சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்துடன் பாரம்பரியங்களைப் புரிந்து கொள்ளுதல் தொடர்பான விழிப்புணர்வுச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

## வவுனியா மாவட்டம்

வவுனியா மாவட்டத்தில் 26.06.2010 ஆம் திகதியன்று நெடுங்கேணி புதுவிளாங்கேஸ்வரர் ஆலயத்தில் இச் செயலமர்வு நடைபெற்றது. பஞ்சபுராணத்துடன் ஆரம்பமாகிய இச் செயலமர்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் திரு. க. பரந்தாமன் அவர்களும் கௌரவ விருந்தினராக திருமதி செ. விஜிதா (கலாசார உத்தியோகத்தர்) திருமதி ஜெ.தட்சாயினி (கலாசார அபிவிருத்தி உதவியாளர்) திருமதி உ. பிரதீபா (கிராமஅலுவலர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வின் வரவேற்புரையை ஆலயத்தின் பரிபாலன சபைச்செயலாளர் திரு.ச.தணிகாசலம் அவர்களும், ஆசியுரையை சிவஸ்ரீ சிவகுருநாதக்குருக்களும், (ஆலய பிரதமகுரு) நிகழ்த்தினர். இச் செயலமர்வின் முதல் நிகழ்வாக தியான பயிற்சி நடைபெற்றது. இச் செயலமர்வில் பண்டிதை செல்வி யோகா சோமசுந்தரம் அவர்களின் **"தீதும் நன்றும் பிறர் தரவாரா"**, தமிழருவி சிவகுமாரன் அவர்களின் **"வையத்துள் வாழ்ங்கு வாழ்வோர்"**

திரு. சுதேஸ்வரன் அவர்களின் **"அன்பே சிவம்"**, திரு. ச. நித்தியானந்தன் அவர்களின் **"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்னும் தலைப்புக்களில் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இச் சிறப்புச சொற்பொழிவுகளுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இச்செயலமர்வில் பெரும்பாலான கிராம மக்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இந்துமன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கண்டி மாவட்டம்

கண்டி மாவட்டத்தில் பன்வில சைவமகா சபையினர் திணைக்களத்தின் அநுசரணையுடன் 15.08.2010 ஆம் திகதியன்று பன்வில தமிழ் மகாவித்தியாலத்தில் இச் செயலமர்வினை நிகழ்த்தினர்.

இச் செயலமர்விற்கு பிரதமவிருந்தினர்களாக பன்வில பிரதேச செயலாளர் திருமதி தமயந்தி விஜேசிங்க, பன்வில பொலீஸ் அதிகாரி திரு. ஆர் முனசிங்க கிராம உத்தியோகத்தர் திரு . ஆர். எம்.எஸ்,பி இரத்நாயக்கா, திரு. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றல், திருமுறை ஒதுதல், ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய இச்செயலமர்வில் ஆசியுரை . வரவேற்புரை, நடனம் ஆகியன இடம்பெற்றன.

பன்வில சைவமகாசபை அறநெறிப்பாடசாலை, அறிவொளி அறநெறிப்பாடசாலை நவநாதச்சித்தர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களது நாடகங்களும், கிராமிய நடனம், சொற்பொழிவுகள், யோகா பற்றிய விளக்கவுரை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. இச் செயலமர்வினையொட்டி அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, நாடகம், வில்லிசைப்போட்டிகள் இடம் பெற்றன. இவ் வைபவத்தில் இந்துப்பொது மக்கள் இந்து, பௌத்த, முஸ்லீம் மதகுருமார்களும் கலந்து சிறப்பித்தனர்.

## யாழ்ப்பாணம் மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாரந்தனை சரவணை கர்ணாந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையினர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து 28.05.2010 ஆம் திகதியன்று புண்ணிய கிராம செயற்திட்ட செயலமர்வினை வெகு சிறப்பாக செயற்படுத்தினர்.

விசேட பூசைகள், மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய செயலமர்விற்கு கரவெட்டி பிரதேசசெயலாளர் திரு எஸ். சத்தியசீலன், பிரதம விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் திரு. ஜி. எம் காண்டீபன், உதவி அரசாங்க அதிபர் திரு. ஜி நாகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், சரவணை . நாகேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சத்தியசீலன், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் "கன்மமும் வாழ்வும்" பெற்றோர் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளல்" சமூக நோக்கில் ஆலயங்கள்" ஆகிய தலைப்புக்களில் விசேட சொற்பொழிவுகள் இடம் பெற்றன. இவற்றை முறையே திரு. பொ. சந்திரவேல், திரு.நவராஜ், திரு. இரா.

செல்வவடிவேல் ஆகியோர் நிகழ்த்தினர். இச் செயலமர்வுத்திட்டத்தில் பெருமளவான கிராமமக்கள் கலந்து கொண்டனர். இந்து அறநெறிப்பாடசாலை மணவர்களிடையே கலாசாரப் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நிறைவு நிகழ்ச்சியாக கோமாத பூஜை இடம்பெற்றது.

## அறநெறிப்பிரிவின் செயற்பாடுகள்

நாடளாவிய ரீதியில் இந்து அறநெறிப் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இதன் செயற்பாடுகளுக்கு உரிய ஆலயங்களும், நிறுவனங்களும் பொறுப்பாக விளங்குகின்றன. இப் பாடசாலைகளை பதிவு செய்து மேற்பார்வை செய்வதுடன் அதன் செயற்பாடுகளுக்கு தேவையான உதவிகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. திணைக்கள நிதி ஏற்பாட்டுக்கு அமைய மாவட்டந்தோறும் இச் சேவை வழங்கப்பட்டு வருகின்றன.

இச் சேவையின்கீழ் மாவட்டம்தோறும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் நடத்துதல், மாணவர்களுக்கான சீருடை விநியோகம், ஆசிரியர்களுக்கான நூல்கள் வாங்குவதற்கான கொடுப்பனவு, பரீட்சைகள் நடத்துதல், சொற்பொழிவுகள் மேற்கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத் திட்டங்கள் மூலம் அறநெறிப்பாடசாலைகளை வளர்த்து நல்லதொரு இந்து சமுதாயம் உருவாக்க வழிவகுப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த வகையில் இவ்வருட இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் நடைபெற்ற வேலைத்திட்டங்கள் பின்வருமாறு

## இந்து இறுதிநிலைப் பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள்.

### திருகோணமலை மாவட்டம்

இக் கருத்தரங்கு திருகோணமலை சிவானந்தா தபோவன மண்டபத்தில் 10.07.2010 ஆம் திகதியன்று உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் சுமார் 75%மான அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் கலந்து பயன் பெற்றனர். இப் பாடசாலைகளுக்கான மாணவர் சீருடைகள், மற்றும் இசைக்கருவிகள் (சுருதி, தாளம்) நூல்கள் என்பன வழங்கப்பட்டன. இக் கருத்தரங்கினை திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. மகேந்திரராசா ஒழுங்குபடுத்தியிருந்தார்.

### வவுனியா மாவட்டம்

வவுனியா மாவட்டத்திற்கான கருத்தரங்கு 03.07.2010 ஆம் திகதியன்று வவுனியா சுத்தானந்த மண்டபத்தில் உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி. P.S.M.S. சாள்ஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இக் கருத்தரங்குகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி K. கலையமுதா ஒழுங்குபடுத்தியிருந்தார். இம் மாவட்ட அறநெறிப்பாடசாலைகளுக்குரிய நூல்கள், இசைக்கருவிகள், தர்மாசிரியர் பரீட்சைக்குரிய பாடநூல்கள், இறுவெட்டுக்கள் என்பன வழங்கப்பட்டன.

### மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்திற்குரிய கருத்தரங்கு 04.07.2010திகதியன்று சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் உதவிப்பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி திரு கதிர்காமநாதன் மற்றும் மன்னார் மாவட்ட நலிவுற்றோர் நலன்காப்பு நிதியத்தின் உறுப்பினர்கள் கலந்து

கருத்தரங்கினை சிறப்பாக நிகழ்த்தினர். மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி மணிசேகரம் கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். இதில் மன்னார் மாவட்டம். அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு இசைக்கருவிகள், இறுவெட்டுக்கள், மாணவர்களுக்கான நூல்கள், தர்மாசிரியர் பரீட்சைக்குரிய உசாத்துணை நூல்கள் என்பன வழங்கப்பட்டன.

## பதுளை மாவட்டம்.

பதுளை மாவட்டத்திற்கான ஆசிரியர் கருத்தரங்கு 18.09.2010 ஆம்திகதியன்று பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



இதனை பதுளை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு மோகனராசா அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார். உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பதுளை மாவட்ட ஆசிரியர்கள் கலந்து பயன் பெற்றனர்.



பங்கு பற்றிய பாடசாலைகளுக்கு இசைக்கருவி, தர்மாசிரியர் பரீட்சை பாடத்திற்கமைவான பாடநூல்கள் என்பன வழங்கப்பட்டன.

## நுவரெலியா மாவட்டம்.

நுவரெலியா மாவட்டத்திற்கான ஆசிரியர் கருத்தரங்கு 19.10.2010திகதியன்று உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் ஹற்றன் ஹைலண்ட் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நுவரெலியா மாவட்ட அறநெறி ஆசிரியர்கள் கலந்து பயன் பெற்றனர். இசைக்கருவிகள், பாடநூல்கள் எனபன வழங்கப்பட்டன.



## புத்தளம் மாவட்டம்

இக்கருத்தரங்கு புத்தளம் இந்துமத்திய கல்லூரி மண்டபத்தில் உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் 25.09.2010ஆம் திகதியன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கினை புத்தள மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. விமலரஞ்சனி ஒழுங்கு செய்திருந்தார். அறநெறிப் பாடசாலைகளுக்குரிய நூல்கள் வழங்கப்பட்டன.

## கண்டி, மாத்தளை மாவட்டம்.

கண்டி, மாத்தளை மாவட்டங்களுக்கான கருத்தரங்குகள் 05.06.2010 ஆம் திகதியன்று நடைபெற்றன. இதில் கண்டி மாவட்டத்திற்கான கருத்தரங்கு கண்டி மாவட்ட

அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந. அனந்தலெட்சுமி தலைமையிலும், அதே தினம் மாத்தளை மாவட்டத்திற்கான கருத்தரங்கு உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையிலும் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் 2009ஆம் ஆண்டு இந்து சமய பொது அறிவுப்போட்டிப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றது. அறநெறிப் பாடசாலைகளுக்கான இசைக் கருவிகள், பாடநூல்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

## இந்துசமய பொது அறிவுப்போட்டிப் பரீட்சை 2010

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து அறநெறிப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடையே இந்து சமயம் தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் முகமாக இந்து சமயப்பொது அறிவுப்போட்டி பரீட்சையொன்றை வருடாந்தம் நடாத்துகின்றது. மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் அறநெறிப்பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் விபரங்கள் திரட்டப்பட்டு, அதன் அடிப்படையில் மாணவர்களுக்கான பொது அறிவுப்போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். இவ்வருடம் அகில இலங்கை ரீதியாக சுமார் 500 அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 45000 மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தனர். இது வரை பிரிவு ரீதியில் நடாத்தப்பட்ட இப்பரீட்சை இம்முறை வகுப்பு ரீதியாக நடைபெற்றது. மாவட்டங்கள் தோறும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டன. 26.06.2010சனிக்கிழமை காலை 9.00மணிமுதல் மாலை 2.30 மணி வரை இப்பரீட்சை 84 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

பரீட்சையில் 75ற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர்கள் மாவட்ட தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பொதியும், பணப்பரிசும் வழங்கப்பட்டன. இப்பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு.

இந்து அறநெறி ஆசிரியர்களின் வாசிப்பு திறனை ஊக்கிவிக்கும் முகமாக நூலகக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு ஆசிரியருக்கு ரூபா 2000 வீதம் இக்கொடுப்பனவு வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்படுகின்றது.

### நூல் கொள்வனவு.

அறநெறி அமுதம், திருக்குறள், ஆகிய இரு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு அறநெறி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்துடன் தர்மாசிரியர் பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்து நாகரீகம், என்னும் நூல் கொள்வனவு செய்யப்பட்டு மாவட்டம் தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

### நூல் அச்சிடல்

அறநெறி மாணவர்களுக்காக ஔவையார் அறிவுச் செல்வம், பன்னிருமாத நினைவுகள் என்னும் இரு நூல்களும் அரச அச்சுத் திணைக்களத்தினூடாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. இத்துடன் அறநெறி இறுதிநிலை பரீட்சை வினாவிடை புத்தகம், மாணவர்களது பாடத்திட்டம் ஆகியன அச்சிடப்பட்டுள்ளன. இவை தவிர குமாரசுவாமி குருக்களின் சைவப்பிரகாசிகை என்னும் சமய அறிவுநூலும் அச்சிடப்பட்டுள்ளது.

### இசைக்கருவி (தாளம், சுருதி) விநியோகம்



சிறப்பாக இயங்கும் அறநெறிப்பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவ் அறநெறிப்பாடசாலைகளுக்கு சுருதிப்பெட்டி, தாளம் என்பன வழங்கப்படுகின்றன.

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கான சீருடை விநியோகம்

அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் இலவசமாக திணைக்களத்தால் வழங்கப்படுகின்றன.அவ்வகையில் இதுவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சீருடை திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கான சீருடை இந்துப்பண்பாடு நிதியத்தினால் வழங்கப்படுகின்றன.

### தளபாடக் கொள்வனவுக்கான நிதியுதவி.

சிறப்பாக இயங்கிவரும் அறநெறிப்பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தளபாடம், கொள்வனவு செய்வதற்கான நிதியாக 30000 ரூபா வீதம் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. அரச நிதி ஒதுக்கீட்டுக்கமைவாக ஒவ்வொரு வருடமும் மாவட்டம் தோறும் பாடசாலைகள் தெரிவு செயயப்பட்டு இந்நிதி வழங்கப்படுகின்றது.

## இந்துசமய பொதுஅறிவுப்போட்டி பரிசளிப்பு வைபவம் 17.11.2010

இவ்வருடம் அகில இலங்கை ரீதியாக அறநெறி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் தேசிய மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவைபவம் 17.11.2010 அன்று இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடை பெற்றது.



14 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார்329 மாணவர்களும், பெற்றோரும், அறநெறிப்பாடசாலை ஆசிரியரும் கலந்து கொண்டனர்.



இவ்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக புத்தசாசன மதவிகார அலுவல்களின் பிரதி அமைச்சர் கௌரவ ஆ.மு.யு.னு.ளு. குணவர்த்தன அவர்கள் கலந்து சிறப்பித்தார்.



திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.






கொழும்பு தமிழ்ச் சங்கம்

# இந்துப் பூசகர்களுக்கான இருவார கால வதிவிடப்பயிற்சி

திணைக்களத்தின் வருடாந்த செயற் திட்டங்களில் ஒன்றான அந்தணர் அல்லாத இந்துப்பூசகர்களுக்கு பயிற்சியளிக்கும் நெறி கடந்த ஆகஸ்ட் 17ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வதிவிடப்பயிற்சியாக நடைபெற்றது.



திணைக்களத்தின் அழைப்பின் பேரில் தமிழக கிராமப்பூசகரின் பேரவையைச் சேர்ந்த திரு. ஏ.கே சௌந்தரநாதன் திரு. ஏ. ஜீவநாதன் திரு. பக்ஷி சிவநாதன் ஆகிய மூவரும் இலங்கைக்கு வருகை தந்ததோடு இப்பயிற்சிகளையும் சிறப்பாக நடத்தியுள்ளனர்.



இப்பயிற்சி தொடக்க வைபவம் ஆகஸ்ட் 17ஆம் திகதி காலை இடம் பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சீ யோகேஸ்வரன் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. பியசேன ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.



தொடக்க வைபவம் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்றது. கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன் உட்பட பல பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர். தமிழக விரிவுரையாளர்கள் இப்பயிற்சி தொடர்பான விளக்கத்தினை வழங்கினர்.



தொடர்ந்து அன்று பிற்பகல் தொடக்கம் - 31ஆம் திகதி வரை 15 தினங்கள் வதிவிடப்பயிற்சியாக நடைபெற்ற இவ்வகுப்புக்கு நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த 30 பூசகர்கள் பங்கு கொண்டு பயிற்சியினைப் பெற்றனர். காலை 5மணிமுதல் இரவு 9மணிவரை தொடர்ச்சியாக விரிவுரைகள் இடம் பெற்றன. இவ் வகுப்புக்களில் யோகாசன

வகுப்புக்கள், பிரார்த்தனை மந்திரங்கள், கிரியை விளக்கங்கள் அபிஷேகப் பயிற்சி, அர்ச்சனை முறைகள், தேவாரம், திருவாசகம், திருமுறை, பண்ணிசைப்பயிற்சிகள், தியானசுலோகங்கள், அடிப்படை சோதிடப்பயிற்சி போன்ற பல்வேறு விடயங்கள் கிரமமான முறையில் கற்பிக்கப்பட்டன. இவற்றுடன் குறித்த சில தினங்களில் வரலக்ஷ்மி பூஜை, திருவிளக்குப்பூஜை, சிவதீட்சை வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. திருமதி தமயந்தி தலைமையில் சுமங்கலிப் பெண்கள் திருவிளக்குப் பூஜைகளை நிகழ்த்தினர்.



பூசகர்களுக்கு ஆண்மீக விளக்கங்களை அளிக்கும் வகையில் அருள்மொழியரசி, திருமதி வசந்தா வைத்தியநாதன் சைவநீதி, ஆசிரியர் திரு. செ. நவநீதகுமார் விஷ்வ ஹிந்து பரிஷத்தைச் சேர்ந்த சுவாமி விஞ்ஞானாந்தா ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.



கடைசி மூன்று தினங்களும் கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற பூசகர்களுள் ஒரு தொகுதியினரும் கலந்து கொண்டு மேலதிகப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆகஸ்ட் 31ஆம் திகதி காலை திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நிறைவுகாண் வைபவம் இடம்பெற்றது. புத்தசாசன மத அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ எம். ஏ.டி.எஸ் குணவர்த்தன அவர்கள் பிரதம அதிதியாகவும் அமைச்சின் செயலாளர் திரு கசியன் ஹேரத் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியதோடு பயிற்சி பெற்ற பூசகர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர்.

கௌரவ அமைச்சர் தமிழக விரிவுரையாளர்கள் மூவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு விருதுகளையும் வழங்கி வாழ்த்தினர். விரிவுரையாளர்கள் சிறப்பு உரைகளும் இடம்பெற்றன.

நிறைவுநாள் நிகழ்வின் ஓர் அம்சமாக பயிற்சி பெற்ற பூசகர்கள் தாம் பெற்ற பயிற்சிகளை நிகழ்த்திக் காட்டினர்.





திருவாவடுதுறை ஆதீன இளைய சந்நிதானம் இலங்கை விஜயத்தின்போது இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் திணைக்களப் பணிப்பாளர், அலுவலர்கள், இந்துசமய பிரமுகர்களை சந்தித்து ஆசி வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

# கௌரவ பிரதமரின் மாவட்ட விஜயம்

கௌரவ பிரதமரும் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு ஜெயரத்தின அவர்கள் இந்து ஆலயங்களின், இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காக மாவட்டங்கள் தோறும் விஜயம் மேற்கொண்டார். வவுனியா, மொனராகல, கேகாலை, அம்பாறை, திருகோணமலை, களுத்துறை, கொழும்பு, காலி, கம்பஹா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். இச் சந்திப்பின்போது ஆலயங்கள் புனரமைப்பிற்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

வவுனியா





மொனராகல





கேகாலை





## கொழும்பு





## அம்பாறை





## காலி





## கம்பஹா







கொழும்பு தமிழ்ச் சங்கம்

# பாணந்துறைஸ்ரீ கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகப் பெருவிழா கும்பாபிஷேகம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பரிபாலனம் செய்யப்படும் பாணந்துறை ஸ்ரீகந்தசுவாமி கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக பெருவிழா 16.07.2010ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. 12.07.2010ஆம் திகதி கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகிய இவ்விழா 14.07.2010, 15.07.2010 ஆகிய தினங்களில் எண்ணெய்க்காப்பு நடைபெற்றது. இம்மகாகும்பாபிஷேகத்தினை சிவஸ்ரீ சதாமகாலிங்க சிவக்குருக்கள் நடாத்தி வைத்தார். இதன் ஒழுங்கமைப்பினை சிவஸ்ரீ ரி. அழகேசக்குருக்கள் மேற்கொண்டார்.





இப்பெருவிழாவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர்கள், கணக்காளர் , மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு பி. டபிள்யூ. டி. ஜெயதிலக, இந்துப்பண்பாட்டு நிதிய உறுப்பினர்கள், திணைக்கள அலுவலர்கள், பாணந்துறை வாழ் மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கும்பாபிஷேகப் பெருவிழாவில் 15 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. 30.07.2010ஆம் திகதியன்று சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெற்றது. முதன் முதலாக இரதோற்சவத் திருவிழா நடைபெற்றது. பாணந்துறை பிரதான வீதிகளுடாக இவ் இரதோற்சவம் எழுந்தருளிய பொழுது பெருமளவான மக்கள் வழிபட்டு கந்தப்பெருமானின் அருளைப் பெற்றனர். 31.07.2010 திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்றது.










இக்கோயில் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ்வந்த பின்னரே கந்தசஷ்டி விரத அனுஷ்டானங்களும் இங்கு மேற்கொள்ளப்பட்டன.




ஆறு நாட்களும் தினமும் விசேட பூசை நடைபெற்றது. 11.11.2010ஆம் திகதி அன்னதானமும் நடைபெற்றது. 21.11.2010ஆம் திகதி திருக்கார்த்திகைத் தீபமும் இவ்வாலயத்தில் ஏற்றப்பட்டதுடன் சொக்கப்பானையும் எரிக்கப்பட்டது.

# திருக்கோயில் சித்திர வேலாயுதர் சுவாமி கோயில்

திரு.எஸ். துஷ்யந்

மட்டக்களப்பிலே சரித்திரப்புகழ் பெற்ற திருப்படைக் கோயில்களில் இதுவும் ஒன்று. திருகோணமலையிலிருந்து ஹபறணை வழியாக சுமார் 325 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. திருக்கோணேஸ்வரமும், திருக்கோயிலும் இராவணனுடன் சம்பந்தப்படுத்தும் கர்ண பரம்பரைக் கதைகளுடன் தொடர்பானவை.

ஆதியில் திருக்கோயில், "நாகர்முனை" என வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு பண்டைய நாள்களில் பெயர் பெற்ற இத் தலம் திருக்கோவில் என்று பெயர் பெற்றமைக்கு இப்பிரதேசத்தார் ஒரு கர்ண பரம்பரைக் கதையைக் கூறுகின்றனர். பூசனை புரியும் பூசாரி ஒருவரின் வேண்டுதலுக் கமைய வடக்கு வாசலில் அமைத்த இக் கோயில் கிழக்குத் திசையை நோக்கித் திரும்பியதால் அன்று தொட்டு "திருக் கோவில்" என்னும் பெயரோடு வழங்கி வருகின்றது.

இக்கோயிலின் மூலஸ்தானத்தில் சித்திரவேல் அமைந்துள்ளதால் இங்குள்ள மூர்த்தி சித்திர வேலாயுத சுவாமி எனப் போற்றப்படுகின்றார். தமிழகத்தில் கோயில் என்று குறிப்பிடப்படும் தலம் சிதம்பரம் போல, இலங்கையில் கிழக்குத் திசையின் பால் அமைந்திருக்கும் திருக்கோயிலைச் சிறப்பாகக் குறிக்கின்றது. ஊருக்கும், கோயிலுக்கும் ஒரே பெயராக வழங்கப்படும் சிறப்பு வேறு எப்பிரதேசத்திலும் இல்லை எனலாம்.

இலங்கையில் உள்ள முருகன் கோயில்களில் கல்வெட்டு சாசனங்கள் செப்பேடுகள் அதிகம் காணப்படுகின்ற தலம் இதுவாகும். திருக்கோயிலில் மூன்று கல் வெட்டுக்கள் உள்ளன. அவற்றில் முதலாவது கல் வெட்டிலே "சிவஞான சங்கரர் கோயில்" என குறிப்பிடப்படுவது இக்கோயிலையே சுட்டுகின்றது. மட்டக்களப்பு மான்மியமும் இக்கோயில் வரலாறுகளைச் செப்புகின்றன.

புவனேயக கயபாகு, மனுநேயவாகு என்னும் இரு கலிங்க தேசத்து அரசர்களும் இக்கோயிலுக்குப் திருப்பணிகள் புரிந்தார்கள் என மட்டக்களப்பு மான்மியம், கோணேசர் கல்வெட்டு, தெட்சணகைலாய புராணம் ஆகிய மூன்று நூல்களும் கூறுகின்றன. குளக்கோட்டனும் இக் கோயிலுக்குப் பணிபுரிந்துள்ளான் என்பதை மேல் வரும் கல்வெட்டுப் பாடற் பகுதியொன்று சான்று சொல்கின்றது.

வெற்றியுனை மயூர சித்திர சங்கார வேல்; வெள்ளை நாவற் பதியதாம்; பேர் பெறும் தென் திருக்கோயில்....

மாகோனும் திருக்கோயில் நிர்வாகம், தொண்டுகள் தொடர்பாக வகுத்த வன்னிமை பற்றிச் சில கல் வெட்டுப்பாடல்களும் சான்று கூறுகின்றன. இந்தியச் ஸ்தபதிகளால் அமைக்கப் பெற்ற இக் கோயில் ஈராயிரம் ஆண்டுகள் மிகப் பழமை வாய்ந்த தலம் என்ற பெருமையைப் பெறுகின்றது.

மூர்த்தி, தலம் தீர்த்தம் முறையே வணங்கினார்க்கு வார்த்தை சொல்லச் சற்குரு நாதன் வாய்க்கும் பராபரமே என்னும் அருள் மொழிப்படி மூர்த்தி - ஸ்ரீ சித்திரவேலன் தலம் - திருக்கோவில், தீர்த்தம் - கிழக்குத் திருக்கடல் துறையும் பெற்று வளம் பெற்றுள்ளது. ஆடி அமாவாசைத் தீர்த்தமும், உற்சவமும் கந்தசஷ்டி திருக்கார்த்திகை விரதங்களும் சிறப்பான வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன.

இத்தலத்தின் மீது பிள்ளைத்தமிழ் கலம்பகம், தோத்திரம், கலிவெண்பா, மும்மணிக்கோவை, ஊஞ்சல், பதிகம் போன்ற இலக்கிய வடிவங்களும் பாடப்பட்டுள்ளன.

இக்கோயில் கந்தபாணத்துறை, ஈழத்துத் திருச்செந்தூர் என்னும் பெயர்களாலும் வழங்கப் பட்டும் வருகின்றது.

# கவுணியர் கன்று செப்பிய சைவ விழுமியங்கள்

திரு. சி. ரமணராஜா

தமிழக வரலாற்றில் பல்லவர் ஆட்சியில் பக்தி இயக்கம் வீசுரமாகச் செயற்பட்ட காலப்பகுதியில் சைவத்தையும், அதன் பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதில் பெருந் தொகையான சிவன் அடியவர்கள் பங்கு கொண்டனர். இயக்கம் என்பது வாழ்கின்ற சமூகத்தில் மாற்றங்கள் தேவை என்னும் தன்னுணர்ச்சியை மக்களுக்கு ஊட்ட முற்படுவனவாக உள்ளன. இவ்வகையிலே தான் பல்லவர் காலப்பகுதியில் பிறசமயத்தவரால் மாற்றம் செய்யப்பெற்று வீழ்ச்சி கண்டு வந்த சைவ மதத்தையும், அது சார்ந்த பண்பாட்டையும், பண்பாட்டின் சின்னங்களான விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டியதும், அவற்றின் இருப்பினை உறுதி செய்ய வேண்டியதும் அக்காலத்து மக்களின் இன்றியமையாக் கடமையாக இருந்தது. எனவே தான் மக்களை தன்னுணர்ச்சி பெறச்செய்வதற்காக அக்காலத்தில் "பக்தி இயக்கம்" செயற்பட்டது. தமிழக வரலாற்றில் நிறுவனமயப்பட்ட முதல் இயக்கமாக நாம் பக்தி இயக்கத்தினை குறிப்பிடுவதில் தவறில்லை. சமணம், பெளத்தம் போன்ற வேதங்களை மறுத்துரைக்கும் சமயங்களுக்கு எதிராகத் தோன்றிய இயக்கமாக பக்தி இயக்கம் தன்னை அடையாளப்படுத்தியது. பல்லவர் காலத்தில் செயற்பட்ட சைவ, வைணவ பக்தி இயக்கங்கள் சமய, சமூக மாற்றங்களை உணர்ந்து பல்வேறு யுக்திகளை கைக்கொண்டு சமூக நிறுவன இயக்கமாக செயற்படலாயிற்று.

பக்தி இயக்கத்தை முன்னெடுத்துச் சென்று பக்தி இயக்க வழியில் நின்று சிவப்பணியே தம் பணியென சிந்தனை செய்து செயற்கரிய பல தியாகங்களை சிந்தை மறவாச் சிவனடியார்கள் செய்து முடித்தனர்.

சைவத்துறையை மேன்மையுறச் செய்வதற்காக பிற மத ஊடுருவல்களை தடுத்து நிறுத்தி மக்கள் மத்தியில் ஒரு கிளர்ச்சி நிலையினை உண்டு பண்ணி தன்னுணர்ச்சியை இப்பக்தி இயக்கங்கள் ஏற்படுத்தின. பக்தி இயக்க உணர்வானது பாடல்களுடாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய பாடல்கள் இறைபெருமையைப் பரப்பும் வகையில் இசையுடன் கலந்து பாடப்பட்டன. பண்ணோடு இசைபாடப்படும் போது மக்களை இலகுவில் சென்றடையவும், பக்தி உணர்வில் ஊறித் திளைக்கவும் வழிவகுத்தது.

பக்தி இயக்கத்தை முன்னிறுத்தி சமூக, சமய வரலாற்றில் மாற்றங்களை உண்டு பண்ணிய பெருமை நால்வரைச்சாரும். நால்வரின் வாழ்வும், அவர்களது வாக்குகளும். சைவத்தை நிலைபெறச் செய்யவும் மேன்மையுற்று விளங்கவும் செய்தன. " நால்வர் காட்டிய வழி நில்" என்று நம் முன்னோர்கள் கூறுவார்கள். ஆனால் அந்த நாலுபேர் யார்? என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததே. இருப்பினும் சைவமும், பண்பாடும் தளைக்க அரும்பாடுபட்ட ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பவர்கள் தான் அந்த நால்வரும் என அறியமுடிகிறது.

**" இந் நால்வரும் காலத்தின் தேவையுணர்ந்து, கருத்துணர்ந்து சமூகத்தின் இருப்புணர்ந்து செயற்பட முன்வந்தமை சைவச்சூழலில் அவர்களது ஆளுமைத் தன்மையினை வெளிப்படுத்துகின்றது."**

ஆகவே தான் இத்தகைய நால்வரின் வழிநின்று செயற்படுமிடத்து எவ்வித துன்பங்களுமின்றி

இகபர சுகங்களை பெற்று இனிது வாழ்வார்கள். ஏனெனில் நால்வர் காட்டிய வாழ்வியல் பயணங்கள் அத்தகையதே. இன்றைய காலத்தில் நால்வருடைய பாடல்களில் புலப்படுத்தப்படும் விழுமியக் கருத்துக்களை, சிந்தனைகளை சிரமேற்கொண்டு ஒழுகுபவர்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர் என்பது மிகவும் கவலைக்குரிய தொன்றாகும். இவர்கள் நால்வரின் வழியில் நின்று செயற்படும் பட்சத்தில் எவ்வித துன்பமும் இன்றி இன்பமாக வாழ்வர். ஆனால் அவற்றை மறந்து செயற்படும் நிலையில் துன்ப துயரங்களுடன் கூடியவர்களாகவே வாழ்கின்றனர். ஆகையால் தான் சமயங்களில் நம்பிக்கையற்ற தன்மை அவர்களிடையே பதிந்து வருகின்றது.

**சம்பந்தரின் திருவவதாரம்**

***"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்***
***பொருவில் திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்***
***வருபுறவஞ் சண்பைநகர் வள்காழி கொச்சைவயம்***
***பரவு திருக்கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"***

என்ற பெரியபுராணச் (1917) செய்யுள் சீர்காழிக்கு பன்னிரு திருப்பெயர்கள் உள்ளதாக கூறுகின்றது. இச்சிறப்புமிகு சீர்காழி சோழவள நாட்டில் உள்ளது. சிவநெறி மறவாச் சிந்தையராம் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் கௌண்டிய கோத்திரத்திலே திருவாதிரை நன்நாளில் ஞானசம்பந்தப் பிள்ளை திருவவதாரம் செய்தார். ஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த இடம் தான் சோழவள நாட்டின் சிறப்புக்கு காரணமாய் அமைந்த சீர்காழி ஆகும். தன்தந்தையர் முற்பிறப்பில் செய்த புண்ணியங்களே தன் பிறவிக்கு காரணம் என்பதனை

*"முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை*
*முழுமணித் தரளங்கள்........"*

என்று தெளிவுறுத்துகின்றார். ஞான முதல்வனாகிய சம்பந்தப் பெருமானை சேக்கிழார் அடிகள் மதியுடன் இணைத்து கூறி பெருமைப்படுத்துகின்றார்.

**"வானத்தின் மிசையின்றி வள்மதிக் கொழுந்து"** என்ற திருவாக்கினால் பதினாறு கலைகள் நிரம்பிய வானத்தின் முழுமதியினைப்போல பதியாறு படிநிலைகளில் நிரம்பிய ஞானத்தின் முழு வடிவமே சம்பந்தர் என்று சுட்டிக்காடுகின்றார்.

**காலம் பெற அழுதவர்**

**"அழுதால் உன்னைப் பெறலாமே"** என்பது திருவாசகம் தந்த மணிவாசகரது ஒரு வாசகம். ஆம்! அழுதால் உன்னைப் பெறலாம். என்பதனை சம்பந்தரது அனுபவ நிலையினூடாக கண்டுணர முடிகின்றது. நல்வினைப் பயன்களினால் இத்திருவுலகு நோக்கி திருவவதாரம் செய்த சம்பந்தர் பல தடவைகள் அழுதிருக்க வேண்டும். தந்தையாராகிய சிவபாதவிருதயர் தோணியப்பரை தரிசிக்கச் செல்ல முற்படும் போது சம்பந்தர் அழுதிருக்கலாம். ஏனெனில் மூன்று வயது நிரம்பிய சம்பந்தர் அழுதால் தந்தையர் தன்னையும் அழைத்துச் செல்வார் என்று கருதியிருக்கலாம். இதனால் அழுத சம்பந்தனை சமாளிப்பதற்காக சிவபாதவிரு-தயர் அழைத்துச் சென்றிருக்கலாம். என்பதனை சந்தேகமின்றிச் சிந்திக்க முடிகின்றது.

ஆனால் தோணியப்பர் திருத்தலத்திலும் அழுவார் என்பதும் அவர் அறியாத செய்தியாகும். காலமெல்லாம் அழுது கொண்டிருப்பது ஒரு வகை அத்தகைய அழுகையானது காலத்தை வீணாக்குவதாக அமையும். ஆனால் காலத்தை நிறுத்தி அந்த காலத்தை தனக்கு சாதகமாக்கி காலத்தை தன்வழியில் பணியாற்ற ஏவல் கொள்ள அழுதவர் சம்பந்தர் ஒருவரே. அதனாலேயே

சேக்கிழாரடிகள் **"காலம்பெற அழுதார்"** என சம்பந்தரை குறிப்பிட்டிருக்கின்றார்.

தந்தையார் சிவபாதவிருதயார் நீராடச் செல்லும் போது ஞானசம்பந்தர் அழுதார். பின்னர் உடன் சென்று குளக்கரையில் நின்ற போது தந்தையார் தண்ணீரில் மூழ்கவே தந்தையைக் காணவில்லை என்ற ஓர் உணர்வு நிலை அவரிடத்தே ஏற்பட்டது. சம்பந்தரது சிறப்பு அழுகையினை சேக்கிழார்.

***"கண்மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களால் பிசைந்து
வண்மலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில் மறைஒலி பெருக எவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக் கன்றனையவர் தாம் பொருமி அழுதருளினார்."***

என்ற செய்யுட்கள் (பெரியபுராணம் 1965) வாயிலாக வெளிப்படுத்தும்பாங்கு குறிப்பிடத்தக்கது. சம்பந்தப் பெருமானை தனது பெரியபுராணத்திலே அறிமுகப்படுத்த முற்படும் போது

**"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்க பூத பரம்பரை பொழிய புனிதவாய் மலர்ந்தழுத
சீத வளவயற்புகலி திருஞான சம்பந்தன்.........**

என்ற வகையில் அறிமுகம் செய்யும் பாங்கு கவனிக்கத்தக்கது. அதாவது பிறசமய மேலாதிக்கத்திற்குள் சைவமும், வேதமரபும், மூழ்கியிருந்த வேளை சைவத்தையும், வேதமரபையும் உயர்நிலைக்கு இட்டுச் சென்ற பெருமைக்குரிய சாதனையாளராக அறிமுகம் செய்கின்றார். புனிதவாய் மலர்ந்தழுத கவுணியக்கன்று இவ்வுலகில் வாழ்ந்த காலம் பதினாறு, பதினாறு என்ற முழுமையிலே நின்று திருப்பதிகப் பெருவழியை, தமிழால் காணும் பெருநெறியை நிறைவுறச் செய்த பெருந்தகையார் ஞானசம்பந்தர் என்பதனை மனங்கொண்ட சேக்கிழாரடிகள்.

*"புண்ணியப் பதினாறாண்டு பேர் பெறும்
புகலி வேந்தர்"*

என்று சிறப்பிக்கின்றார். 4286 செய்யுட்களைக் கொண்ட பெரியபுராணத்திலே திருஞானசம்பந்தர் வரலாற்றினை 1256 செய்யுட்களால் விரிவாக எடுத்து கூறுகின்றார்.

## சம்பந்தர் தேவாரமும் பதிக அமைப்பும்

இருபத்தேழு அருளாளர்களினால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல்களாக விளங்குவன. பன்னிரு திருமுறைகளாகும். தெய்வீகப்பாடல்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட முறைப்படுத்தப்பட்ட தொகுப்பே திருமுறை களாகும். இதில் முதல் ஏழு திருமுறைகளும், அடங்கன் முறை என்னும் தொகுப்பிலுள்ள தேவாரங்களாகும். சிவமணம் பரப்பும் தெய்வீகப் பாடல்களே தேவாரங்கள். முதல்மூன்று திரு முறையாக வைத்துப் போற்றப்படுவன சம்பந்தர் தேவாரங்களாகும். இவர் பாடிய பாடல்கள் பதினாறாயிரமாகும். கால மாற்றங்களினாலும் அலட்சியத்தினாலும், அறியாமையினாலும் சிதைந்த நூல்கள் போக எஞ்சியனவற்றுள் இன்று நமக்கு கிடைப்பது 384 பாடல்களே எனலாம்.

***"பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிக முந்நூற்
றெண்பத்து நான்கினால் இலங்கு
திருமுறை மூன்று........"***

என்ற செய்யுளடி மூலம் அறிந்துணர முடிகிறது.

முதல் மூன்று திருமுறைகளும் 384 பதிகங்களிலானது என்பதனை மேலே கண்டோம். முதல் திருமுறை 136 பதிகங்களையும்,

1469 பாடல்களையும், இரண்டாம் திருமறை 122 பதிகங்களையும், 1331 பாடல்களையும், மூன்றாம் திருமுறை 126 பதிகங்களையும் 1358 பாடல்களையும் கொண்டமைந்தது. தேவாரங்கள் இரு நிலைகளில் தொகுக்கப்பட்டன. ஒன்று **"பண்முறை"** மற்றொன்று **"தல முறை"** ஆகும். பண்முறைகளின் அடிப்படையிலே திருமுறைகள் தொகுக்கப்பட்டன. இத்தகைய பண்ணடைவுகள் யாவும் நம்பியாண்டார் நம்பி காலத்திலேயே திருநீலகண்ட யாழ்ப்பாண மரபில் வந்த பெண் ஒருவரின் இறையருளால் அமைக்கப்பட்டன. அவை தான் இன்றும் பின்பற்றப்படுகின்றன. இங்கு முதல் திருமுறை எட்டுப் பண்களிலும், இரண்டாம் திருமுறை ஆறு பண்களிலும், மூன்றாம் திருமுறை ஒன்பது பண்களிலுமாக இருபத்து மூன்று பண்களில் முதல் மூன்று திருமுறைகளும் பாடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 220 சிவத்தலங்கள் மீது சம்பந்தர் பதிகங்களைப் பாடியுள்ளார். அவர் பாடிய திருப்பாடல்களின் எண்ணிக்கை 4158ஆகும்.

### சம்பந்தர் பாடல் புலப்படுத்தும் விழுமிய சிந்தனைகள்

இப்புவியிலே பிறந்த ஒவ்வொரு ஜீவன்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகள் பலவற்றை காலத்துக்குக் காலம் எழுந்த இலக்கியங்கள் பலவும் எமக்கு பட்டியற்படுத்தி கூறுகின்றன. பல்லவர் காலத்திலே தோன்றி தலைவராக தலைமை தாங்கிச் சென்று ஒரு சமூகப் புரட்சியாளனாக விளங்கியவர் திருஞானசம்பந்தர். இவர் தென்னிந்தியத் திருத்தலங்களுக்கும், ஊர்கள் பலவற்றுக்கும் கால்நடையாகவே சுற்றுப்பயணங்களை மேற் கொண்டார். இத்தகைய வேளையில் தமிழையும், தமிழோடு இசைபாடும் பணியையும், தொண்டுகள் பலவற்றையும் செய்தவரானார்.

திருஞானசம்பந்தருக்கு இயல்பாகவே அமைந்த ஆளுமைப் பண்புகளை காட்டிலும் இறைவனே பல உணர்வுகளையும், உந்துதல் களையும் ஞானப்புதல்வனுக்கு வழங்கி பக்தி இயக்கத்தின் ஒப்பற்ற தலைவனாக இனங்காட்டும் தன்மை கவனிக்கத்தக்கது. சிறு வயது முதலே கால்நடையாக தேசசஞ்சாரம் செய்து தமிழிசை வளர்த்த சம்பந்தருக்கு இறைவனே முத்துச்சிவிகை, முத்துப்பந்தல், முத்துச்சின்னம், முத்துக்குடை முதலிய உபசாரங்களை வழங்கி ஒரு தலைமையாளனுக்குரிய இலட்சணங்களுடன் இனங்காட்டும் பாங்கு சம்பந்தர் இறை ஆணை பெற்ற ஒரு தலைவர் என்பது சொல்லாமலே விளங்கிக் கொள்ளமுடியும்.

இத்தகைய ஒப்பற்ற பெருந்தலைவரான ஞானசம்பந்தப் பெருமான் தனது பக்திப் பாடல்களிலே பல விழுமியக்கருத்துக்களை கூறிச் சென்றிருக்கின்றார். சைவப்பண்பாடுகள், விழுமிய சிந்தனைகள் பிறசமயங்களால் சூழ் கடிக்கப்பட்ட வேளை அவற்றை பாடல்கள் மூலம் வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் ஒரு கிளர்ச்சித் தன்மையை உண்டுபண்ணி தன்மதிப்பு பெறச் செய்ததுடன் சைவம், தமிழ், இசை என்பன தளைக்கவும் பாடுபட்டார்.

ஒரு தலைமையாளனுக்கு இருக்க வேண்டியது அஞ்சாமை ஆகும். மூன்று வயதிலே சிவபாதவிருதயர் தோணியப்பர் சந்நிதானத்திலே தவறவிட்டு புனிதவாய் மலர்ந்தழுதவேளை அவர் மீது திருவுளங் கொண்ட இறைவன் ஞானப்பால் கொடுத்து திருவாய் மலர்ந்தருளினார். நடந்ததை அறியாத தந்தை ஞானசம்பந்தரை அதட்டவே சற்றும் பயப்படாத கவுணியக்கன்று "ஞானப்பால் தந்த பெருமான் இவர் அன்றோ" என்று துணிந்து கூறுகின்றார். இறைவனை தந்தைக்கு அறிமுகம் செய்து

*"பீடுடைய பிரமா புரமேவிய*
*பெம்மான் இவன் அன்றோ"*

என இறுதியில் இவன் தான் என் தந்தைக்கு மட்டுமின்றி பிறருக்கும் காட்டியும் சென்ற அஞ்சாத்தன்மை ஒரு தலைமையாளனுக்குரிய சிறப்பான பண்பாகும். அத்துடன் தந்தையின் வினாவினை செவிமடுத்து தகுந்த விடையளிக்கும் தன்மையையும் அவர் கொண்டிருந்தார். அதாவது ஒருவர் கருத்தினை கிரகிக்கும் ஆற்றல் பொருந்தியவராக காணப்பட்டார்.

தமிழகத்தில் பல்வேறு ஊர்களுக்கும் தொண்டர்களுடன் மேற்கொண்ட பயணங்கள் தல யாத்திரைகள் அற்புத நிகழ்வுகள் வாதங்கள் என்பன சைவத்தை மக்கள் வாழ்க்கைக்கு மிக நெருக்கமாக அழைத்துச் செல்வதற்கான அவர்களின் மன எழுச்சியைக் காட்டுகின்றன. இவரது பண்ணமைந்த பாடல்கள் மக்களை உணர்வு பூர்வமாக உள்ளீர்த்தன. இத்தகைய உள்ளீர்ப்பிலேயே கோயில் சார்ந்த சமூக வாழ்வியல் பற்றிய சிந்தனைகள் வெளிக்கிளம்பின.

***"மண்ணின ல்லவண்ணம் வாழலாம் வைகலும்***
***எண்ணில் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்***
***கண்ணினல் ல.'துறும் கழுமல வள்நகப்***
***பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே"***

என்ற தேவாரத்திலே உலக வாழ்வியலை சிறப்பிக்கின்றார்.வையத்தில் பிறந்த உயிர்கள் நல்வாழ்வு நோக்கியே பயணிக்கின்றன. இத்தகைய நல்ல வாழ்வு இறைவனை இறைவனை அடைதலாகிய நல்லகதிக்கு நம்மை இட்டுச் செல்லும். மனித வாழ்க்கையானது செம்மையாக ஒழுங்குபடுத்தப்பட்டதாக நல்ல வண்ணம் அமையப்பெற்றால் முக்தியும் நிச்சயம். மாறாக ஒழுங்கற்ற - செம்மையற்ற - விழுமியமற்ற - நெறிப்பிறழ்வான - பாதகச் செயல்கள் நிரம்பிய வாழ்வினை மேற்கொண்டால் முக்தி நிச்சயம் கைகூடாது. என்பது சைவத்தின் கோட்பாடு. எனவே தான் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். அத்தகைய நல்ல சிந்தனையான மேன்மையான வாழ்வு நல்ல கதிக்கு அழைத்துச்செல்லும் என மக்களை நல்ல கதிக்கு தட்டிக் கொடுக்கின்றார். ஞானசம்பந்தர்.

சமண, பௌத்த மதங்கள் துறவறத்தை சிரமேற்கொண்டு மக்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்த காலச்சூழலில் நின்று கொண்டிருந்த சம்பந்தர் மேற்சுட்டிய பாடலினூடாக இல்லற வாழ்வின் உயர்ந்த சிறந்த தன்மையினை வெளிப்படுத்துகின்றார். இறைவன் இறைவியுடன் அமைந்த முறைமையினைச் சுட்டிக்காட்டி இல்லற வாழ்வின் சிறப்பினை உணர்த்தி அவ்வாழ்வின் மூலம் நற்கதி அடையலாம். என்பதனை சமூகத்தை நோக்கி வலியுறுத்திச் செல்கின்றார். கட்புலனற்று - பரந்திருக்கும் பரம்பொருளை

***"தோடுடைய செவியன் விடை***
***யேறியோன் தூவெண் மதி....."***

என அர்த்த நாரீஸ்வர நிலையில் விக்கிரக நிலைப்படுத்தி நம் கண்முன்னே நிலை நிறுத்துகின்றார். இவன் தான் இறைவன் எனச் சுட்டுணர்த்திய சம்பந்தர் இறைவனுடன் **" தந்தை - பிள்ளை"** உறவினை மேற்கொண்டு சற்புத்திர மார்க்கத்தில் நின்று ஞானம் பெற்று பரமபதம் அடைந்தவர்.

மேலும் "திருத்திகழ்" எனத் தொடங்கும் திருவையாற்றுத் திருப்பதிகக் கடைக்காப்பினுள் தம்மை "மெய்ஞ்ஞானப் பூசுரன்" எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

*"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில்*
*ஓங்கிய ஞானம்*
*உவமையிலாக்கலைஞானம்உணர்*
*வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர்*
*தாமுணர்ந்தார் அந்நிலையில்."*

என சம்பந்தர் ஞானப்பால் அருந்தியவுடன் பெற்ற ஞானத்தை சேக்கிழார் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அதாவது இறை திருவடியை மறவாது நினைப்பதற்குரிய ஞானம் ஒரு வகையின. இறைவனது பெருமையினை மறவாது ஏத்துவதற்குரிய ஞானம் இன்னொருவகையின. இவ் இரண்டையும் இணைத்த ஒருமை நெறியாகிய தொண்டு நெறியினை ஓய்வின்றி செய்வதற்குரிய ஞானம் பிறிதொரு வகையின. இவற்றுக்கு மேலான நிலையாகிய திருத்தொண்டின் நெறிக்குரிய மெய்ஞ்ஞானம் பிறிதொரு வகையான என் நால்வகை ஞானங்களை பெற்றார் எனக் கூறும் சேக்கிழார் இறுதியாகப் பெற்ற மெய்யான நிலையினை அனுபவ வாயிலாக கண்டுணர்ந்தார். எனவும் காட்டிச் செல்லும் பாங்கு மனங்கொள்ளத்தக்கது.

பிறர் துன்பம் கண்டிரங்கும் மனநிலை ஒருவரிடத்திலே இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். ஒருவர் சொல்லி இன்னொருவர் செய்வதல்ல. திருவீழிமிழலையிலே நாவுக்கரசரும் ஞான சம்பந்தப் பெருமானும் சேர்ந்திருந்த காலத்தே நாட்டில் வறுமை மேலோங்கி பசிப்பிணி ஏற்பட்டது. இவ்வேளை நாட்டு மக்களின் துன்பம் கண்டிரங்கி பசிப்பிணியைப் போக்குவதற்காக இருவரும் படிக்காசு பெற்றனர்.

*"வாசி தீரவே காசு நல்குவீர்*
*மாசின் மிழலையீர் ஏசவில்லையே......"*

என்று பாடிய நிலையில் படிக்காசு பெற்று பசிப்பிணி போக்கினார். இந்நிலையிலும் அன்பு மதமாகிய இந்து மதம் கண்ட மனித நேயமிக்க - நிறைந்த ஒருவராக சம்பந்தர் திகழ்கிறார். இறைவனை இறைஞ்சி வழிபடும் போது

**"கள்ளம் ஒழித்திட வேண்டும்"** என்று அறிவுறுத்துகிறார்.

*"உள்ளம் இச்சையினால் உகந்தேத்தித்*
*தொழுமின் தொண்டர் மெய்யே கள்ளம் ஒழிந்திடுமின்*
*கரவாதிருப் பொழுதும்*
*வெள்ளம் வார்சடை மேற் கரத்திட்ட வெள்ளேற்றாமேயே*
*அள்ளல் அகன்கழனி ஆரூர் அடைவோமே."*

உண்மையாகவே கடவுளை மனத்தினில் தூய அன்போடு ஆழமான இறைபக்தியோடு விரும்பித் துதித்து வணங்க வேண்டும். மனத்தில் கள்ளம் ஒழித்து - வஞ்சம் நீக்கி இறைவனை வழிபடவேண்டும். என அறிவுறுத்தும் தன்மை கவனிக்கத் தக்கதொன்றாகும்.

நோன்பிருத்தலால் உடலை மெலித்து வருத்துவதனைக் காட்டிலும் தூய்மையான - உண்மையான - கடமற்ற தொண்டரிடத்துச் செய்யும் அன்பு தான் முத்தி பெற எளிமையான வழியாகும். அதாவது இறைஞானத்தையும், முத்தியையும் பெற விரும்புபவர்கள்

*"வீடு ஞானமும் வேண்டுதிரேல் விர தங்களால்*
*வாடி ஞானமென் னாவதும்"*

என்று பாடி விரதத்தினாலன்றி ஞான சம்பந்தன் கூறிய செந்தமிழ்ப் பாடல்களை பக்தியோடு பாடுகின்ற ஞானம்மிக்க தொண்டருடைய திருவடிகளை அடைதலே சிறந்த - உயர்ந்த ஞானம் என்கின்றார்.

பெரியோர்கள் முன்னோர்கள் மீது மதிப்புணர்வு கொண்டிருத்தல் வேண்டும் என்ற கருத்துணர்வின் வெளிப்பாடாகவே சம்பந்தர் தமக்கு முன்தோன்றி வாழ்ந்த முன்னோடிகளை

போற்றுகின்றார். பழமை போற்றும் பண்பு அல்லது முன்னோர்புகழ்பாடுதல்எனும்உயரியபண்புஇவரது பாடல்களில் பிரதிபலிக்கக்காணலாம். முன்னோர் நினைவினைப் போற்றுவது அவர்கள் மீதுள்ள மதிப்புணர்வின் வெளிப்பாடாகும். இத்தகைய மதிப்புணர்வினை வெளிப்படுத்துவதனூடாக ஒருவர் தமது செயற்பாடுகளுக்கு ஒரு மரபு சார்ந்த சமூக ஆதரவினையும் தேடிக்கொள்ள முடியும். எனவே தான் சம்பந்தர் புகழ்த்துணை நாயனார், நமிநந்தியடிகள், அமர்நீதி நாயனார், சண்டீசர், கோச் செங்கட்சோழன், மங்கையர்கரசியார் ஆகியோரை தமது பக்திப் பாடல்களிலே பாடியுள்ளார். இவை முன்னோர் புகழ்பாடும் முறைமைக்கு தக்க சான்றுகளாகும்.

**"இருக்கு வேதி"** என பாடல்களிலே தம்மையே போற்றும் ஞானசம்பந்தர் ஒரு கௌண்டின் பிராமண குலத்தைச் சார்ந்தவர். அந்தணர்கள் வாழவேண்டும். வேதியர்கள் வாழ்ந்தால் தேவர்களை யாகங்களால் போற்றுவர். ஆதலால் தேவர்களும் இன்புற்று வாழ்வர். யாகம் இயற்றுவதற்கு அவசியமான நெய், பால் என்பவற்றைத் தருகின்ற பசு இனங்களும் வாழும். எனவே அந்தணர்கள் மேற்கொள்ளும் யாகங்களால் மகிழ்வுறும் தேவர்கள் மழையைப் பொழிவர். மழைவளம் பெருக வரப்பு உயரும் மன்னனும் ஓங்கித்திளைப்பான். மன்னன் ஓங்கி உயர்ந்து வாழும் போது நாட்டில் தீமை உண்டாகாதவாறு காப்பான். தீயனவெல்லாம் ஒழிந்துவிடும். அரசனும் குடிகளும் தீமையின்றி துன்பமின்றி வாழும் போது இறைவனது திருநாமம் தழைக்கும். இறை நாம மகிமையால் உலகியல் வாழும். மக்கள் துன்பம் களைத்து இன்புமுற்று வாழ்வர்.

பிறர் குறைகளைக் கண்டு இரங்குவது மானுடநேய - மனிதப் பண்பாகும். சம்பந்தரும் தான் சென்ற வழிகளில் ஆங்காங்கே மக்களுக்கு ஏற்பட்ட கொடிய நோய்களையும் - துன்பங்களையும் கண்டு மனமிரங்கியவராவர். மனம் இரங்கியதோடு மட்டும் நின்று விடாது இறையருளால் அவற்றை தீர்த்து வைத்துள்ளார். கொடிமாடச் செங்குன்றூரில் குளிர்ச்சுரத்தால் மக்கள் துன்புற்ற போது மக்களைக் குளிர் துன்புறுத்தாதவாறு இறைவனை வேண்டி

*"அவ்வினைக்கு இவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர்......."*

என்னும் பதிகம்பாடி குளிச்சுரத்தை போக்கிய மையும், திருப்பாச்சிலாச்சிரமம் என்ற தலத்தில் கொல்லி மழவன் என்பவனுடைய மக்களை பீடித்திருந்த முயலகன் நோயினை மன்னனின் வேண்டுகோளின் படி

*"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்சடை........."*

என்னும் பதிகம்பாடி இறையருளால் நோயினைக் குணப்படுத்தியமையும், கூன் பாண்டியனின் உடலில் தோன்றிய வெப்பு நோயை நீக்குமாறு கிடைத்த மன்னனின் அழைப்பினால் திருநீற்றை மன்னன் உடலில் தடவி

*மந்திரமாவது நீறு*
*வானவர் மேலது நீறு*
*சுந்தரம் ஆவது நீறு.........."*

என்ற நீற்றுப்பதிகம் பாடி இறையருளால் வெம்மையும், கூனையும் போக்கியமையும் தக்க சான்றுகளாகும். இவ்வகையில் பிறர் வருத்தும் துன்பங்களைக் கண்டிரங்கி உதவுதல் வேண்டும் என்ற விழுமிய சிந்தனையை, உயர்ந்த மனிதப் பண்பினை தானும் கடைப்பிடித்து பிறருக்கும் காட்டியும் சென்ற ஒருவராக சம்பந்தர் திகழ்கின்றார்.



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

மன்னர் வழியே மக்களும் என்பதனை உணர்ந்த தீர்க்கதரிஷியான சம்பந்தர் பாண்டிய மன்னனை தனது இறைபக்தியினாலும், இறைவன் அருளினாலும் குணப்படுத்தினார். திருநீற்று மகிமையால் மன்னன் வெப்பு நோயும், கூனும் நீங்கியது. மன்னனும் மெய்கண்டு மதம் மாற மக்களும் அவனைப் பின்தொடர பாண்டி நாட்டில் மீண்டும் சைவம் தளைத்தது.

*"வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு*
*போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு*
*ஓதத் தருவது நீறு உண்மையில் உள்ளது நீறு*
*சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆலவாயன் திருநீறே"*

*"முத்தி தருவது நீறு முனிவரனிவது நீறு*
*சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே"*

என்று பாடி திருநீற்றின் மகிமைத் தன்மையினை உணர்த்தி திருநீற்றினாலும், திருவைந்தெழுத்தென்னும் இறை நாமத்தினாலும் இறை நாமத்தினாலும் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார். ஆகவே சைவர்களாகிய நாமும் திருநீற்றையும், இறைநாமமாகிய திருவைந்தெழுத்தையும் நாளும் பேணிப் போற்றி பாதுகாத்து வந்தால் வாழ்க்கைப் பயணத்தில் அஞ்சவேண்டிய அவசியமில்லை. என்று காட்டிய சம்பந்தரின் உயரிய நெறி நல்வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறியாகும்.

இறைவன் மீது தீராக் காதல் கொண்டு கண்களிலே நீர் சொரிய, உடல் சிலிர்ப்ப, நாத்தழுதழுப்ப, தூயஉள்ளத்தோடு, வேதப் பொருளின் முடிவாக விளங்கும் இறைவனின் நாமமாகத் திகழும் திருவைந்தெழுத்து மந்திரத்தினை ஓதுபவர்களுக்கு நன்னெறி உயர்நெறி கிட்டும் எனும் உயர்சைவ விழுமியப் பண்பினையும் கூறிச்செல்கின்றார்.

இந்திய சமயங்களின் அடிப்படைக் கருத்து **"பிறவியின் பயன் வீடுபேறு"** அடைதலாகும். சமய நூல்களல்லாத ஏனைய பொது நூல்களிலும் நூலின் பயன் வீடுபேறடைவதே என்பதாகக் கூறப்படுகின்றது. இவ்வுலகியலிலே வாழ்வாங்கு வாழ்ந்து இறுதி நிலையில் வீடுபேறடைவது வாழ்க்கையின் குறிக்கோளாகும். வேதத்தை ஒப்புக் கொள்ளும் வைதீக சமயங்கள் யாவும் முத்திப் பேற்றுக்கு ஞானம் பெறவேண்டும். எனக் கூறுகின்றன. இத்தகைய உயர்ஞானம் வேதம் ஓதுவதனால் கிடைக்கும். வேதமோதும் ஞானம் உயர் வர்ணத்தார்க்கே உரியது. சமண பௌத்த மதங்களின் எழுச்சி இத்தகைய வேதச்செயலையும், வர்ணக்கோட்பாட்டையும் நிராகரித்து எதிர்த்தன. அத்துடன் மானிட வாழ்வின் உயர்நோக்கம் முத்திப்பேறுதான். இதனை துறவில் அறத்தை கடைப்பிடிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கொள்கை வகுத்தன. இத்தகையோர் சமூகச் சூழலில் வாழ்ந்த சம்பந்தர் "முத்தி எளிதாம்" எனக் குறிப்பிட்டு யாவரையும் தன் பக்கம் ஈர்த்துக்கொள்கின்றார். சம்பந்தரின் கருத்தின்படி சிவனின் திருவடி சேர்வது தான் வீடுபேறாகும். தேவாரப் பதிகங்களில் பல இடங்களிலே "வீடுபேறு எளிதாமே" என மீண்டும் மீண்டும் கூறுகின்றார். இறைவனை நினைத்து இடைவிடாது வணங்குபவர்களுக்கு வீடுபேறு உறுதி என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார்.

*"ஏடகத்து ஐயனை அடிபணிந்து அரற்றுமின்*
*அடர்தரும் வெய்யவன் பிணி கெட வீடு எளிது*
*ஆகுமே"*

எனப் பாடுகின்றார்.

இவ்வகையிலே சம்பந்தர் வீடுபேறு மிக எளியதாகும் என்பதனைக் கூறியவாறு செய்தார். இறையருளே இதனைச் செய்தது. வைதீக தத்துவ மரபிலே முதன் முதலிலே வீடுபேற்று நிலையினை அனைவருக்கும் உரியதொன்றாக கூறி அது மிக எளிமையான நெறியென்று

சொன்னவர்கள், அங்ஙனம் சொன்னவண்ணம் செய்தவர்கள் சம்பந்தரைத்தவிர வேறு யாரும் இல்லை என்னும் உண்மையினை ஞானசம்பந்தரது வரலாற்றை அறியும் யாவரும் உணர்ந்து கொள்வர்.

முடிவுரை

மனிதனை மனிதனாக வாழவைப்பது மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பது சைவ விழுமியங்களாகும். விழுமியங்கள் தர்மம் எனவும் அறம் எனவும் அழைக்கப்படுவன. வேதம் கூறும் **"ரிதம்"** என்னும் சொல்லே பிற்கால அறக்கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்ததாகும். பிற்காலத்தில் காலம் காலமாக எழுந்த இந்து இலக்கியங்களும், இந்துசமயப் பெருமைகளை நிலைநாட்டத் தோன்றிய நாயன்மார்களும், சமயப் பெரியவர்களும் ஆன்மீகத் தலைவர்களும், சைவவிழுமியங்களைப் போதித்துச் சென்றனர். இவ்வகையிலே, சைவர்களாகிய எமக்கு காலம் தந்த கவுணியக்கன்றாகிய சம்பந்தரும் வேதநெறி தழைக்கவும் சைவத்துறை உயர்வுற்று பரவவும் - சைவர்கள் சமமாய் வாழவும் - உலகியல் மனிதநேயம் மதிக்கப்படவும் பல விழுமியங்களை காட்டியும், கடைப்பிடித்தும் சென்றுள்ளார். இவையாவும் நாம் எமது வாழ்வில் கடைப்பிடித்து உயர்வு பெற்று உய்வு பெறுவதற்குரிய உயர்ந்த பண்புகளே எனில் மிகையில்லை.



**விஷ்ணு படிமம்**

# தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு

திரு. பு. அருள்நேசன்

## நோக்கம்

தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இந் நாடுகளில் அகத்தியர் வழிபாடும் செல்வாக்குப் பெற்றிருந்தது. கம்போடியா, யாவா(இந்தோனேசியா) ஆகிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு முதன்மை பெற்றிருந்தது. இதற்கு காரணம், இந் நாடுகளில் இந்து சமயத்தினை பரப்பியவராக அகத்தியர் கொள்ளப்படுவதாகும். இதனால் அகத்தியர் இங்கு சிவகுரு, பாரதகுரு, பட்டார குரு, குட முனி என மறு பெயர்களால் அழைக்கப்படுகின்றார். இவ்வாறாக இந்நாடுகளில் முதன்மை பெற்றிருந்த அகத்தியர் வழிபாட்டினை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

## அறிமுகம்

அகத்தியர் என்றதும் நமது நினைவில் வருபவர் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தவர், முத்தமிழுக்கும் முறைமை சொன்னவர், தமிழ் முனி என்று தமிழிலக்கியங்களிற் புகழ்ந்து உரைக்கப்படும் மாமனிதர். புராணங்கள், இதிகாசங்கள், பண்டைய தமிழ்நூல்கள், வரலாற்று நூல்கள், என்பவற்றிலும் அகத்தியர் என்ற பெயர் காணப்படுகின்றது. இதன் மூலமாக அகத்தியர் என்ற பெயர் கொண்ட பலர் காலத்திற்குக் காலம் வாழ்ந்து வந்திருப்பதாகத் தோன்றுகிறது. இதனையே Heritage of the Tamil Siddha Medicine என்னும் நூலின் ஆசிரியரான சுப்பிரமணியன் மேல்வருமாறு கூறுகின்றார்.

*"சமஸ்கிருத நூல்களிற் குறிப்பிடப் பட்டுள்ள அகத்தியர்கள், வசிஷ்டர்கள், விசுவாமித்திரர்கள் ஆகியோர் ஒவ்வொரு காலகட்டத்திலும்தோன்றி மறைந்துமீண்டும் தோன்றி அந்நூல்களைப் படிப்போரைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றனர். இவர்கள் ஒரே அகத்தியர், ஒரே வசிஷ்டர், ஒரே விசுவாமித்திரர் அன்று அவர்கள் யாவரும் இப்பெயர்களைக் குடும்பப்பெயர்களாகக் கொண்டு தொடர்வரிசையாகத் தோன்றிய பல்வேறு மனிதர்களாவர்."*

மேலும் அகத்தியர் என்ற பெயரில் பல்வேறு காலங்களில் பலர் வாழ்ந்திருந்து சாதனைகள் பல புரிந்துள்ளமை தெளிவாகின்றது. குறிப்பாக அகத்தியர் என்ற பெயர் கொண்ட புலவர்களும், முனிவர்களும், சித்தர்களும், மருத்துவர்களும், சாதாரண மனிதர்களும், அரசியல் தூதுவர்களும், காலத்துக்குக் காலம் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் காலத்துக்குக் காலம் பல துறைகளிற் சாதனைகள் புரிந்துள்ளமையினைக் காணலாம். இதனையே Siddhars Seience Longevity and Kalpa Medicine in India என்ற நூலின் ஆசிரியர் சண்முகவேலன் என்பவர் மேல்வருமாறு கருத்தினைக் கூறியுள்ளார்.

*"மருத்துவம், சோதிடம், தத்துவம், இரசவாதம், முதலிய பல்வேறு துறையில் பல ஆய்வேடுகள் அகத்தியரால் எழுதப்பட்டவை எனக் கூறப்படுகின்றது. ஆனால் இவற்றை அகத்தியரால் எழுதப்பட்ட மூல நூல்களாகக் கருத முடியாது. அவை யாவும் பின்னைய ஆசிரியர்களால் எழுதப்பட்டு அகத்தியர் என்ற பெயரில் உரித்தாக்கப்பட்டவையாகும்."*

தென் கிழக்காசிய நாடுகளில் அகத்தியர்.

அகத்தியர்களது இப் பணிகள் தமிழகத்தில் மட்டுமின்றி இந்துப் பண்பாடு பரவியிருந்த கடல் கடந்த நாடுகளிலும் பரவியிருந்ததைக் காணலாம். அந்த வகையில் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியிருந்த அகத்தியர் வழி பாட்டினை வரலாறுகள் தொல்லியல் சான்றுகள் என்பவற்றின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

## கம்போடியா

கம்போடியாவில் ஒரு செவி வழிச் செய்தி உள்ளது. அகத்தியர் தமிழ் நாட்டிலிருந்து அங்கே வந்தார். அரசமரபு ஒன்றைத் தோற்றுவித்தார் என்பதே அச்செய்தி என திரு. அ. நீலகண்டசாஸ்திரி அவர்கள் கூறுகின்றார். இவ் அகத்தியர் பற்றி Hindu Colony of Cambodia என்ற நூலின் ஆசிரியர் திரு. பனீந்திரநாத் போஸ் என்பவர் மேல்வருமாறு கூறியுள்ளார்.

> *"வடதேசத்தில் அகத்தியன் என்னும் பெயரையுடைய பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் வடமொழி, தென் மொழிகளில் வல்லவன். அகத்தியன் கடல் கடந்து கம்போடியா நாட்டுக்குச் சென்று அங்கே அந்த நாட்டு அரசனாக அப்போது இருந்த யசோவர்மன் என்பவனுக்கு உற்ற நண்பன் ஆனான். இதனால் இவ் அகத்தியர் யசோமதி அகத்தியர் என்றழைக்கப்படுகின்றார்.*

இவ் அகத்தியன் கல்வியிலும், ஒழுக்கத்திலும், உருவிலும், அரசியல் அறிவிலும், சிறந்து இருப்பதை அரசன் கண்டு தன் குமாரியாகிய யசோமதியை அகத்தியனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். யசோமதிக்கும், அகத்தியருக்கும் நரேந்திரவர்மன் என்ற ஆணும், நரேந்திர இலக்குமி என்ற பெண்ணும் பிறந்தார்கள். இதனையே

> *"வேதங்களில் வல்ல பிராமணராகிய அகத்தியர் ஆரிய பூமியிலிருந்து வந்து மகிட வம்சத்திலுள்ள யசோமதியை மணந்து ஒரு மகனைப் பெற்றார். அவன் நரேந்திரவர்மன் எனப்படுவான்."*

என கம்போடியாவில் சக ஆண்டு 811 இல் எழுதப்பட்ட கல்வெட்டுக் கூறுகின்றது. இவ் அரச பரம்பரை பற்றி ஏனைய பட்டயங்களும் கூறுகின்றன. யசோவர்மன் இறந்ததும் நரேந்திரவர்மன் **"நரேந்திர ஆரிய"** என்ற பட்டத்தை வகித்து முடிசூட்டிக்கொண்டு ஆட்சி புரிந்தான். நரேந்திரனுடைய தங்கை நரேந்திர இலக்குமி இராஜபதிவர்மன் என்ற அரசனை மணந்தான். நரேந்திர இலக்குமிக்கு இராஜேந்திரதேவி என்ற ஒரு பெண் பிறந்தாள். இராஜேந்திரதேவியை இரண்டாம் ஜயவர்மனுக்கு (820-850) (பரமேஸ்வரன்) கல்யாணம் செய்து கொடுத்தார்கள். இந்த இரண்டாம் ஜயவர்மன் காலத்தில் கம்போடியா மிகப் பிரபலமாக வளர்ச்சி அடைந்தது. இவனே புகழ் பெற்ற அங்கோர் இராச்சியத்தை அமைத்தான்.

இவனுக்குப் பின் ஆட்சி செய்த இரண்டாம் இந்திரவர்மன் (ஈஸ்வரலோகன் - 877-889) தான் அகத்தியர் வழியில் வந்தவன் என்று தன்னைக் கூறிக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் அகத்தியர் கம்போடியாவிலுள்ள சிவன் கோவிலில் உள்ள பத்திலோகேசுவரர் என்னும் இலிங்கத்தையும், ஜாவாவிலுள்ள சிவன் கோவிலின் பட்டராக ஈஸ்வரர் என்ற சிவலிங்கத்தையும் பூசித்துப் பேறு பெற்றார் என்று அந்நாட்டுச் சரித்திரம் கூறுகின்றது. இவர் மலாய தீபகற்பத்திலுள்ள (மலேசியா) மலய மலையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு சில நாள் அங்கு தங்கியிருந்ததற்கு அங்கே அடையாளங்கள் காணப்படுகின்றன.

*அகத்தியர் போர்ணியோ, சுந்தாத் தீவுகளுக்கும், மலாய தீவுகளுக்கும், சாவகம் முதலிய தீவுகளுக்கும் சென்றார் எனவும், மலாய தீவில் மலைய பர்வதத்தில் இருப்பவர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.*

மலேசியாவின் பெராங்கு மாநிலத்தில் அகத்தியரின் வெண்கலச்சிலை கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாடி, உருத்திராட்ச மாலை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்ட வராக வயிறு பெருத்தவராக, தியானம் செய்யும் நிலையில் அவரின் கோலத்தை வடிவமைத்துள்ளனர். இது அகத்தியரின் சிலையாக இருக்கலாம் என்று குவாரிட்ச்வேல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

**யாவா (இந்தோனேசியா)**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அகத்தியர் இந்தியாவிலிருந்து யாவாவிற்கு வந்து குடியேறியதாகக் கதை ஒன்று அங்கும் வழங்கி வருகின்றது. எனினும் யாவாவிற்கு அகத்தியர் ஈழத்தின் குஞ்சரகிரியிலிருந்து வந்து குடியேறியதாகக் கதை ஒன்று அங்கு வழங்கி வருகின்றது. ஈழநாட்டின் தென் பாகத்தில் குஞ்சரமலையில் அகத்தியர் ஆச்சிரமம் இராமயண காலத்திலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கின்றது. இவ் ஆச்சிரமம் பற்றிய குறிப்புக்கள் வால்மீகி இராமாயணத்திலும், வியாசரின் அரிவம்சத்திலும் காணப்படுகின்றன. அற்புத சக்தி வாய்க்கப்பெற்ற ஒளிமயமான இலிங்கமொன்று குஞ்சர குஞ்சதேசத்திலிருந்து யாவாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டமை பற்றிய குறிப்பு சங்க கல்வெட்டிற் காணப்படுகின்றது.

*"கி.பி ஏழாம் நூற்றாண்டில் குஞ்சரமலை ஆச்சிரமத்தில் இருந்த அகத்தியர் ஜாவா நாட்டிற்குச் சென்று அந்நாட்டு அரசனையும் சில பெருங்குடி மக்களையும், இந்து சமயத்தை தழுவும் படி செய்து தாமே அவர்களுக்குச் சில காலம் குருவாகவும் இருந்தார்.*

என "அகத்தியர் வரலாறு" என்ற நூலின் ஆசிரியர் திரு. அ. சிதம்பரனார் கூறுகின்றார். இவ் அகத்தியர் குஞ்சரக்கிரி அகத்தியர் என்றழைக்கப்படுகின்றார். அவர் யாவா நாட்டில் சில காலம் தங்கி பக்கத்திலுள்ள பலி முதலிய தீவுகளிலும் இந்து சமயத்தினைப் பரப்பி வந்தார் எனச் சாசன ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இதன் மூலமாக இந்நாட்டில் அகத்தியர் மரபைச் சேர்ந்த "அகத்தியர் கோத்திரத்தார்" அல்லது "ஆசுவலாயன சூத்திரத்தார்" என்ற அரச பரம்பரை தோற்றம் பெற்றது. ஆஸ் லாயனகிருஹய சூத்திரத்திற் சொல்லப்படும் 49 (நாற்பத்தொன்பது) பிராமண கோத்திரங்களுள் அகத்திய கோத்திரம் காணப்படுகின்றது. இவர்களால் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. அரசர்களாகவும் அவர்கள் இருந்துள்ளனர். இதனை கல்வெட்டுக்கள் மூலமாக அறிய முடிகின்றது. யாவாவிலுள்ள 732 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு இதனை உறுதி செய்கின்றது. குறிப்பாக யாவாவின் பிரம்பனத்துக்குச் சற்றுத் தெற்கே கிரது பகப்பீட பூமியிற் கிடைத்த மூன்று வடமொழிக் கல்வெட்டுக்கள் அகத்தியரின் மறுபெயரினைக் கொண்ட கும்பயோனி என்ற மன்னன் அமைத்த இலிங்கங்களைப் பற்றி கூறுகின்றன.

கிழக்கு யாவாவின் தினயா என்ற இடத்திலுள்ள 740ஆம் ஆண்டு கல்வெட்டொன்று பொதிய மலையில் தவம் செய்த அகத்தியருக்குச் சிலை நிறுவப்பட்டது என்று குறிப்பிடுகின்றது. குறிப்பாக மகாராஜா தேவசிம்ஹ, அவனது மகள் கஜயான, கஜயானவின் மகனான உத்தேஜன என்போரின் பெயர்கள் அந்தச் சாசனத்திற் காணப்படுகின்றன. உத்தேஜனாவின் மகன் அரசராயிருந்த காலத்தில் அகத்தியரின் கற்படிமமொன்று ஸ்தாபனஞ் செய்யப்பட்டது. அதற்குரிய சடங்குகளை வேத விற்பன்னர்கள் செய்தனர். அவற்றைப் பற்றிய விபரங்கள் சிலாசனமாக எழுதப்பட்டுள்ளன.

கி.பி 760 ஆம் ஆண்டு கல்வெட்டொன்று கிழக்கு யாவாவிற் கண்டுபிடிக்கப்பட்டது. இது சந்தன மரத்தினாற் செய்யப்பட்ட அகத்தியரின் திருவுருவத்தைப் பற்றிக் கூறுகின்றது. அச்சாசனம் வருமாறு கூறுகின்றது.

> *"தனது முன்னோரால் சந்தன மரத்தால் செய்யப்பட்ட அகத்தியர் திருவடிவம் விழுந்த போது கல்வி அறிவுள்ள அரசன் கருங்கல்லில் அவ் வடிவத்தை அமைக்கும்படி சிற்பிகளுக்கு கட்டளையிட்டான். அரசன் கும்பயோனியாகிய அகத்தியர் திருவுருவத்தைக் குருமார், வேதம் அறிந்த முனிவர்கள் முதலியவர்களால் பிரதிட்டை செய்வித்தான்."*

என்கின்றது. மேலும் யாவா நாட்டுச் சாசனம் ஒன்றில்

> *"எல்லா மக்களும் தாம் விரும்பியவற்றைப் பெறுமாறு அகத்தியர் வரதலோகம் என்னும் கோவில் திருப்பணியைச் செய்தார்"*

என்று கூறுகின்றது.

யாவாவில் அகத்தியர் கலசயோனி, கும்பயோனி, சர்வக்ஞ, மித்திரவர்ணமித்திர என மறு பெயர்களால் அமைக்கப்பட்டார். தென் கிழக்காசிய நாடுகளில் யாவாவில் தான் அதிகமான அகத்தியர் சிலைகள் கிடைத்துள்ளன. இதனால் அகத்தியர் அங்கு வணங்கப்பட்டார் என்பது தெளிவாகின்றது. இவ் அகத்தியர் நீண்ட தாடி, சடைமுடி, பெருத்த வயிறு, குறுகிய வடிவம், கையில் கமண்டலம், ஜபமாலை ஆகியவற்றைக் கொண்ட தோற்றத்துடன் காணப்படுகின்றார். இதில் தென்யாவாவின் கெடோயிலே தஞ்சிபெனன் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அகத்தியர் சிலை முதன்மையானதாகும்.

கிழக்கு ஜாவாவில் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிற் பிரம்பனம் இராசதானியாக இருந்த பொழுது பிரம்பனம் கோவில்கள் (910-19) அமைக்கப்பட்டன. இக்கோயிலின் அழிபாடுகளிடையே இந்து சமய தெய்வங்களின் படிமங்களுடன் அகத்தியரின் உருவங்களும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவை தவிர சிங்காசாரி கோயிலிலும் அகத்தியர் சிலைகள் காணப்படுகின்றன. கிழக்குப் போர்ணியோவின் காமெங் குகையில் அகத்தியர் வடிவம் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு முதன்மை பெற்றிருந்தமையினைக் காணலாம். இந் நாடுகளில் அகத்தியர் இந்து சமயத்தின் பாதுகாவலராகவும், அரசியல் தூதுவராகவும், செல்வாக்குப் பெற்றிருந்ததுடன் தென் கிழக்காசிய நாடுகளிலுள்ள இந்துக் கோயில்களில் அகத்தியருக்கு கோயில்களும், சிலைகளும் அமைக்கப்பட்டுக் கிரியைகள் இடம்பெற்றமையினையும் காணலாம்.

# உருத்திராட்சம்

சிவனைக் குறிக்கும் அடையாளங்களைச் சிவசின்னம் என்பர். அந்த வகையில் திருநீறு, உருத்திராட்சம் என்பன சிவ சின்னங்களாகும் இவ்விரு சின்னங்களும் ஒவ்வொருவரும் அணியப்பட வேண்டியவையாகும். திருநீறு வியர்வைகளாலும் வேலைகள் செய்வதினாலும் ஒருவரிடத்திலிருந்து நீங்கி விடலாம். ஆனால் எந்நேரமும் நீங்காது தரித்திருக்கும் சின்னம் உருத்திராட்சம் ஆகும்.

மகாருத்திரமூர்த்தி முருகனுக்குக் கூறும் போது உருத்திராட்சம் என்பது உருத்திரனின் கண் என்கிறார். முன்னொரு காலத்திலே திரிபுரத்து அசுரர்கள் செய்த கொடுமைகளைத் தாங்கவொண்ணாத தேவர்கள் என்னிடம் வந்து முறையிட்டபோது யான் கண்களை மூடி ஆயிரம் திவ்விய வருசங்கள் மகா மந்திரத்தைச் சிந்தனை செய்து கண்களைத் திறந்த போது அசுரர்கள் அழிந்தனர். எனது மூன்று கண்களிலிருந்தும் ஜலத்துளிகள் வீழ்ந்தன. அத்துளிகளில் இருந்து உருத்திராட்ச விருட்சம் உண்டாயின. அதன் பழங்களே (பெரிப்பழம்) உருத்திராட்சமாயின. வலது சூரியக் கண்ணிலிருந்து பன்னிரண்டு வகையான விருட்சம் தோன்றியது. இவை கபில நிற மணிகள் இடது கண்ணாகிய சந்திரக் கண்ணிலிருந்து பதினாறு வகையான விருட்சம் தோன்றிது. இவை வெள்ளை நிற மணிகள். இம்மரங்கள் இந்தோனேசியா, கிழக்காசியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பசுபிக்தீவுகள், நேபாளம், இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் காணப்படுகின்றது. இப்போ மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில், தெல்லிப்பழை துர்க்காதேவி கோயில், அளவெட்டி நாகவரத நாராயணர் கோயில் போன்ற இடங்களிலும் வளர்க்கப்படுகிறது.

உருத்திரனின் கண்ணில் இருந்து தோன்றியமையால் உருத்திராட்சம் என்று அழைக்கப்படுகின்றது. அஷ்டம் என்றால் கண் எனப் பொருள்படும். இதனால் அட்ச மணி அக்குமணி சிவமணி, கண்மணி எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. பாவங்களைக் கண்டிப்பதால் கண்டிகை என்றும் அழைப்பர்.

இம் மணிகள் ஒன்று முதல் 16 முகம் வரை காணப்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 25 முகம் வரை காணப்படுகிறது என்கிறார். இவ்வாறு முப்பத்தெட்டு வகை உருத்திராட்சம் உண்டு. இம் முக மணிகளையும் அதிதேவதைகளையும் இவ் உருத்திராட்ச மணிகளை அணிவதால் நீங்கும் தோஷங்களையும் உருவாக்கும் மங்களங்களையும் சுருக்கமாக நோக்குவோம்.

| | அதிதேவதை | நீங்குபவை | நற்பலன் |
|---|---|---|---|
| ஒருமுகம் | சிவரூபம் | பிரமகத்திதோசம் நீங்கும். | மங்களம்,செல்வம் உண்டாகும். |
| இருமுகம் | அர்த்தநாரி | சகலபாவங்களும் நீங்கும். | பிதிர்களின் சாபம் நீங்கும். |
| மூன்றுமுகம் | அக்கினி | ஸ்திரீதோசம் நீங்கும். | குழந்தைப்பேறு உண்டாகும். |
| நான்குமுகம் | பிரம்மன் | நரகர்களால் ஏற்படும் பிரமகத்திதோசம் நீங்கும். | எதிர்பாலர் கவரப்படுவர். இனபந்துக்களின் உறவு உண்டாகும். |
| ஐந்துமுகம் | காலாக்கினி | பெண்களின் உறவினால் வரும் பாவம் நீங்கும். | மனஅமைதி உண்டாகும். |

| | | | |
|---|---|---|---|
| ஆறுமுகம் | முருகன் | தாய்,தந்தை சகோதரர், பாவம் நீங்கும் | ஆயுள், குழந்தைப்பாக்கியம் கிட்டும் உணவுகிடைக்கும், இலாபம்கிடைக்கும் |
| ஏழுமுகம் | மன்மதன் | கனவு முதலியவற்றால் உண்டாகும் பாவம் போகும். | பொன், இரத்தினம் போன்ற கிடைக்கும் ஆயுதங்களைத் தாக்காது தடுக்கும். |
| எட்டுமுகம் | விநாயகர் | முதற் பிறப்பின் பஞ்சமா பாதக பாவம் நீங்கும். | அதிஷ்ரம் கிடைக்கும் |
| ஒன்பதுமுகம் | வைரவர் | பாவங்கள் நீங்கும். | புத்திமுத்தி சிவகுணம் கிடைக்கும் வாக்குச் சாதுர்யம் அதிகரிக்கும். |
| பத்துமுகம் | விஷ்ணு | கிரகபைசாச,பூத,ராட்சத துன்பம் நீங்கும். | பல குடும்பங்கள் உயர்வடையும். |
| பதினொருமுகம் | உருத்திரர் ஏகாதசருத்திரர் | விக்கினங்கள் நீங்கும் | அஸ்வமேதயாகப்பலன் கிடைக்கும் |
| பன்னிரெண்டுமுகம் | ஆதித்தர் | மிருக, ஆயுத, சர்ப்ப பயம் நீங்கும். | மனமகிழ்ச்சி உண்டாகும். |
| பதின்மூன்றுமுகம் | பரமசிவன் | பெற்றோர், சகோதரரைக் கொன்ற பாவம் நீங்கும். | நல்வாழ்வு கிடைக்கும் |
| பதின்நான்குமுகம் | சதாசிவன் | வினைகள் நீங்கும் | மோட்சம் உண்டாகும். |

14.18 முகமணிகளை வைத்து தூபதீபம் காட்டிப் பூஜித்தால் சிவபூஜைப் பலன் கிடைக்கும். இவ்வாறு உருத்திராட்சங்களை அணிவதால் எவ்வகைப்பட்ட பாவங்களானாலும் போக்கிக் கொள்ளலாம்.

சிவனடியார்கள் இவ் உருத்திராட்சத்தை தம் உடலில் அணிந்து கொள்வார். சிவனடியார் இலக்கணம் கூறும்பொழுது **"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே......."** என்றும் **"மாசிலாத மணிதிகழ் மேனிமேல் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்........."** என்றும் சேக்கிழார் கூறுகிறார். அதாவது **"தியானத்யாத்ரு தேய ரூபா"** என்பதற்கிணங்க உருத்திராக்கத்தை அணிபவன் உருத்திரனே ஆகிறான். என்பது தெளிவாகின்றது.

திருநாவுக்கரசு நாயனார் சிவனடியார்களது பொலிவினைக் கூறுகின்ற பொழுது சிவ சின்னங்களுடன் சிவபெருமானின் சேவடியைச் சிந்தனை செய்பவராகவும் இருப்பர். என்கின்றார்.

**"தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்**

**நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகி......"**

என்னும் போது உருத்திராட்சம் தாள் வடம் எனச் சுட்டப்படுவதனைக் காணலாம்.

சைவர்கள் கூடுதலாக ஐந்து முக உருத்திராட்சத்தையும், கௌமார்கள் ஆறு முக உருத்திராட்சத்தையும் அணிவர். திருஞானசம்பந்தர் நமச்சிவாயப் பதிகத்திலே உருத்திராக்கத்தைக் காண (தரிசிக்க), தொட, அணிய, பாவங்கள் நீங்குவதோடு பிறவியே நீங்கும் என்கிறார்.

***நெக்கு ஊர்வம் மிகப் பெருகி நினைந்து அக்கு மலைகளோடு அங்கையில் எண்ணுவார்."***

உருத்திராட்சமானது தலை, காது, கழுத்து, மார்பு, புயம், மணிக்கட்டு, ஆகிய உறுப்புக்களில் அணியத்தக்கது. மாலைகளைக் கோர்க்கும் போது இந்த எண்ணிக்கை மாறக்கூடாது. இது 8/9ன் மடங்கில் இருப்பதைக் காணலாம். அதாவது உச்சியாகிய குடுமியில் 1 மணியும் தலையில் 36 மணிகளையும் காதுகள் ஒவ்வொன்றுக்கும் 1/3/6 மணிகளும், கழுத்து 1/27/32 (சிவாகமம் 28 + வேதம் 4) மணியும் மார்பு 54/108 மணியும் தனித்தனியே புயத்தில் 16 மணிக்கட்டில் 12 மணிகளும் பூணூலில் ஒரு மணியும் அணியவேண்டும். மேற்கூறிய 7 உறுப்புக்கள் தவிர வேறு உறுப்புக்களில் உருத்திராட்சம் அணிதல் குற்றமாகும்.

உருத்திராட்ச மணிகளை பட்டுநூல், தங்கம், வெள்ளி, பித்தளை, செப்புநூல் (கம்பி) போன்றவற்றில் மாலைகளாக கோர்க்கலாம். ஆனால் ஒரு உருத்திராக்கம் மற்றைய மணிகளுடன் முட்டதொடுக்கக் கூடாது. இதற்காக இடையில் பவளம் ஸ்படிகம், பொன்மணி, முத்து, தாமரைமணி போன்றவற்றை விருப்பப்படி கோர்க்கலாம். மேலும் மாலைகளைக் கோர்க்கும் போது ஒரேயளவான உருத்திராட்ச மணிகளையே பயன்படுத்த வேண்டும். மேலும் உருத்திராட்ச மணியின் துளைப்பக்கங்கள் இரண்டிற்கும் பொன், வெள்ளி கவசத்தகடுகளை இணைக்கலாம். ஆனால் அவை உருத்திராட்சத்தின் பெரும் பகுதியை மறைக்கக்கூடாது. இம்மாலைகளை கோர்க்கும் போது பஞ்சாட்சரமந்திரம், தோத்திரங்கள் என்பவற்றை ஓதிக்கொண்டே இருக்க வேண்டும். மேலும் ஒரு முகம் முதல் 21 முகங்கள் வரை அமைந்த உருத்திராட்சங்களைக் கோர்த்துச் செய்வது **"இந்திர மாலை"** எனப்படும். இது உருத்திராட்ச மாலைகளில் மிக உயர்ந்தது, சிறந்தது வரமற்ற பலனைத்தரக்கூடியது.

மார்பில் அணியும் 54/108 மணிகளைக் கொண்ட தாழ்வடத்தை ஜபமாலையாகப் பயன்படுத்தலாம். இங்கு பஞ்சாட்சரமந்திரத்தை ஜபிக்கும் போது அதன் எண்ணிக்கை முக்கியமாதலால் இம்மணிகளைத் தொட்டுத் தொட்டு நமசிவாய என உச்சரித்து எண்ணிக் கொள்வர். ஜபம் செய்யும் வேளையில் உருத்திராட்ச மாலையை மறைத்து வைத்துக்காண்டு எண்ணுதல் வேண்டும்.

உருத்திராட்ச மணிகளை யாரும் அணியலாம் சிவாய நம என்று நீறணிந்து ஓம் நமசிவாய என உச்சரித்துக்கொண்டு அணிதல் வேண்டும். தீயஎண்ணங்கள் இல்லாதவர், கடவுள் நம்பிக்கையுடையவர் எவரும் அணியலாம் என்றாலும் உருத்திராட்சம் சிவனுடன் நெருங்கிய தொடர்புடையதால் சிவபூசைக் காரியங்கள் செய்யும் போது கட்டாயம் அணியவேண்டும்.

*பூணாமல் கண்டிகையினை பூசைபுரிவார் பலத்தைக்
காணார் எனவே கழலுமறை - நாணாதே
பூண்டு சிவபூசை புரிவார் புகுந்து மேற்புரத்துக்
கண்டிருப்பார் ஈசன் கழல்.*

உருத்திராக்க வசிட்டம்.

*பரமசிவன் அமலன் பக்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டியும் நீறும்.
பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காண்பதற்குக் கூசும் அரன் கைத்து*

- சைவ சமய நெறி

மேலும் தீர்த்தமாடும் போதும் சந்தியா வந்தனத்தின் போதும், சிவமந்திர ஜெபத்தின் போதும் சிவத்தியானத்தின் போதும் சிவபுராணத்தைப்படிக்கும் போதும் பிறர் சிவபுராணத்தை படிக்கக்கேட்கும் போதும் பன்னிருதிருமுறைப் பாராயணத்தின் போதும், சைவசமயச்சொற்பொழிவின் போதும் கட்டாயம் உருத்திராட்ச மாலைகளை அணிதல் வேண்டும். தாய் பிள்ளையின் நோய்க்காகப் மருந்துண்பது போல் சிவனே உருத்திராட்ச மாலைகளை அணிந்திருக்கின்றான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உருத்திராட்சம் மணிகளை திருநீறு போல எந்நேரமும் அணிந்திருக்கக் கூடாது. உறங்கும் போதும், உடற்சுகபோகத்தின் போதும், மலசலம் கழிக்கும் போதும், உடம்பு தூய்மையில்லாத போதும், வீட்டின் தூய்மை கெடும் போதும், வீட்டில் அல்லது வீட்டருகில் பிறப்பு,இறப்புக்காலங்களிலும் உருத்திராட்சம் தரிக்கக் கூடாது. இவ்வேளையில் பூஜை அறையில் தூய்மையான இடத்தில் பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். மாமிசம் புசிப்போரும், மதுபானங்கள் அருந்துவோரும் புகையிலை போன்றவற்றைப் புகைப்போரும் உருத்திராக்க மாலை அணியக்கூடாது.

ஒரு முக உருத்திராட்சம், 11முக உருத்திராட்சங்களைச் சிவலிங்கமாகவே வைத்துப் பூசிக்கலாம். விசேட தீட்சை பெற்றவர்கள் சிவ பூசை செய்வதற்கு இவ் உருத்திராட்சம் சுயம்பு லிங்கம் போல் அமையும்.இவ்வாறுபோற்றப்படும்உருத்திராட்சம் தூயதாக இருக்கிறதா என அறிவதற்கு இரண்டு செப்புத் தகடுகளிடையே அல்லது செப்பு நாணயங்களுக்கிடையில் ஒரு உருத்திராட்ச மணியை வைத்து மென்மையாக கையினால் பற்றினால் அது மெதுவாகச் சுற்றுவதைக் காணலாம். தானே சுழலக்கூடிய அபூர்வ சக்தி உருத்திராட்சத்திடமே இருக்கிறது.

சைவ சமயம் விஞ்ஞான அறிவியலோடு தொடர்பு கொண்டது. அந்த வகையிலே இவ் உருத்திராட்சமும் மிக முக்கியமானதாகும். பொதுவாக முனிவர்கள், சமயகுருமார்கள், தீட்சை பெற்றோரே "உருத்திராட்சமாலை" தரித்திருப்பார்கள். அதை இந்து மதத்தின் ஓர் அடையாளச் சின்னமாக அவர்கள் அணிவதாகவே நாம் கருதிவருகின்றோம். ஆனால், அது இந்து மதத்தின் அடையாளச் சின்னம் மாத்திரமல்ல உருத்திராட்சத்தில் பல மருத்துவ குணங்களும் அடங்கியிருப்பதாக ஆராட்சிகள் கூறுகின்றன.

இரத்த அழுத்தம் அதிகரித்து காணப்படுவோரும் மன அழுத்தத்தால் கஷ்டப்படுவோரும் உருத்திராட்சம் அணிவதால் அவற்றை இல்லாதொழிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

வயிற்று உபாதையால் கஷ்டப்படுவோர், உருத்திராட்சத்தைக்குடிக்கும்நீரில் ஊறவைத்து மறுநாட் காலையில் அந்த நீரைப்பருகினால் வயிற்று உபாதை இருந்த சுவடே தெரியாமல் போய்விடுமாம். ஆனால் உருத்திராட்சத்தை

அணிவோர் அதன் குணமாக்கும் சக்தி மீது நம்பிக்கை வைத்தல் அவசியம்.

உருத்திராட்சம் வயது முதிர்ந்தோரின் மூட்டு வாதத்தையும் குணமாக்குகின்றதாம். உருத்திராட்சங்களில் ஒரு முகம் கொண்டவை இருமுகம் கொண்டவை, எனப்பல வகைகளுண்டு. அவற்றின் வகை வேறுபாட்டிற்கேற்ப நோய் நிவர்த்தியாக்கும் குணமும் வேறுபடும்.

சிலர் நான்கு, ஐந்து, ஆறு முகங்கொண்ட உருத்திராட்சங்களை ஒன்றாக வெள்ளிக் கம்பியினால் இணைத்து கையில் அணிவர்.

அக்குப்பஞ்சரைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள் அக்குப்பஞ்சரை மனிதனின் உடலில் பல நிலைகளில் ஊசிகளைச் செலுத்துவதன் மூலம் நோய்களைக் குணமாக்குகின்றனர். அவ்வாறான அக்குப்பஞ்சர் சிகிச்சை கொடுக்கும் விளைவு-களை உருத்திராட்சம் கொடுக்கின்றவாம்.

உருத்திராட்சங்களில் பல வகை உண்டு என்று மேலே பார்த்தோம். அல்லவா உருத்திராட்சங்களில் 38 வகை களில் 21 வகைகள் மருத்துவரீதியான முக்கியத்துவம் வாய்ந்தவை. குறிப்பாக ஏழுமுக உருத்திராட்சங்கள் மிகவும் அரிதாகக் கிடைப்பவை. அவை வீட்டில் செல்வத்தை கொழிக்கச் செய்வதாக நம்பப்படுகின்றது. இதனால் அவைகளை வைத்திருப்போர் அதனை மிகுந்த கவனத்துடன் போற்றிப் பாதுகாப்பாக வைத்திருப்பார்.

நான்முக உருத்திராட்சத்தை அணியும் பெண்களாயின் ஆண்களையும், ஆண்களாயின் பெண்களையும் கவருவர். எனவே இளைஞர்கள், யுவதிகள் இதனை விரும்பி அணிகின்றனர்.

ஆறுமுகம் கொண்ட உருத்திராட்சத்தை வியாபாரிகள் வைத்திருப்பது நல்லது எனக் கூறப்படுகின்றது, ஏனெனில் அவை வியாபாரிகளுக்கு என்றும் இலாபத்தையே கொடுக்கும். அவ்வாறே எண்முக உருத்திராட்சங்கள் எமக்கு அதிஷ்டத்தை விளைவிக்கும். அதே வேளை ஒன்பது முகங்கொண்டவை எமது வாக்குச் சாதுர்யத்தை அதிகரிக்கிறதாம்.

இவ்வாறு உருத்திராட்சங்களை அணிவதால் ஏற்படும் பலன்களை சொல்லிக் கொண்டே போகலாம். உருத்திராட்சங்கள் பல வர்ணங்களில் காணப்படுகின்றன. வெள்ளை, கபிலம், மஞ்சள், கறுப்பு அவற்றின் நிறங்கள் வேறுபடும். பொதுவாக கிரகணங்கள், வளர்பிறை பூரணை போன்ற நாட்களில் அவை அதிர்ஷ்டம் தருவதாகவும் சிலர் கருதுகின்றனர்.

கடைகளில் விற்பனை செய்யப்படும் எல்லாவற்றையும் தரமான உருத்திராட்சங்கள் என எண்ணி ஏமாந்து விடவேண்டாம். உருத்திராட்சங்களை நீரில் போடுங்கள். அவை அமிழ்ந்தால் அவைதான் உண்மையான உருத்திராக்கம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உண்மையான உருத்திராட்சங்களை கண்டு பிடித்து, அவற்றை அணிவதன் மூலம் வாழ்வை வளமானதாக்குங்கள்.

# மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் கோயில்

திரு.எஸ். துஷ்யந்

மட்டக்களப்பில் சரித்திரப் புகழ் பெற்ற கோயிலாக விளங்குகின்ற கோயில் இதுவாகும். மட்டு வாவியோரமாக அமிர்தகழி என்னும் கிராமத்தில் இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற சிறப்புக்களுடன் விளங்குகின்றது. இத்தலத்தின் மூர்த்தியைப் பற்றியும், தீர்த்தத்தினைப் பற்றியும் தொன்று தொட்டு தொன்மையான கதைகள் பல வழங்கப்படுகின்றன.

மாமாங்கைத் தீர்த்தக் கரையோரத்தில் ஆதியில் சுயம்புலிங்கமாகத் தோன்றிய ஈஸ்வரன், இன்று விநாயகப் பெருமானின் அங்கியை அணிந்து, அடியார்களின் பிணி தீர்க்கும் விநாயகக் கடவுளாக எழுந்தருளி அன்றுபோல் இன்றும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

இராமாயணக் கதையோடும் இத்தலம் தொடர்பானது. சீதையைக் கவர்ந்து வந்து அசோக வனத்தில் சிறை வைத்திருந்த இராவணனைக் இராமன் தனது பாணத்தினால் பட்டழிந்து ஒழிந்த சமயம் தனக்கேற்பட்ட சிவ தோஷத்தை நீக்க அனுமனிடம் சிவபூசைக்கு வேண்டிய சிவலிங்கத்தைப் பெற்று வருமாறு பணித்தார். அனுமன் தாமதமானதால் இராமபிரான் மணலில் பிசைந்து இலிங்கமொன்றை ஆக்கினார் அதற்குப் பூசை புரிவதற்காக தனது கோதண்டத்தை நிலத்தில் ஊன்றிப் பதித்து அதிலிருந்து வெளிவந்த புனித நீரைக் கொண்டு பூசை செய்து வழிபாட்டை நிறைவு செய்தார் இராமபிரானின் ஆணைப்படி விந்தியமலையிலிருந்து காலந்தாழ்த்தி அனுமனால் கொண்டுவரப்பட்ட இலிங்கமும் இராமபிரானால் ஆக்கப்பட்ட திருக்குளத்தின் நடுவே புதைக்கப்பட்டது இதனால் இத்தீர்த்தம் புனிதமுற்றது. ஆடி அமாவாசைத் தினத்தன்று இறந்தவர்களுக்குப் பிதிர்கடன் தீர்க்கும் தலமாகவும் சிறப்புப் பெற்றுள்ளது. காசியிலிருந்து வந்த முனிவரொருவர் ஒன்பது பெண்களின் பெயர்களைக் கொண்ட தீர்த்தங்களை இக்குளத்தில் கலந்து நீராடி இலிங்கத்தை வழிபாடு செய்து பேறு பெற்றார் இதனால் இத்தீர்த்தம் மாமங்கைத் தீர்த்தம் என்று பெயர் பெற்றது

கி.பி 2ஆம் நூற்றாண்டு காலங்களில் உன்னரசுகிரி என்ற இடத்தை ஆட்சி புரிந்த ஆடகசவுந்தரி இப்புனிதத் தீர்த்தத்தில் நீராடி தனக்கிருந்த பிறவிக் குறைகளையும் தீர்த்துக் கொண்டது மல்லாமல் மாமாங்கர் ஆலயத்தையும் புனரமைத்து, தீர்த்தக்குளத்தையும் சீர்படுத்திக் கொடுத்தாள் எனக் கூறப்படுகின்றது

இராவணன் மூட்டிய தீயினால் இலங்காபுரியின் ஒரு பெரும் பகுதியை எரியூட்டி அழித்து விட்டு வந்த அனுமன் எரிந்து கொண்டிருந்த தனது வாலை இம் மாமங்கை நதியினுள் ஆழ்த்திச் சுகம் பெற்றான். என மற்றுமொரு வரலாறு கூறுகின்றது

இக் கோயின் வருடாந்த உற்சவமானது ஆடி அமாவாசைக்கு முன் வருகின்ற ஒன்பது நாட்களும் உற்சவங்கள் நடைபெற்று பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். இவை தவிர சிவன்ராத்திரி திருவாதிரை விரதங்களும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன

கோட்டமுனைப் பகுதி வேளாள் பரம்பரையினரும் அமிர்தகழிப்பகுதி ஏழூர்க்குருகுலவம்சத்தவர்களும் ஆலயநிர்வாக உரித்துடையவர்கள்.

இத்தலத்தின் மீது பல சைவத் தமிழ் புலவர்கள் பல நூல்கள் இயற்றியுள்ளனர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை "மாமாங்கேசுவரர் பதிகம்" என்னும் நூலைப் பாடியுள்ளார். புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையும் இதே பெயரில் ஒரு நூலைப் பாடியுள்ளார். மாமாங்கைப் பிள்ளையார் விருத்தம், மாமாங்கேசுவரர் கீர்த்தனை போன்ற பெயர்களிலும் நூல்கள் வெளிவந்துள்ளன.



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

# விநாயகர்

திருமதி தேவகுமாரி ஹரன்

## விநாயகர் விளக்கம்

சைவர் வைணவர் என்ற வேறுபாடின்றி எல்லா இந்துக்களும் கணபதியைப் போற்றி வழிபடுவர். கணேசர், ஏரம்பர், விநாயகர், விக்னேஸ்வரர்,முதலான பல திருநாமங்கள் கணபதிக்கு உரியனவாகும். கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் வழிபாட்டு நெறி காணபத்தியம் எனப்படும். பௌத்த சமயம் பரவியுள்ள பர்மா, காம்போஜம், சீனா, ஜப்பான், முதலிய நாடுகளிலும் கணபதியை வழிபடும் வழக்கம் உண்டு.

விநாயகப் பெருமானுக்கு பல்வேறு வகையான திருநாமங்கள் உள. அவையாவன கணபதி- க- போதல் அதாவது ஞான-நெறியில் எழுதல் என்பது பொருள். மோட்சம், பதி பரம் பொருள். அதாவது ஞான நெறியில் நின்று எய்தப் பெறும் பரம்பொருள் என்பது பொருள். ஏகதந்தர்- அளவில்லாத ஆற்றல் உடையவர். ஏரம்பர்- இளைத்தவர்களை இடையூறு நீக்கிப் பாதுகாப்பவர். லம்போதரர் -எல்லா உலகங்களுக்கும் இடையூறு நீக்கிப் பாதுகாப்பவர். கஜானன்-அன்பர்களின்இடையூறுக ளை நீக்கிச் சுமுகமான சுகத்தையளித்து மேலான உண்மை ஞானத்தை அளிப்பவர். விநாயகர் தனக்கு ஒரு தலைவனுமின்றித் தானே தலைவனாக விளங்குபவர். எனப் வாமன புராணமும் அன்பர்களின் தீமைகளை விலக்கி நன்நெறியில் செலுத்துபவர் என்று பவிஷ்யோத்ர புராணமும் கூறுகின்றது, இத் திருநாமங்களுடன் விக்னேஸ்வரர்,விகடர், தூமகேது, கணேசர், பிள்ளையார், (தமிழ் வழக்கு) போன்ற திரு நாமங்களை விநாயகர் கொண்டு விளங்குகின்றார். விநாயகர் திருமேனி ஞானமே வடிவானது. ஆன்மாவைப் பொருத்தி நின்று மலங்கள் மாயைகளைத் தொழிற்படுத்தி இருமையின்பத்தையும் அளிப்பது ஞானம். இத்தகைய ஞானம் பொருந்த உயிர்கள் விளக்கம் பெறுகின்ற அந்த ஞானமே விநாயகப் பெருமானுடைய திருவடிவம்.

சர்வகாரண சக்தியாயுள்ள பேழை-வயிறு, ஐந்தொழில்களைக் குறிக்கும். ஐங்கரம் பரஞானத்தைக் குறிக்கும். அவரின் ஒற்றைக் கொம்பு எல்லாம் அறியும் தன்மையைக் குறிக்கும். தாழ் செவி யானை முகம் உடையவர். யானைத்தலை, காது, தும்பிக்கை விலங்கின் கூறு, பேழை வயிறு, குறுகிய கால்கள், பூதக்கூறு. முகம் புருவவடிவம் மனிதக்கூறு, நான்கு கைகள் தேவக்கூறு, இவ்வாறு கூட்டுத் தொகுப்பாக விநாயக வடிவம் காணப்படுகின்றது. விநாயக வடிவமேஇருவகைத் தோற்றம் உடைய வடிவமா-கும். விலங்கு மனிதக்கலப்பாக காணப்படுகின்றது. யானை விலங்கினங்களுக்குள் பெரியது. ஆற்றல் மிக்கது. எதனையும் வருத்தமின்றியே சுமப்பது. எத்தனை பெரும்படையாயினும் அஞ்சாது அழித்து வெற்றி காணும் பேற்றையுடையது. படைக்குப் படையாயிருப்பது. காலம் வரும் வரை காத்திருந்து எதிரியை அழிக்கும் பண்புடையது. உணவு கொடுத்து அன்புடன் பாதுகாக்கும் பாகர் தன் கால் அடி வைத்தால் முடிமேல் வைத்து உயர்த்துவது. அவர்களுக்கு இடுக்கண் வராமல் பாதுகாப்பது. அவர்கள் கட்ட விரும்பினால் விரும்புமிடத்திற்குச் சங்கிலியையும் தானே கொண்டு சென்று கொடுத்துக் கட்டில் அகப்பட்டு நிற்பது. இசைக்கு வயப்படுவது இத்தகைய குணங்கள் விநாயகருக்கும் உண்டு. விநாயகர் இந்து சமயத்தில் முக்கியம் பெற்றவர்.

**விநாயகர் தோற்றம் புராணங்களின் அடிப்படையில்**

மகாபுராணங்கள் எழுந்த காலத்திலே கணபதி, விநாயகர், என்னும் பெயர்கள் ஒரே தெய்வத்திற்கு உரியனவாகக் கருதப்பட்டன. விநாயகர் நால்வரையும் ஒன்று சேர்த்துக் கணங்களின் பதியாக கணபதியாக மகேஸ்வரன் படைத்திருக்கின்றார் என்ற கதை புராணங்களில் காணப்படுகின்றது. விநாயகரை கணபதியாகக் கருதி வழிபடும் முறை கி.பி 4ஆம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் ஏற்பட்டது. அக்காலம் முதல் கணபதி என்னும் பெயர் மற்றும் ஆனைமுகக் கடவுளே என்ற கருத்தில் உருவாகியது. காலப் போக்கில் இலக்கியங்களும் இதனைப் பிரதிபலித்தன.

அதே போன்று பிரம்ம கைவர்த்தன புராணத்தில் விநாயகர் கிருஷ்ணனுடைய அவதாரம் எனக் கூறப்பட்டுள்ளது. வராகபுராணம், வாமனம், மகாஸ்காந்தம், அக்னிபுராணம், பத்மபுராணம், கருடபுராணம் ஆகியவைகளிலும் விநாயகர் அவதாரம் கூறப்பட்டுள்ளது. தமிழ் நூல்களிலும் விநாயகர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளது.

விநாயகருடைய பிறப்பைப் பற்றிப் பல்வேறு புராணங்கள் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. இங்கு சிவபுராணம், சிவமகாபுராணம், மத்ஸ்யபுராணம், வராகபுராணம், ஸ்கந்தபுராணம், லிங்கபுராணம், சுப்பிரபேதம், காஞ்சிபுராணம், கந்தபுராணம், விநாயக புராணம் ஆகியன. சிவனும் பார்வதியுங் கூடிப் பிள்ளையாரைப் பெற்றனர். என்பது அகார உகாரங்களாகிய சிவமும், சக்தியும் கூடியே சுத்தமாயாகாரியமாகிய நாதப்பிரணவமாயிற்று என்பதை விளக்க எழுந்தது. அதற்கு மேல் சக்தி உள்முகமான பரசிவம் பரநாதப்பிரணவத்தை ஈன்றது என்பதும் அங்ஙனமே இந்நுணக்கத்தை எங்ஙனம் அனைவருக்கும் உணர்த்த இயலும் மலையைக் காட்டி விளக்கும் உலகியல் ஆசிரியரைப் போல புராண ஆசிரியர்களும் சிவனும் பார்வதியும் நடைமலையாகிய ஆனையும் பிடியும் ஆயினர். விநாயகர் பிறந்தார் என்றனர். ஆக்கல் போன்ற ஐந்தொழில்களையும் ஒரு சேர ஆற்றும் வன்மை இறைவனுக்கு உளதாயினும் பிரமாதியரைக் கொண்டே இயற்றுவர். ஆதலால் இறைவனது நீங்கா சக்தியாகிய பராசக்தி அழுக்கைக் கொண்டு உருவாக்கினார். (மண்ணைக் கொண்டு உருவாக்கினார் என்றது புராணம்) (அழுக்கு - மாயை - மண் - மாயை) மாயைக் கொண்டு முதற் படைப்பைத் தொடங்கினார். சிருட்டித் தொழில்கள் இறைவனுக்கு விளையாட்டு. படைத்தல் முதலிய தொழில் இயற்ற இறைவன் விளகாரியானான். என்பதை உணர்த்தவே மண்ணாலே பொம்மை செய்து உயிர் கொடுத்து வைத்துக்கொண்டு உமை விளையாடினாள். மேலும் ஒன்றாத இரண்டை ( தேவ உடலையும் விலங்குத் தலையையும்) ஒன்றாக வைத்தார். என்பதும் இறைவனுடைய அளவில்லா ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு. அம்மையின் காவலனை வெட்டிக் கொன்றார். தலைகொடுத்துக் காத்தார் என்பது ஆக்கலும் அழித்தலும் அவன் அருட் செயலே என்பதனைக் காட்டுகின்றது.

**விநாயகர் தொன்மை**

கணபதி பற்றி இருக்கு வேதம் கூறும். ஆயினும் அதிலே சொல்லப்படும் கணபதிக்கும் விநாயகருக்கும் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இருக்கு வேதத்திலே வரும் கணபதி என்னும் பெயர் தேவர்களின் தந்தையான பிராமணர்லப்பதி என்னும் தேவருக்குரிய மறுநாமம் ஆகும்.

மிகப் புராதன காலத்தில் பிள்ளையார் வழிபாடு வைதீக மரபிற் சேர்ந்திருக்கவில்லை என்று கருதலாம். ஆதி காலத்தில் கணபதி வழிபாடு கிராமிய வழிபாடாக அமைந்திருந்தது என்று கொள்வதற்கான காரணம் உண்டு. மனுஸ்மிருதி பழைய பிரதியொன்றிலே சிவன் பிராமணர்க்குரிய தெய்வம் என்றும் கணேசர் சூத்திரர்களுக்குரிய தெய்வம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. தைத்திரிய ஆரண்யகத்தில் தந்தின் என்னும் கடவுள் பற்றிய பாடல் உள்ளது. அது கார்த்திகேயன், நந்தி ஆகியோரைப் பற்றிய தோத்திரங்களே அடுத்து வருகின்றது. வேத விற்பன்னரும், விருத்தி உரைசாரகருமான சாயனர் தந்தி என்னும் பெயர் கணபதியையே குறிக்கும் என்பர். தந்தி ஆனைமுகன் என்றும், வக்கிரதுண்டன் என்றும், நெற்கதிர்த் தண்டம், கரும்பு ஆகியவற்றைப் பற்றியிருப்பவர். என்றும் அவர் விளக்குகின்றார்.

திருக்கைலாய மலையிற் சிவகணங்களோடு கூடியிருக்கும் விநாயகர் கணம் பற்றி மகாபாரதம் கூறும். அதே போன்று மகாபாரதம் எழுதிய வியாசர் சொல்ல சொல்ல விநாயகரே கதை எழுதினார் என்று கூறப்படுகின்றது. வேதங்களில் விதிக்கப் பெற்றவைகளைச் செயன்முறையில் கையாளும் முறைகளைக் காண்பிப்பன கல்ப சூத்திரங்கள். இது யசுர் வேதத்துடன் தொடர்புடையது. இதில் நான்கு விநாயகர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளார்கள். அவர்களிற் சாலகடங்கர், கூஷ்மாண்ட ராஜபுத்திரர், உஷ்மிதர், தேவயஜனர் என்பவர்கள். அதர்வ உபநிடதம் சிவனை விநாயகரென்று வர்ணிக்கின்றமை குறிப்பிடற்குரியது. ஞாக்ஞவல்கிய ஸ்மிருதி விநாயகரை அம்பிகையின் மகன் என வர்ணிக்கின்றது.

**சமய இலக்கியங்களில் விநாயகர்.**

சமய இலக்கியங்கள் பலவற்றிலும் விநாயகர் பற்றிய செய்திகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் உள்ளது. "பாலும் தெளி தேனும்....", "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்...." ஔவையாரின் நல்வழி, மூதுரை ஆகியவற்றில் பிள்ளையார் துதிப்பாடல் காணப்படும். ஔவையார் பாடிய விநாயகர் அகவலிலும் காணப்படுகின்றது. திருமூலர் திருமந்திரத்தில் "ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை...." அருணகிரிநாதர் பாடல்கள் "கைத்தல நிறைகனி அப்ப மொடவல்...", "உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமென்னும் தீ...", பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், சம்பந்தர் தேவாரங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. விநாயக வழிபாடு பற்றிய கருத்துக்களை தமிழ்த்திருமுறைகளில் காணக்கூடியதாக உள்ளது.

**விநாயகர் பற்றிய ஐதீகங்களும் சமயக்கருப் பொருளும்**

கணபதியைக் காவற் தெய்வமாகவும் ஞான-காரகனாகவும் கொள்வர். சித்தி காரனாகவும் விக்னவிநாயகனாகவும் விளங்கும் விநாயகனைச் சகல கருமங்களையும் தொடங்கும் போது வழிபடுவது வழக்கம். பிள்ளையார் பூசையுடன் எல்லாக் கிரியைகளையும் சடங்குகளையும் தொடங்குவது முறை. எடுத்த காரியம் எளிதாக, இன்பமயமாக முடிய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்த ஆசையை நிறைவேற்றி வைக்கும் கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைத்திருக்கின்றது. விநாயகரை வணங்கினால் எடுத்த காரியம் இனிது முடியும். வணங்காவிடின் இடையிலே ஏதாயினும் தடைகள் ஏற்பட்டுத் துன்பம் விளையும்.

சிவபெருமான் விநாயகருடைய தந்தை. எல்லா வலிமையும் மிக்கவர். அத்தகைய வல்லமை மிக்க சிவபெருமானே தன் மூத்தபிள்ளையாகிய பிள்ளையாரிடம் சொல்லிக் கொள்ளாமல் திரிபுரசங்காரத்திற்குப் புறப்பட்டு

விட்டார். அவர் சென்ற தேர் அச்சு முறிந்தது. இதனை வேடிக்கையாகவும், விநயமாகவும் மணிவாசகப் பெருமான் "தச்சுவிடுதலும் தாமடியிட்டலும்" (திருவாசகம் 246 பாடல்) அச்சு முறிந்தது என்று உந்திபற அருளிச் செய்தார். இங்ஙனம் யார் எதனைச் செய்யினும் அதற்கு உதவியும் தந்து ஊக்குவதும் பிள்ளையாரின் இயற்கை என்ற எண்ணம் உறுதியாகி விட்டது. இதுவே பிள்ளையார் வணக்கம் தோன்றியமைக்கான காரணங்கள் ஆகும். இந் நம்பிக்கையே முதிர்ந்து எக்காரியமாயினும் பிள்ளையார் வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. எழுதத்தொடங்கும் பொழுது பிள்ளையார் சுழி, நூல்களில் பிள்ளையாருக்கான காப்பு ஆகியவற்றிற்கான அடிப்படையாகமாறிற்று. பிரணவம் பிள்ளையார் வடிவம். பிரணவத்தின் திரிந்த வடிவமே பிள்ளையார் சுழி என்பர். இது மாத்திரம் இன்றி விநாயகருக்குக் கோட்டம் அமைப்பது இந்துக்கோயில்களிலே முறைமையாகும். பஞ்சாயதனக் கோயில்கள் எல்லாவற்றிலும் பிள்ளையாருக்கென தனியான கோட்டம் அமைந்திருக்கும். சைவக் கோவில்கள் எல்லாவற்றிலும் சகல நித்திய, நைமித்திய கருமங்களும் பிள்ளையார் பூசையுடனேயே ஆரம்பமாகும்.

எங்கும் நிறைந்த விநாயகர் எந்த உருவிலும் காட்சி அளிப்பார் என்பதால் தான் மஞ்சளையும், மாவிளக்காலும் களிமண்ணினாலும் சாணியாலும் கூடப் பிள்ளையார் பாவனையாக பூரண கும்பம் போல் ஐந்து விரல்களால்உருப்பிடித்து வைத்து வழிபடுகின்றார்கள். எதை எழுதத் தொடங்கினும் முதலிற் பிள்ளையார் சுழிபோட்டு விட்டே தொடங்க வேண்டும். எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் கணபதியை நினைத்து வேண்டிக் கொண்டே பிறகே அதைச் செய்யவேண்டும். எந்தத் தெய்வத்தை பூசை செய்ய விரும்பினாலும் முதலில் விநாயகரை வழிபட்ட பிறகே பூசை செய்ய வேண்டும். அப்போது தான் காரிய சித்தி ஆகும். இது நம்மிடையே பரம்பரை பரம்பரையாக நிலவி வரும் நம்பிக்கையாகும். பிள்ளையார் எல்லோருக்கும் பொதுவானவர்.

**தமிழ்ப்பண்பாட்டில் விநாயக வழிபாடு**

கணபதியைப் பிள்ளையார் என்று சொல்வது தமிழ் வழக்கு. பாளி மொழியில் இளம் யானையைப் பிள்ளை என்று சொல்வதால் பிள்ளையார் என்ற திருநாமம் இளமையுடைய கஜமுகனைக் குறிக்கும். கணேசரின் வழிபாட்டுக்கென அமைந்த கோவில்கள் யாவும் தமிழர் வாழும் பிரதேசங்களில் பிள்ளையார் கோவில் என்றே அழைக்கப்படும். தமிழ்ப் பண்பாட்டில் விநாயகர் வழிபாட்டு முறைமை எல்லாச் சடங்குகளிலும் முக்கியம் பெற்றதாக அமைகின்றது. கோவில் கிரியைகளாக இருந்தாலென்ன, வீட்டுக்கிரியைகளாக இருந்தாலென்ன பிள்ளையார் வணக்கம் முக்கியம் பெற்றுக் காணப்படுகின்றது. வீட்டுப் பூஜை வழிபாடுகளின் போதும்,விரதங்கள் அனுஷ்டிக்கும் பொழுதும்,பூர்வ ,அபரக்கிரியைகளின் பொழுதும் பிள்ளையாருக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது. மஞ்சளினாலும், சாணத்தினாலுமே பிள்ளையார் பிடிக்கப்பட்டுப் பிள்ளையாராகப் பாவனை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றது.

# இராஜாராம் மோகன்ராய்

திரு. எஸ். முகுந்தன்

நவீன இந்துசமய சீர்திருத்த சிந்தனை யாளர்களின் வரிசையில் காலத்தால்முதன்மை பெற்றவராக இராஜாராம்மோகன்ராய் திகழ்கிறார். இவர் வங்காளத்தின் ஹீக்லி மாவட்டத்தில் இராதாநகர் என்ற கிராமத்தில் 27.09.1833இல் அந்தணராக இராமகாந்தர், தாரிணிதேவி ஆகியோரின் அந்தணப் பெற்றோருக்கு மகவாகப் பிறந்தார். இவரது இயற் பெயர் இராம்மோகன் என்பதாகும். இராம்மோகனின் கொள்ளுத்தாத்தாவிற்கு நவாப் காலத்தில் "ராய் ராய்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதன் காரணமாக ராம் மோகனாரின் பரம்பரையுடன் ராய் என்ற அடைமொழி ஒட்டிக்கொண்டது. மேலும் ராம் மோகனாரும் தில்லியிலுள்ள பேரரசர் இரண்டாம் அக்பரினால் சிறந்த தூதுப்பணிக்காக "ராஜா" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவை காரணமாகவே ராம்மோகன் என்ற பெயர் ராஜாராம்மோகன்ராய் என வழங்கப்படலாயிற்று.

மிக இளவயதிலேயே ராம்மோகனார் பாட்னா நகரிலும் காசியிலும் குருகுல வாசம் செய்து உருது, பாரசீகம், வங்காளி, இந்தி, சமஸ்கிருதம் ஆகிய ஐந்து மொழிகளிற் பெரும் தேர்ச்சி பெற்றது மட்டுமன்றி வேத உபநிடதங்கள், பகவத்கீதை, தரிசனங்கள், தந்திரங்கள் உள்ளிட்ட இந்து சாஸ்திர மரபிலும் துறைபோனவராயினார். இது மட்டுமன்றி இஸ்லாமிய, சமய, தத்துவங்களிலும் பாண்டித்தியம் பெற்றார்.

இவைமட்டுமன்றி ஆங்கிலம், அரபு, கிரேக்கம், பிரெஞ்சு, ஹீபுரு, ஸிரியன் என ஆறு பிறநாட்டு மொழிகளையும் முறைப்படி கற்றுத்தேர்ந்தார். எந்தவொரு சமூகத்தின் சமய பண்பாட்டுக் கோலங்களின் தாற்ப்பரியங் களைச் செவ்வனே புரிந்து கொள்வதற்கும், விமர்சிப்பதற்கும் அந்தந்த சமூகத்தின் தொடர்பாடல் மொழியை நன்கு விளங்கிக் கொள்வது இன்றியமையாதது என்பதை ராம்மோகனார் ஆணித்தரமாக நம்பினார்.

காலத்தின் தேவைக்கேற்ற கருத்தியல் களைப் புகுத்தல் அல்லது புதுப்பித்தல் என்ற ராஜாராம்மோகன்ராயின் கோட்பாட்டிற்கு அவரின் பன்மொழிப்புலமை உறுதுணையாகியது.

இந்து மதத்தில் காலத்தின் தேவைக் கேற்ற கருத்தியல்களைப் "புகுத்தல் அல்லது புதுப்பித்தல்" என்ற ராம்மோகனாரின் கோட்பாட்டுருவாக்கத்திற்கு அவரின் பன் மொழிப்புலமை காத்திரமான பங்கை வகித்தது என்பதை மறுப்பதற்கில்லை.

இவர் கி.பி 1815இல் "ஆத்மீயசபா" என்ற நிறுவனத்தை அமைத்தார். மதக்காழ்ப்புணர்வுகளை கடந்த புத்திஜீவித்துவமான ஆத்மீக கலந்துரையாடல்களுக்காக அமைக்கப்பட்ட இந் நிறுவனமானது காலப்போக்கில் சமூகப் பிரச்சனைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியது. பிற்காலத்தில் நிறுவப்பட்ட பிரம்மசமாஜத்தின் செயற்றிட்டங்களிற்கான கருத்து நிலை உருவாக்க விவாதங்கள் ஆத்மீய சபாயின் கலந்துரையாடல்களுக்கூடாகவே அடையாளங் காணப்பட்டன. அந்த வகையில் சதிஒழிப்பு, விதவை மறுமணம், பாலிய விவாக எதிர்ப்பு, பல தாரமுறை தடுப்பு சமூக அடுக்குமுறைக்கு எதிரான செயற்பாடுகள் போன்றவற்றை இந்தவகையிலே குறிப்பிடலாம்.

அக்காலத்தில் நிலவிய வர்ணாச்சிரம முரண்பாடுகளையும் சாஸ்திர சம்பிரதாயக் குழப்பங்களையும் தீர்ப்பதற்கான உடனடி

மார்க்கம் உருவ வழிபாட்டை நிராகரித்தலே என்பதே ராம் மோகனாரின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. விக்கிரகங்களே பல தெய்வ வணக்கத்துக்கும் பல்வேறு சடங்கு முறைகளுக்கும் வழிவகுத்துக் கொடுக்கின்றன. சடங்குகளே தூய்மை, தீட்டு என்ற மனப்பாங்குகளை உருவாக்கி சமூக அடுக்கமைவை (வர்ண, பால் பேதங்களை) நியாயப்படுத்துகின்றன. எனவே விக்கிரக வழிபாட்டை புறக்கணிப்பதே இந்து சமயத்துக்குச் செய்ய வேண்டிய உடனடிச் சத்திரசிகிச்சை என்பது ராஜாராம் மோகனாரின் நிலைப்பாடாக இருந்தது.

ஆயினும் ராஜாராம்மோகன்ராய் விக்கிரக வழிபாட்டை நிராகரித்தமையைக் கருத்திற் கொண்டு அவர் இந்துப் பாரம்பரியத்தையே ஒட்டுமொத்தமாக மறுதலித்தார் என்று கருதுவது தவறாகும். வேத உபநிடதங்களையும் கீதையையும் சில தாந்திரீக பாடல்களையும் கூட அவர் பிரம்மசமாஜக் கூட்டங்களில் பாராயணம் செய்வித்து வந்தார். என்பதையும் இங்கே நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

மேலும் இந்து சாஸ்திரங்கள் குறிப்பிட்ட வகுப்பினரின் முதுசெங்களாக முடக்கி வைக்கப்படக்கூடாது. அவை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடன் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டார். அந்த வகையில் 1815இல் வேதாந்த சூத்திரங்களை இந்தி மொழியிலும், சங்கர பாஷ்யத்தை வங்காள மொழியிலும் மொழிபெயர்த்தார். உபநிடதங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ராஜாராம்மோகன்ராய் 1816இல் கேனஉபநிடதத்தையும் 1817இல் கட, முண்டக, மாண்டுக்ய உபநிடதங்களை ஆங்கிலத்திலும் வங்காள மொழியிலும் மொழிபெயர்த்தார்.

இந்து சாஸ்திரங்களில் மட்டுமன்றி இஸ்லாமிய ஸீபிபனுவல்களிலும் கிறிஸ்தவமரபிலும் நாட்டம் கொண்டிருந்த இவர் அவை தொடர்பாகவும் சில நூல்களை எழுதியிருந்தார். ராஜாராம்மோகன்ராய் ஸீபி தத்துவத்தில் கொண்ட ஈர்ப்பால் இறையொருமை பற்றி எழுதிய துஷ்பத் உல் - முவாஹ்தீன் (ஏக இறைக் கொள்கையாளரின் அன்பளிப்பு) என்ற நூல் குறிப்பிடத்தக்கது. பாரசீக மொழியில் எழுதப்பட்ட இந்நூலே ராம்மோகனாரின் முதற் படைப்பு முயற்சி என்பதுவும் குறிப்பிடத்தக்கது. மேலும் திருக்குரானை வங்காளத்தில் மொழிபெயர்த்த இராம்மோகனாரின் முயற்சிக்காகக் "ஜபர்தஸ்து மௌலவி" பட்டத்தை வழங்கிக் அவரைக் கௌரவித்தனர்.

இது மட்டுமன்றி யேசுநாதரின் போதனைகள், கிறிஸ்தவ சமயத்தினருக்கு முறையீடு போன்ற இவருடைய நூல்கள் இவருக்கு கிறிஸ்தவத்தில் இருந்த நன்மதிப்பை விளக்குவனவாகும்.

இருக்குவேதத்தின் இறுதிச் சுலோகம் குறிப்பிடுவது போன்று "நல்ல சிந்தனைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் எம்மை வந்தடைவதாக" என்ற பரந்த உள்ளம் இராம்மோகனாருக்கு வாய்த்திருந்தது. எனவே தான் சமயங்களைப் பிரிப்பன எவை எவையோ அவற்றைக் களைந்து சமயங்களின் அடிப்படை உண்மைகளைத் திரட்டி "பொதுச்சமயம்" என்ற பெயருடன் பிரசாரம் செய்தார். " இராஜாராம் மோகன்ராய் முதன்முதலாக சமய ஒப்புமை என்னும் அறிவியலுக்கு அடிப்படை அமைத்தார்" என மௌனியர் வில்லியம்ஸ் இராம்மோகனாரை விதந்துரைத்திருப்பதும் இந்த அடிப்படையிலாகும்.

கே. எம். பணிக்கர் குறிப்பிடுவது போன்று "சமயத்துக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவு நிலையைப் பகுத்தறிவு நோக்கில் தெளிந்த ராஜாராம்மோகன்ராய் சமுதாயத்தின் ஒழுங்கு முறைகளைக் காக்கவும் ஒழுங்குபடுத்தவும் கண்டறியப்பட்ட சாதனமே மதம் எனக்கருதினார்." எனவே தான் சமூக சீர்திருத்தம் என்பது சமயம் என்ற தளத்தில் இருந்து கொண்டே கட்டியொழுப்பப்படவேண்டும். என உறுதியாக நம்பினார் மோகன்ராய்.

அந்த வகையிலே தான் சதிவழக்கத்திற்கு எதிராக ராஜாராம்மோகன்ராய் மேற்கொண்ட பிரச்சாரத்திட்டங்களும் அமைந்திருந்தன. இந்துப்பிரமாண நூல்கள் எக்காலத்திலும் சதி வழக்கத்தை ஆதரிக்கவில்லை என்ற உண்மையை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் வகையில் இரண்டு பிரசுரங்களை வெளியிட்டார். "ஸதி" என்ற பிரசுரம் 1818இலும் அதனைத்தொடர்ந்து "ஸதியும் சாத்திரங்களும்" என்ற பிரசுரமும் வெளியிடப்பட்டன. ஸதி வழக்கம் உண்மையான இந்துமரபு அன்று அது சொத்துரிமை நோக்கத்துக்காக பிற்காலத்தில் சமயத்தின் பெயரால் ஏற்படுத்தப்பட்டட பெண்கொலை முயற்சி என்பதனை உரத்து வலியுறுத்தினார். இதனை தெளிவு படுத்தும் வகையில் 1822இல் "இந்து வம்சாவழி சட்டப்படி பெண்களின் பண்டைய உரிமைகளின் மீது நவீன ஆக்கிரமிப்புக்கள் பற்றிய சுருக்கமான குறிப்புக்கள்" என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். இந்துக்களின் பண்டைய சட்டங்களைப் பற்றி கற்க விரும்புவோர்க்கான முக்கிய ஆவணமாக இது திகழ்கின்றது. இவ்வாறாக ஸதி வழக்கம் பற்றிய தவறான கருத்துக்களைக் கொண்டிருந்த அக்கால இந்து சமூகத்தினரை விழிப்பூட்டியதுடன் நின்று விடாமல் சட்டரீதியாகவும் அதனைத் தடைசெய்வதற்கான முயற்சிகளில் இறங்கினார். **கவர்னர் வில்லியம் பெண்டிங் அவர்களுக்கு அளித்த முறையீட்டு மனு, லண்டன் காமன் சபைக்கு அனுப்பிய விண்ணப்பம் ஆகிய இரண்டு ஆவணங்களும்** இந்த வகையில் முக்கியமானவை. இவ்வாறாக இராஜாராம்மோகன்ராய் எடுத்த இடையறாமுயற்சிகளின் விளைவாக கி.பி. 1829 டிசம்பர் 02ஆம் திகதி வில்லியம் பெண்டிங் பிரபு ஆளுனராக இருந்த போது உடன் கட்டை ஏறுதல் சட்டரீதியாக தடைசெய்யப்பட்டது.

இராஜாராம்மோகன் ராய் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியில் ஊழியம் செய்து கலக்டரின் திவான் ஆகியவர் என்பதினாலும் மேலைத்தேசக் கல்விமுறை, ஆங்கிலக்கல்வி பற்றி அவர் கொண்டிருந்த உடன்பாட்டு மனோபாவத்தாலும் அவர் இந்துப்பண்பாட்டில் பற்றில்லாதவர் என்றும் காலனித்துவப் பேரலைக்குள் பாரம்பரிய இந்துக்களை இழுத்துச் செல்ல முயன்றவர் என்பது போன்ற விமர்சனங்களும் ஆங்காங்கே இல்லாமையில்லை. ஆயினும் இது அடிப்படையில் தவறானதாகும்.

இராம்மோகன் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்துசமயத்தின் அடிப்படைகளையோ இந்து சமயப்பிரமாண நூல்களின் புனிதத்தையோ மறுக்கவில்லை. அவர் தான் நடத்திய (பிராமணிகள் மகசின்) "பிராமண சஞ்சிகை" என்ற இதழில் இந்துசமயம் பற்றி மேல் வருமாறு குறிப்பிடுவது கவனித்தற்குரியது.

"இந்தப் பூமியில் வாழும் மனிதர்களில் இந்துக்களைப் போன்று சகிப்புத்தன்மை உடையவர்கள் வேறு யாரும் இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும். தெய்வத்தின் அருளுக்கு அனைவரும் பாத்திரமானவர்கள். என இந்து சமயம் போதிக்கிறது. ஒவ்வொரு சமயப்பிரிவிலும் உள்ள நல்லனவற்றையெல்லாம் இந்து சமயம் மதிக்கிறது.

மதமாற்றத்திற் கெதிரான இவருடைய கடுமையான நிலைப்பாட்டை "மதம்மாறிய மூன்று சீனர்களும் மிசனரிகளும்" என்ற பிரசுரத்தினூடாக அறியமுடியும். அவ்வூடகத்தை தனது கொள்கைப்பரப்பலுக்காகச் சிறந்த முறையில் பயன்படுத்திய ராஜாராம்மோகன்ராய் இந்தவழியிலும் பிற்கால சீர்திருத்த சிந்தனையாளர்க்கு முன்னோடியாகவே திகழ்ந் திருக்கிறார். அந்தவகையில் கி.பி 1820இல் " சம்வாத கௌமுதி" என்ற இதழை வங்காள மொழியிலும் 1822இல் "மிரட் உல் அக்பர்" என்ற பத்திரிகையை பாரசீக மொழியிலும் தொடங்கினார். இவை மட்டுமன்றி 1821இல் "பிராமணசஞ்சிகை" என்ற பத்திரிகையை ஆங்கிலத்திலும், வங்காளிமொழியிலும் நடத்தினார். 1829இல் வங்கதூதன் என்ற பத்திரிகையை இந்தி மொழியில் வெளியிட்டார்.

இவற்றினூடாக இந்து மதத்திற்கெதிரான தவறான பிரசாரங்களைத் தர்க்கரீதியாக எதிர் கொண்டது மட்டுமன்று தனது (யூனிட்டேயரின்) இறையொருமைத்துவ பொதுச்சமயக்கருத்து நிலைகளையும் சமூகத்தினிடையே ஆழமாக முன்னெடுத்துச் செல்வதில் வெற்றிகண்டார்.

சுருக்கமாகக் குறிப்பிடுவதனால் பகுத்தறிவு, நூலறிவு, தெய்வநம்பிக்கை ஆகியவற்றை உண்மையாகக் காண் பதற்கான வழிமுறைகளாகவே கொண்ட இராஜாராம்மோகன்ராய் இந்திய மக்கள் தமது பாரம்பரிய பண்பாட்டு அடிப்படைகளிலிருந்து விலகாமலேயே புதிய காலப்பகுதிக்கு ஏற்றவாறு தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளலாம் என்பதனைச் சிந்தையாலும், செயலாலும் தெளிவுபடுத்தினார். அந்த வகையிலே இவரு-டைய நிறுவனரீதியான செயற்பாடுகளின் கொடுமுடியாகத் திகழ்ந்தது பிரம்மசமாஜத்தின் ஸ்தாபிதமாகும்.



**சிவன்**

# இராமாயணம் புலப்படுத்தும் இந்து தெய்வீக வரலாற்று அம்சங்கள்

திருமதி ஹேமலோஜினி குமரன்

வேதங்களின் சாரமாக அமைந்த உபநிடத காலத்துக்கும், சமய சார்புடைய உலகியலைக் கூறும் காவியங்கள், நாடகங்கள் உரைநூல்கள் என்பன எழுந்த காலத்துக்கும் இடையே தோன்றிய இலக்கியங்கள் இதிகாசமாகும். இதிகாசம் என்ற சொல்லின் பொருளை இதி+ ஹ+ ஆஸம் எனப்பிரித்தால் இதி-இவ்வாறு, ஹ-எங்கும் பிரசித்தமாகி, ஆஸம்- இருப்பது என்பது பொருள். சப்த தாராவளி எனும் நிகண்டு தெரிவிக்கும் இலக்கணக் கருத்து, இதிஹ-பரம்பரையாக வந்த உபதேசம், ஆஸம்- அதன் இருப்பு. எனவே பரம்பரையாக வந்த உபதேச நல்வழியில் நிலைத்து வாழ்ந்து வந்தோரது ஒழுக்கத்தின் இருப்பு இதிகாசம் எனப்படுகிறது. இதிகாசங்கள் ஐந்து. அவை இராமாயணம், பாரதம், சிவரகசியம், வித்யாரகசியம், பிரஹ்மஜ் ஞான்சுகோதயம் என்பன. இதில் இராமாயணம் காவியங்களில் முதலாவது ஸ்தானம் பெற்றது. அறிவு வகையில் வேதமென விளங்குவது.

இராமாயணத்தை இயற்றியவர் ஸ்ரீவால்மீகி முனிவர். இது 24000 சுலோகங்களையும் 7காண்டங்களையும், 500 சருக்கங்களையும் கொண்டது. இதிகாசங்களில் இராமாயணம் காலத்தால் முந்தியது எனலாம். ஏனெனில் இராமாயணத்தில் பாரதக்கதைகள் எதுவும் குறிக்கப்படவில்லை. ஆனால் மகாபாரதத்தில் இராமாயணக் கதைகள் பல இடம் பெற்றுள்ளன. வான்மீகியைப் பற்றி மகாபாரதம் மகாரிஷி என்று கூறுகிறது. மேலும் இராமாயண சுந்தரகாண்டத்தில் வரும் இருவரிகள் மகாபாரதத்தின் 7ஆம் பருவத்தில் காணப்படுகிறது. எனவே வான்மீகி இராமாயணம் பற்றி மகாபாரத ஆசிரியர் அறிந்திருக்கின்றார் என்றே கூறவேண்டும். எனவே இதிகாசங்களில் இராமாயணமே காலத்தால் முந்தியது எனக் கருத இடமுண்டு.

ஆதிகாவியமாக விளங்கும் இராமாயணத்தில் அக்கால சமய இலக்கியங்களிற் காணப்பட்ட சமய சிந்தனைகள் தத்துவக் கருத்துக்கள், ஞானிகளின் வரலாறு , தவத்தின் பெருமை, ஆச்சிரம வாழ்க்கை, தர்மத்தின்சிறப்பு, விரதம், யாகங்கள் போன்ற தெய்வீக வரலாறுகளை அறிய முடிகிறது. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியிலே சிறப்பிடம் பெறுகின்ற சமய மரபுபற்றிப் பல்வேறு நிலைகளில் புதிய விளக்கங்களை அறியத் தெய்வீக வரலாறு துணை புரிகிறது. இப்படியான தெய்வீக வரலாறு-களையும் தெய்வத்தின் வீரதிரச் செயல்களையும் தோற்றப்பொலிவுகளையும் இராமாயணத்தில் மிகையாக அறியக்கிடக்கிறது. இராமாயணத்திற் காணப்படும் இந்துத் தெய்வீகவியற் கருத்துக்களை டுத்து நோக்குவோம்.

இராமாயணத்தில் சிவன் முக்கிய தெய்வமாகக் காணப்படுகிறான். எனினும் சிவனைப் பற்றிய சில செய்திகளே காணப்படுகிறது. பகீரதன் தவமிருந்து கங்கையை வரவழைத்ததும் பின் அதன் வேகம் தாங்கமுடியாது சிவனிடம் முறையிட்டு சிவன் தலையில் அதனை அடக்கிக் கொண்ட கதையும். திருப்பாற்கடலைக் கடைந்தமையும். அதனால் விஷம் அவர்களைத் துரத்திச் சென்ற போது விஷ்ணு சிவனை அணுகச் சிவன் அவ் விஷத்தை அருந்தி அபயம் அளித்தார். சிவன் அந்தகனை அழித்தமை பற்றியும் முப்புரங்களை எரித்த வரலாறும் காணப்படுகிறது. கௌசலை

சிவனை வழிபட்டமையும், இராவணன் சிறந்த சிவபக்தனாக விளங்கியமையும், தான்சென்ற இடமெல்லாம் லிங்கத்தை ஸ்தாபித்துக் சென்றான் எனவும் 108 மந்திர நாமங்களாற் சிவனை நாள் தோறும் வழிபட்டு வேதாத்யானம் செய்து வைதீக கர்மத்தை நன்றாக அனுஷ்டித்தான் என இராமாயண பாத்திரங்களூடாக அறிய முடிகிறது. அத்துடன் இராமாயண உத்தர காண்டத்தில் சிவவழிபாடு பற்றிய செய்திகளும் காணப்படுகிறது. அத்துடன் சிவனே இராமனாக அவதரித்தான் எனவும் கருதப்படுகிறது.

இராமாயணத்திலே சிவனுக்கு உமையைக் கன்னிகாதானம் செய்த கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இமயவானின் மகளாகிய கங்கை உமை இருவரில் கங்கை பூமிக்கு வந்து சிவனின் முடியில் உள்ளது. உமை தவம் புரிந்து சிவனை அடைந்த வரலாறும் உமை புத்திரரைப் பெறுவதற்காகச் சிவனை நோக்கித் தவம் இருந்த வரலாறும் சிவனும் உமையும் சேர்ந்து தவம் இருந்த வரலாறும் காணப்படுகிறது. இது சைவமும் சாக்தமும் அக்காலத்தில் நிலவியதை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் இராவணன் தான் வெற்றி பெறும் பொருட்டுத் துர்க்கையை வழிபாடு செய்த செய்தியும் காணப்படுகிறது. அத்துடன் மகாலஷ்மியே சீதையாக வந்து அவதரித்தார் எனவும் இராமாயணம் கூறுகிறது.

இராமாயணம் விஷ்ணுவின் அவதாரக் கோட்பாட்டையே வலியுறுத்துகிறது. சில நூல்கள் சிவனே இராமனாக அவதரித்தது என்றும் பிரம்மாவே இராமனாக அவதரித்தார் என்றும் கூறுகின்றன. ஆனால் வான்மீகி இராமாயணம் பாலகாண்டத்திலே தேவர்கள் நாராயணனைப் பிரார்த்திக்கும் போது நாராயணனே ஸ்ரீ ராமனாக அவதரித்ததாகக் கூறுகிறது. இதை அயோத்தியா காண்டம், உத்தரகாண்டம், யுத்தகாண்டம், பத்மபுராணம், ஸ்ரீபாகவத புராணம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம் போன்றவையும் வலியுறுத்திக் கூறுகின்றன. இதை விட தத்வஸங்கீஹர இராமாயணம் மனு நைமிசாரண்யத்திலுள்ள கோமதி நதித்தீரத்தில் தவம்செய்த போது நாராயணன் தோன்றி என்ன வரம் வேண்டும் எனக் கேட்டபோது தாங்களே எனக்குப் புத்திரனாக வரவேண்டும் எனக் கேட்ட போது உனது விருப்பம் நிறைவேறும் உலகத்தில் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட யுகந்தோறும் அவதரிக்கிறேன் எனக் கூறி வரம் அளித்ததாகக் கூறுகிறது. இது விஷ்ணுவின் அவதாரக் கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

மநுவுக்கு அளித்த வரத்தின்படி ரகுவம்சத்தில் மநுதசரதனாகவும் மனைவி கௌசலையாகவும் விஷ்ணு இராகவனாகவும் அவதரித்தனர். விருஷ்ணி குலத்தில் மநு வாசுதேவனாகவும் மனைவி தேவகியாகவும் விஷ்ணு கிருஷ்ணராகவும் அவதரித்தனர். கலியுகத்தில் தேவ வருடத்தின் ஒராயிரத்தின் முடிவில் பிராமணகுலத்தில் விஷ்ணுவிரதன் எனும் பெயருடைய விப்ரனுக்கும் தேவதைக்கும் கல்கிருபியாக விஷ்ணு பிறப்பார் எனக் கூறுகிறது. இவ்வாறு விஷ்ணுவே இராமனாக அவதரித்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டினார். மகாலக்சுமி சீதையாக அவதரித்ததாகவும் விஷ்ணு 11000 வருஷகாலம் மானுட உலகத்தில் வசித்துச் சங்கரனை நினைத்துத் தவம் செய்தவர்களுக்கும், மும்மூர்த்திகளின் அதிதியான என்னை எப்பொழுதும் தியானித்தவர்களுக்கும் அருளும், சாபத்துக்குள்ளானவர்களுக்கு முத்தியும் அளிக்க நந்தியின் சாபத்துக்குள்ளனவர்கள் வானரங்களாகப் பிறந்து எனக்கு உதவுங்கள் என விஷ்ணு வரம் அளித்தார். எனவே விஷ்ணு இராமனாக அவதரித்தார்.

இராமனின் முடிசூட்டு விழாநடைபெறப் போகிறது என அறிந்து கோசலை நடுக்கமும் உவகையும் அடைந்து சுமித்திரையையும் அழைத்துக் கொண்டு போய் மின்னுகின்ற சக்கரங்களுடைய திரு நாராயணமூர்த்தியின் கோவிலை அடைந்து வேண்டுதல் செய்கின்றார். அது போல் முடிசூட்டு விழாவின் முதல் நாள் இராமனும் சீதையும் நாராயணன் கோயிலில் ஓமத் தீயில் அவிசு கொடுத்து எஞ்சியதைச் சீதையும் தானும் உண்டு ஆயிரம் பெயர் சொல்லித் துதித்து சன்னிதியிலேயே தருப்பைப் புல்லை பரப்பிப்பள்ளி கொண்டனர். இதனால் நாராயண வழிபாடு இராமாயாண காலத்தில் இருந்தது என அறிய முடிகிறது.

அத்துடன் வான்மீகி இராமாயண பாலகாண்டத்தில் முருகனது தோற்றம், வளர்ப்பு தேவசேனாதிபதியாக வந்து போர் புரிதல் முதலிய முருகனது செய்தியும் காணப்படுகிறது.

இராமாயணத்தில் மரவழிபாடும் காணப்படுகிறது. பரத்துவாசரின் வேண்டு கோளின்படி சீதை சீயாமா என்ற ஆலமரத்தை வழிபட்டதாகவும், இராவணன் தன்னைக் கவர்ந்து செல்லும் போது பல்வேறு மரங்களுக்கு உரிய தெய்வங்களை வணங்கி இராவணனிடமிருந்து தன்னைக் காக்கும் படியும் இராமனிடம் இந்தச் செய்தியைக் கூறும் படியும் வேண்டுகிறாள். இதனால் இராமாயண காலத்தில் மரங்களும் தெய்வீகம் பெற்று இருந்ததை அறியமுடிகிறது.

நதிவணக்கமும் இங்கு சிறப்படைந்து இருந்தது. இராம இலக்குமணர் விசுவாமித்திருடன் செல்லும் போது முனிவர்களால் வாசம் புரிந்து சேவிக்கப் பெற்ற நதிகளுட் சிறந்த ஜாந்நவி எனும் கங்கை நதியைத் தரிசித்தனர் என்றும் கங்கை இமயவானின் மகள் என்றும் கருத்துக் கூறப்படுகிறது. கங்கை யமுனை சங்கமம் புனித தீர்த்தமாகக் கொள்ளப்பட்டன. இந்நதிகளில் நீராடுதல் பாவத்தைப் போக்கும் எனக் கருதப்பட்டது. இராமன் இராச்சியத்தை மீண்டும் பெற உதவும் படி கங்கைக்கு வழிபாடு இயற்றினார். சீதை நர்மதை நதியை வணங்கினாள். இராமன் நீராடியதால் நதிகளும் வாவிகளும் புனிதமடைகின்றன. என நதிகள் பற்றிய தெய்வ இயல்பு பற்றிய வரலாறு காணப்படுகிறது.

வேதங்களில் மிகவும் சிறப்பாகப் போற்றப்பட்டு வந்த ரிஷிபரம்பரை இராமாயண காலத்திலும் மேன்மையடைந்திருந்தது. இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை உருவாக்கியதோடு அல்லாமல் பண்பாட்டு விழுமியங்களை மக்கள் மனதில் தெளிவுபடுத்தவும், சமய வாழ்வு வாழ உதவுவதிலும் மக்களுக்கும், மன்னர்களுக்கும் ரிஷிகள் புத்திமதிகள் கூறுகின்றனர். ரிசியசிருங்கர், பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர் எப்பொழுதும் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் எனவும் கூறப்படுகிறது. இராமனுக்குக் குருவாக விசுவாமித்திரர் விளங்குகின்றார். தசரதன் புத்திரகாமேஷ்டியாகம் செய்யச் சிருங்கிமுனிவரை அழைத்து வாக்குக் கேட்டார். அதேபோல் புரோகிதர்களையும் அவைக்கு அழைத்து அவர்களது புத்திமதிகளுக்கும் மதிப்பளித்துள்ளனர்.

பசுவணக்கம் இருந்தமையும் பசுக்களைக் கொல்லக் கூடாது என்ற கருத்தும் கூறப்படுகிறது. கௌசலை இராமன் முடிசூடப் போகிறான் என அறிந்து மகிழ்ந்து தவத்தினருக்குப் பசுக்களைத் தானமாக வழங்கினாள் என்றும் கூறப்படுகிறது. சீதை தன்னையும் பந்துக்களையும் கங்கை காப்பாற்றுமாயின் தான் பிராமணர்களுக்கு

ஒரு லட்சம் பசுக்களைத் தானம் செய்வதாகப் பிரார்த்திக்கிறாள்.

இராமாயணத்தில் கிரியைகள் பற்றிய செய்திகளையும் காணலாம். காலை மாலை தேவர்களையும், பிதிரர்களையும் பூஜித்தல், யாகங்கள் செய்தல், சிந்தையை அடக்கித் தியானித்தலும் தசரதன் புத்திரப்பேறு வேண்டிப் புத்திரகாமேஷ்டியாகம் செய்ததும், அஸ்வமேதயாகம் செய்ததும் இராமன் சீதை கௌசலை நாரயாணனை நோக்கி விரதம் அனுஷ்டித்தமையும் காணப்படுகிது. சந்தோசமான கொண்டாட்டங்கள், தேசிய கொண்டாட்டங்கள், துக்கதினம் முதலியவற்றில் சமய அனுட்டானங்கள் நடைபெற்றன. மூடிசூட்டுவிழா, இராமனது திருமண விழாவின்போதும் அயோத்திக்கு மீளும் போதும் சமயச் சடங்குகள் நிறைவாக நடைபெற்றன. தன்னடக்கத்தை மேற்கொள்ளல் கடவுளரை வேண்டுதல். துர்நிமித்தங்களின்போது தெய்வங்களை வேண்டுதல் போன்ற தெய்வீக அம்சம் சார்ந்த கிரியைகளைத் தமது நாளாந்த வாழ்க்கையிற் கடைப்பிடித்தனர்.

சாபமிடல் மந்திர சக்தி வாய்ந்தது என்றும் இறைவனிடம் வேண்டிய வரங்களைப் பெறுதல் என்பனவும் இராமாயணத்திற் காணப்படுகிறது. கும்பகர்ணன் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை நித்திரையில் கழித்ததும், அனுமான் தன்பலத்தை மறந்ததும், இராவணனது தலை சுக்குநூறானதும், இந்திரனும், அகலிகையும் கௌதமரிடம் சாபம் பெற்றதும் அம்சாபங்களுக்கு விமோசனமும் வழங்கப்பட்டது என்றும் கூறுகிறது. அத்துடன் இராவணன் தவம் இருந்து மும்மூர்த்திகளினாலும் கொல்லப் படாத வரம் பெற்றான் எனவும். பகீரதன் தவம் இருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான், உமை தவம் இருந்து சிவனை அடைந்தாள் எனத் தவத்தின் பெருமையும் காணப்படுகிறது. பிரதிக்கினை எனப்படும் நேர்த்திக்கடன்களைச் செய்யும் முறையும் காணப்பட்டது. தான் வணங்கும் சக்தியின் மீது வைக்கும் நம்பிக்கையினால் உந்தப்பட்டு அத்தெய்வத்தை உபாசித்து பிரதிக்கினை செய்வதும் அது நிறைவேறினால் பிரதிக்கினையின்படி செய்வதும் காணப்பட்டுள்ளது. சீதை தன்னையும் பந்துக்களையும் காப்பாற்றினால் ஒருலட்சம் பசுக்களைத் தானம் செய்வதாகப் பிரதிக்கினை செய்தாள்.

இராமாயணத்தில் விழாக்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. இந்திரத்துவஜவிழா, விவாகவைபவம், முடிசூட்டுவிழா, பொதுசனவரவேற்பு விழாக்கள், அரசபவனி-வருதல், அன்னதானம் வழங்குதல், வேள்விகள் செய்தல் முதலிய விழாக்கள் சிறந்து விளங்கியது.

இந்துமதம் போதிக்கும் அறம்,பொருள் இன்பம், வீடு எனும் அறநெறிகள் இக்காவியம் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. இராமன் அறவழியிலே பொருளையும் இன்பத்தையும் அனுபவிக்கிறான். ஆனால் இராவணன் கூடாத ஆசையினால் அழிகிறான். இது அறம் நிலைக்கும் மறம் அழியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இராமாயணம் இந்துக்களது கர்மம் மறுபிறப்பு பற்றிய கருத்துக்களையும் எடுத்துக் கூறுகிறது. நல்வினை தீவினைப்பயன்களையும் நல்வினை செய்தோர் சொர்க்கத்தையும் தீவினை செய்பவர் நரகத்தையும் அடைவார் எனும் கருத்து காணப்படுகிறது. அமரத்துவம், ஆத்மவிடுதலை, லௌகீக தர்மம், கிருகஸ்ததர்மம், இராஜதர்மம், வர்ணாச்சிரமதர்மம், முதலியவற்றையும் எடுத்துக்



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கூறுகிறது. அத்துடன் கற்பின் சிறப்புப் பற்றியும் எடுத்துக் காட்டுகிறது.

இராவணன் சிறந்த சிவபக்தன். இராவணனைக் கொன்றதால் இராமனுக்கு வீரஹத்தி, சாயாஹத்தி, பிரம்மஹத்தி எனும் தோசங்கள் உண்டானது. இதனால் இராமன் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பாவம் போக்கினார். இராமேஸ்வரத்தில் இராமன் பிரமஹத்தி தோசம் நீங்கப் பிரதிஷ்டை செய்தலிங்கம் இராமநாத சுவாமியாக இருக்கிறது. இன்றும் தனுஷ்கோடி சிறந்த இடமாக விளங்குகிறது.

சரணாகதி தத்துவமும் சிறந்து விளங்குகிறது. அனுமானின் பக்திமார்க்கமும் விபீடணனின் சரணாகதியும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இராவணனது மாளிகைக்குட் காணப்பட்ட புஷ்பகவிமானம், சிவிகை என்பனவற்றின் ஓவியங்கள் காணப்படுகிறது. எனவே இக்காலத்தில் கலைகளும் சிறப்பிடம் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. எனவே இராமாயணம் விஷ்ணுவின் அவதாரதத்துவத்தின் ஊடாக இராமனது பெருமைகளை எடுத்துக் கூறினும் இந்து தெய்வவியல் சம்பந்தமான நிறைவான கருத்துக்களும் காணப்படுகிறது.

கிரியைகள், யாகங்கள், தெய்வ வழிபாடுகள், தர்மம், அறம், கர்மமறுபிறப்பு சாபமிடல், கலை, ஒழுக்கவியல், போன்ற இன்னோரன்ன தெய்வவியல் கருத்துக்களைஆதிகாவியமாகிய இராமாயணம் எடுத்துக் கூறுகிறது. இதனால் இந்து தெய்வீக வரலாறுகள் மூலம் இந்துசமயமும், இந்துப்பண்பாடும் வளம் பெற்றுத் திகழ இராமாயணம் உதவுகிறது என்றால் மிகையாகாது.



# சேக்கிழார் காட்டிய பெண்மைச் சிறப்புகள்

திருமதி. சாந்தி நாவுக்கரசன்

*"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர் படைத்த*
*தொல்லையதாம் திருத் தொண்டத் தொகையடியார்*
*பதம் போற்றி*
*ஒல்லையவர் புராணக்கதை உலகறிய விரித்துரைத்த*
*செல்வ மலி குன்றத்தூர் சேக்கிழாரடி போற்றி"*

*"எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்.*
*நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்*
*தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்*
*கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்"*

*"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்*
*துதிசெய்யும் நாயன்மார் தூய சொல்மலர்ப்*
*பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை*
*விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"*

பெண்மை என்றாலே மென்மை என்பர். "பெண்மை என்பது கட்புலனாகியதோர் அமைதித் தன்மை" என்பர். அடியார்க்கு நல்லார், நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்றால் அதன் தலைமைப் பேராசான் பெண்ணே, மனைக்கு மாட்சிதரும் மகளிர் நம் நாட்டில் பண்டைக் காலந்தொட்டே மாண்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

பெண்மைக்குப் பெருமை கொடுத்த நாடு பாரத நாடு. அதேபோல் பெண்மைக்கும் பெரும் பங்கு கொடுத்த சமயம் சைவ சமயம். தெய்வநிலை, தொண்டுநிலை என்பவற்றில் இப்பங்கு இருந்துகொண்டே வந்திருக்கின்றது. சமயம் ஒழுக்கத்தினின்றும் வேறுபடாதது மன்றி இணைபிரியாததுமாக அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் சமய உணர்வு உயிர் நாடியாகவே உள்ளது. இதனைச் சிறப்பாகப் பெரிய புராணத்தில் சேக்கிழார் எடுத்துக் காட்டுகின்றார்.

அரன்பூசை, அடியார்பூசை, விருந்தெதிர்தல், திருத்தொண்டு புரிதல், சிவசின்னம் பேணல், தற்காத்தல், தற்கொண்டாற் பேணல், கற்பு நெறி விடாமை என்பவற்றை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். குடும்ப வாழ்வில் இருந்து கொண்டே சைவப் பெருமங்கையராக இத்தனை பணிகளையும் செய்தனர். இல்லறத்தை முறப்படநின்று நடத்துவோர் இல்லக்கிழத்தியராக இருப்பதால் சமய உணர்வு நல்கும் பொறுப்பும் அவர்களுக்கே உரியது. இப்படியாக வாழ்ந்த பல பெண்களுடைய வாழ்க்கைச் சிறப்புக்களை நினைவூட்டிக் கொள்வது வெறும் மகிழ்ச்சிக்காகவன்று, அந்த நினைவினாற் திருத்தொண்டில் நமக்கு ஊக்கமும், ஆண்டவன் நினைப்பும் ஏற்படுத்துவதற்காகவேயாகும்.

பெரிய புராணம் என்பது பெரியவர்களின் புராணம். பெரியவர்கள் யார்? செயற்கரிய செய்வார் பெரியர், என்றார் வள்ளுவர். "பேசவொண்ணாப் பெருமையர்" என்று கூறுகிறார் சேக்கிழார். அத்தகைய சிவனடியார்களின் வாழ்க்கைக்குப் பற்றுக் கோடாக அமைந்தவர்கள் பெண்மணிகள் என்பதை நாம் மறக்க முடியாது. இவர்கள் வீட்டில் இருந்தபடியே பெருந்தொண்டு புரிந்துள்ளனர். அடக்கமாக அவர்கள் வாழ்ந்து பெருந்தொண்டு புரிந்து கணவன்மாரையும் அவ்வழிக்கண் செலுத்தி நின்ற தன்மையை நோக்கி "மனையறத்தின் வேரனையார்" என்றார் சேக்கிழார். சங்கமருவிய காலத்திலும், பல்லவர் காலத்திலும் வாழ்ந்த பெண்மக்களின் சிறப்பைப் பெரிய புராணத்தில் காணலாம். இவர்களைப் பெரியபுராணத்திற் போற்றிய போது "திருவினும் பெரியாள்" என்றும், "விதிமணக்குல மடந்தை" என்றும் "தூண்டு தவவிளக்கு" என்றும்,

"நற்பெருந் தெய்வம்" என்றும் "மங்கையர்க்குத் தனியரசி" என்றும் பாடுகிறார் சேக்கிழார்.

அன்பு, தியாகம் செய்யும் மனத்திண்மை, தொண்டு நெறி, ஆன்மீக உன்னதம், தீராத தெய்வபக்தி இவையெல்லாம் திருமுறைகளில் காணப்படும் மகளிர்பால் நிறைந்திருப்பதை ஊன்றிப் படிப்போர் அறிந்து கொள்ள முடியும். அதனால் தான் காரைக்காலம்மையும், திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும், பரமனைப் போற்றிய பாவைநாச்சியாரும், மங்களம் பொங்கும் சங்கிலியார் பரவையாரும் போன்ற மகளிர் திலகங்கள் காலத்தைக் கடந்து வாழும் தூய நெறித் தெய்வ நங்கையர்களாகப் போற்றப்படுகின்றனர்.

முதலில் வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெரும் தொண்டும், தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைக் கவனிப்போம். "திருநீலகண்டம்" என்ற சொல்லையே தனது மந்திர வாக்காகக் கொண்டு ஒழுகி அடியார்க்குத் திருவோடு செய்தளித்து வாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புறஒழுக்கங்கள் காரணமாக கருத்து வேற்றுமை மனைவியாருக்கு இருந்தது. சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாது என்பது அவரின் மனைவியாரின் எண்ணம். ஒரு நாள் கணவனார் தீண்டப் போன சமயத்தில் எம்மைத் தீண்டுவீர் ஆயின் திருநீலகண்டம் என்று சத்தியம் செய்தார். கணவனார் சிறந்த தொண்டர் ஆகையால் திருநீலகண்டம் என்ற வாக்கை உன்னி அன்று முதல் தனது மனைவியையோ அன்றிப் பிற பெண்களையோ சாரவில்லை. இந்தச் சம்பவங்கள் அண்டை அயலார்க்குத் தெரியாத வண்ணம் வாழ்க்கை நடத்தினார் அவர் மனைவியார்.

**"கற்றுறு மனைவியாரும் கணவனார்க் கானவெல்லாம்**
**பொற்புற மெய்யுறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய**
**இற்புறம் பொழியா தங்கண் இருவரும் வேறுவைகி**
**அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்"**

கணவருடைய கடமைகளிலும் குடும்பக் கடமைகளிலும் தவறு நேராமலும் வேண்டிய வேண்டியாங்கு செய்து வேறு வேறு வாழ்ந்தமையைத் தானும் அயலார் அறியாவண்ணம் பேணிக்காத்து வாழ்ந்தவர் திருநீலகண்டர் மனைவியார்.

இயற்பகையாரின் மனைவியார் கணவனது பெருமைக்குப் பெருங்காரணமாக அமைந்தவர். கணவனது சொல் திறம்பாமல் சிவபக்தி, அடியார் பக்தி என்பவற்றில் மேம்பட்டு வாழ்ந்தமையால் பெரிய தியாகச்செயலை செய்ய முன்வந்தார். வந்த அடியார்க்குத் தன்னைக் கொடுக்க இசைந்து விட்டார் கணவனார் என்பதனைக் கேட்டவுடனே

***"இன்று நீர் எனக்கருள் செய்த திதுவேல்***
***என்னுயிர்க் கொருநாத நீருரைத்த***
***தொன்றை யான் செய்யுமத்தனை யல்லால்***
***உரிமை வேறுளதோ எனக்கு"***

எனக்கூறிய மாண்பை நாம் நினைத்து நினைத்து மகிழலாம். சிவனடியார் அம்மையாரைக் கூட்டிச்சென்ற போது வழியிலே இடைமறித்த சுற்றத்தவர் எல்லோரும் எதிர்த்தார்கள். அஞ்சினவர் போல் மறை முனிவர் காட்சியளித்தார்.ஆனால் அம்மையாரின் தீரத்தினை உறுதியினை அவ்விடத்தே காணலாம்

***"மறைமுனி அஞ்சினான் போல மாதினைப்***
***பார்க்க மாதும்***
***இறைவனே அஞ்சவேண்டாம் இயற்பகை***
***வெல்லும்"***

என்று கணவனுடைய நியமத்துக்கு மாசு நேரிடாதபடி தன்னையே தியாகம் செய்யச் சித்தமானார் இவ்வம்மையார் என்றால் "திருவினும் பெரியாள்" என்று சேக்கிழார் கூறுவதில் வியப்பில்லையே.

மகேஸ்வர பூசையில் சிறப்புற்று நின்ற இளையான் குடிமாறரின் மனைவியாரையும் நாம் போற்றுதற்குரியோம். வறுமையின் உச்ச நிலையிலும் மனவளம் குன்றா மாண்பினர் இவர். சிவனடியார்களுக்கு அமுது செய்வித்த திறத்தைச் சேக்கிழார் சிறப்பாகக் காட்டுகின்றார்.

*"கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே*
*மண்டு காதலின் ஆதனத்திடை வைத்த ருச்சனை செய்தபின்*
*உண்டி நாலு விதத்திலாறு சுவைத் திறத்தள வொப்பிலா*
*அண்டர்நாயகர்தொண்டர்இச்சையில்அமுதுசெய்ய அளித்துளார்"*

ஆனால் பொருள்வளம் சுருங்கி இருந்த நேரத்தில் ஒருநாள் சிவனடியார் ஒருவர் மாரிக் காலத்து நள்ளிரவிலே கொட்டும் மழையிடையே இவர்கள் வீட்டுக்கு வந்தார். பசித்திருந்த நிலையை உணர்த்தி நின்றார். தமது திருத்தொண்டாகிய மகேஸ்வர பூசைக்கு முட்டு நேரிடாது அன்று பகல் விதைத்த நெல் முளைகளை வாரி அக்கினியில் வறுத்து அமுதாகப் படைத்தார். இத்தகைய சிறந்த தொண்டைச் செய்தமையால் இறைவன் அவருக்குக் காட்சி கொடுத்து, "அன்பனே அன்பர் பூசை செய்த நீ அணங்கினோடும் எம்பெரும் உலகமெய்து" என்றருளினார்.

முதற்குலமான அந்தணர் குலத்திற் பிறந்தும் வேளாள குலத்திற் பிறந்த அப்பர் பெருமானைத் தொண்டர் எனக் கொண்டொழுகிய மாண்பு அப்பூதியடிகள் குடும்பத்திற்குரியது. பிணமான மகனையே மறைத்து விட்டுக் கணவனும், மனைவியும் ஒரே உள்ளப் பாங்கோடு திருநாவுக்கரசரை அமுது செய்விக்க முன்வருகிறார்கள். அப்பூதியடிகளாரின் மனைவியார்.

*"புகழ்ந்த கோமயத் துநீராற் பூமியைப் பொலிய நீவித்*
*திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி*
*நிகழ்ந்த அக்கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்*
*மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின்வைத்தார்"*

என்பதை அழகாகக் காட்டுகின்றார்.

சிறுத்தொண்ட நாயனாரும் மனைவியாரும் தமது பிள்ளையையே கறியாகச் சமைத்து அமுது படைத்த திறம் சொல்லும் திறமன்றோ.

மனையறத்தைப் பற்றிப் பேசவருகிறார் சேக்கிழார் பெருமான். இல்லறத்தைப் பற்றிப் பேசுகின்ற இன்றைய புலவர்கள் கூட "இல்லாள்" என்ற சொல்லுக்கு நிகராக "இல்லான்" எனச் சொன்னால் ஒன்றும் இல்லாதவன் என்றாகிவிடுமே எனத்தான் எண்ணுகிறார்கள். சேக்கிழார் தமக்கே உரிய தனிச்சிறப்புடன் இரண்டு மூன்று இடங்களில் கூறுகிறார். "இல்லாளன் அகத்திருக்க" என்று அருளிச் செய்கிறார். இல்லாளன் என்றால் இல்லை ஆளுகின்றவன் என்ற பொருள் படுமல்லவா? இல்லாளன் என்கின்ற சொல் சேக்கிழார் பெருமான் கையாண்டிருக்கும் மிகச்சிறப்புமிக்க ஒரு சொல்.

மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை

சிறுத்தொண்டருடைய மனைவியைப் பற்றிக் கூறவந்த சேக்கிழார் "மனைவி என்பவள் இல்லறம் என்னும் மரத்துக்கு வேராக விளங்குகின்றவள்" எனக் கூறுகின்றார். ஒருமரம் செழிப்பதற்கு அம்மரத்தின் வேர் காரணம். அதுபோல் இல்லறமாகிய மரத்துக்கு வேராகி வாழ்பவள் மனைவி. அவள் மாண்புடையவளாக இருந்தால் தான் இல்லறம் சிறப்படையும்.

*"நீராகும் சடைமுடியார்அருளினால் நிறை தவத்துப்*
*பேராளர் அவர் தமக்குப்பெருகு திரு மனையறத்தின்*
*வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை பால்*
*சீராள தேவர் எனும்திருமைந்தர் அவதரித்தார்"*

என்று தெரிவிக்கின்றார்.

ஒரு வேர் "நானும் கொஞ்சம் வெளியே தெரிகிறேன்" என்று வெளிவருமானால் மரம் சாய்ந்துவிடும். காணாமல் இருந்து கனியச் செய்வதுதான் வேரினது இயல்பு. அந்த வேரிலே புழு இருக்குமானால் மரம் பட்டுப் போய்விடும். எனவே இல்லறத்தைக் காக்கின்ற ஒரு நல்ல மனைவி வீட்டிலே நடக்கின்ற எல்லாச் செயல்களுக்கும் உடனாக இருப்பதோடு வெளியே தெரியாமல் உள்ளடங்கிக் குறை என்னும் புழுவிழுந்து மாசுபடாமல் இருக்க வேண்டும் என்ற குறிப்பை "வேராகி விளங்கு" என்ற இரு சொற்களாலே சேக்கிழார் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுகிறார். தமிழர் சமுதாயத்தில் ஒரு மனைவியின் பண்பாடு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதன் மூலம், நமக்கெல்லாம் ஒரு படிப்பினையைத் தருகிறார் என்றே கொள்ள வேண்டும்.

இளையான் குடிமாறநாயனாருடைய புராணத்தில் அவருடைய மனைவியாரைப் பற்றிச் சில குறிப்புகள் தருகிறார் "சோர்விலாது கணவனார் சொற்காக்கும் பெண்" என்ற இலக்கணத்திற்கு இணங்க வாழ்ந்தவர். இறைவனும் இளையான் குடிமாறரின் வறுமையில் செம்மையான அன்பைக் காணவே செல்லுகிறார். சிவபெருமான் காளை வாகனமும் இன்றிக் காதல் உமையாளும் இன்றிச் சிவனடியார் வேடங்கொண்டு நல்ல மழை பெய்யும் நள்ளிரவில் நாயனாரின் இல்லத்தினை வந்தடைகிறார். இப்படி வந்த சிவபெருமான் அன்னத்துக்காகச் செல்லவில்லை என்பதைச் சேக்கிழார் குறிப்பாக உணர்த்துகிறார்.

*"கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத*
*கொள்கையர் ஆயினார்"*

என்பதில் பன்றியும், அன்னப்பறவையும் என்ற பொருள் வெளிப்படையாகத் தோன்றினாலும் இளையான்குடிமாறரின் இல்லத்தில் இருக்கும் பாத்திரத்தையோ (ஏதனத்தை), அதிலிருக்கும் சோற்றையே (அன்னத்தை) சிவன் விரும்பவில்லை. அவருடைய வறுமையில் செம்மையான அன்பைக் காணவே செல்கின்றார்.

"வழிவரும் இளைப்பினோடும்வருந்திய பசியினாலே
அழிவுறும் ஐயன் என்னும்அன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம்பாத புன் செய்க்குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்பறித்தவை கறிக்கு நல்க"

என உணவு சமைக்கின்ற விதத்தைக்கூட சேக்கிழார் எவ்வளவு அழகாகச் சொல்கிறார்.

சேக்கிழார் பெருமான் அந்த அம்மையாருடைய சமைக்கும் திறமையைக்கூட சொல்கிறார். இன்னொன்று கூட இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம். முதலிலே அன்னம் செய்த பின்னர் கறியமுது செய்ய வேண்டும் என்பதை குறிப்பாக உணர்த்துகிறார். இளையான் குடிமாறரின் மனைவி அன்னம் செய்த பின்புதான் "கறிக்கு இனி என்ன செய்வோம்" என்று கேட்டுப்பின் கணவனார் பறித்து வந்த கீரையை வேறுவேறு கறியமுதாக்குகிறார். சேக்கிழார் புனிதவதியாராகிய காரைக்காலம்மை வரலாற்றிலும் சொல்கிறார். முதலில் "கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட காய்கறி செய்யவில்லை. குழம்பு, பருப்பு, ரசம் முதலியனவும் செய்யவில்லை. அமுதாகிய உணவு மட்டும் சமைத்திருக்கிறார்" என்று கூறுகின்றார்.

உணவு உண்ணுகின்ற முறை பரிமாறுகின்ற முறையைக் கூடச் சேக்கிழார் சொல்லுகின்றார். அப்பூதியடிகள் வாழ்க்கை வரலாற்றில் பார்க்கலாம்.

*"நிகழ்ந்த அக்கதலி நீண்ட*
*குருத்தினை விரித்து நீரால்*
*மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய்*
*வலம் பெற மரபின் வைத்தார்"*

இனிக் கணவன்மாருக்கு முன்னணியில் நின்று பெருந் தொண்டாற்றிய இரு பெண்மணிகள் பற்றிக் கவனிப்போம். இப்படியாக முன்னணியில் வரவேண்டிய நிலை, சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. காரைக்கால் அம்மையார் சாதாரண பெண்ணாகச் சமையல் அறையிலே காட்சி தந்து தெய்வீகப் பெண்ணாக அம்பலத்திலே பேய்க்கணங்களில் ஒன்றாக விளங்குகிறார். இளமையிலே பொருவிடையார் திருவடிக் கீழ் ஓங்கிய அன்புறு காதலுடையவர் மனையறத்தின் பண்புவழாமற் கருமமாற்றியவர். நம்பன் அடியார்க்கு நல்ல திருவமுது அளித்தவர்.

செம்பொன்னும், நவமணியும் செழுந்துலகிலும் தகுதிநோக்கிச் சிவனடியார்க்கு நல்கியவர். ஆனால் மாம்பழம் காரணமாக அம்மையாரின் தெய்வீகத்தைக் கணவன் உணர்ந்து பிரிந்தான். பிரிந்தவர் தான் வழிபடுமோர் தெய்வமாக உள்ளத்திலே வைத்து அம்மையைப் பூசித்தான். புதுக்குடித்தனத்தில் தான் பெற்ற குழந்தைக்குப் புனிதவதி என நாமஞ் சூட்டினான்.

பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவ பெருமானால் "அம்மையே" என்று அழைக்கப்படும் அரும்பெரும் பேறுபெற்றவர் அம்மையார் ஒருவரே. தேவாரப் பாடல்களுக்கு நாற்றங்காலாக விளங்குவது இவ்வம்மையின் பக்திப் பனுவல்களே. இவர் இயற்றிய நூற்றிநாற்பத்து மூன்று பாடல்களும் பக்தி இலக்கியத்திற்குப் பண்ணையாவது. தமிழிலக்கியத்திற்குப் பாதையாவது, "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என்று பரம் பொருளாலேயே உளம் குளிர அழைக்கப்பட்டவர். மனத் திண்மைக்கு இலக்கணம், பக்தியின் திருஉரு. பெண்மைக்கு பெரும் புகழ் சேர்த்து இறவாத இன்ப அன்பை வேண்டிப் பெற்றவர். மடுத்த புனல்வேணியனார் எடுத்தருளும் பொற்பாதத்தின் கீழ் பாடியிருக்கும் பேறு பெற்றவர். இவரது தன்மையை இவர் கணவராகிய பரமதத்தனே கூறுவதாக அமைத்திருக்கிறார் சேக்கிழார்.

*"மற்றவர் தம்மை நோக்கி*
*மானுடம் இவர்தாம் அல்லர்*
*நற்பெருந் தெய்வமாதல்*
*நானறிந் தகன்ற பின்பு*
*பெற்ற இம்மகவு தன்னைப்*
*பேரிட்டேன், ஆதலாலே*
*பொற்பதம் பணிந்தேன் நீரும்*
*போற்றுதல் செய்மின்"* என்றார்.

கணவனாலேயே தெய்வமாகப் போற்றப்படும் பெருமை அம்மையாருக்குக் கிடைத்தது. கணவனுக்காகவென்று தாங்கியிருந்த வனப்பை நீக்கி அருளுமாறு இறைவனை வேண்டினார். என்புருவம் அருளப்பெற்றார். அம்மையார் என்புருவை வேண்டிப் பெற்றதனை சிவபெருமானே உமாதேவியாரிடம் கூறுவது சிந்திக்க வேண்டிய ஒன்று. பெண்ணுரிமை பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் அம்மையாரின் மனத்திண்மை திடபக்தி முதலியவை நுட்பமாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. போற்றப்பட வேண்டியதொன்று. கணவன் தன்னை விட்டு நீங்கியதன் காரணத்தை அறிந்துகொண்ட அக்கணமே தெளிந்த தன் இலக்கு எதுவெனத் தீர்மானித்த திடமனமே பெண்மைக்குப் பெருமை சேர்த்துவிடுகிறது.

பெற்றாருக்கோ, மற்றாருக்கோ துன்பம் தராமல் தன்விதியைத் தானே தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்கு இருந்தது என்பதை புனிதவதியார் பேயார் ஆன வரலாறு உணர்த்துகிறது. பேரெழில் தாங்கிய ஊனுடம்பை நீக்கிப் பேயுடம்பு வேண்டிப் பெற்றமை மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றல்லவா?. தாம் அடைந்த மெய்ஞ்ஞான உணர்வை உலகுக்கு "அற்புதத் திருவந்தாதி" மூலம் உணர்த்தினார். "பொற்பதம் போற்றும் நற்கணங்களுள் நானும் ஒன்று ஆனேன்" என்று நமக்கு மகிழ்வுடன் அறிவிக்கிறார். உலகவாழ்க்கையின் உயர்ந்த முடிவு மெய்ஞ்ஞான உணர்வே என்பதைக் காரைக்கால் அம்மையார் பாடல்கள் உணர்த்துகின்றன.

***"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்***
***வேண்டுகின்றார்***
***பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல்***
***உன்னை என்றும் மறவாமை வேண்டும்..."***

காரைக்கால் அம்மையாரின் அருந்தமிழ்ச் சொற்களைக் கையாளும் திறன் பெண்மைக்குப் பெருமை சேர்ப்பதாகவன்றோ பொருந்துகின்றது.

***"ஆராத அன்போடு பேராத காதல் பிறந்து***
***அண்ணலைச் சென்றேத்து வதற்காகவே"***

தம் பாடல்களை இயற்றியதாக அம்மையாரே கூறுகிறார். வெண்பா பாடுவதில் புகழேந்தியாருக்குப் பன்னெடுங்காலம் முன்பாகவே இவர் சிறந்து விளங்கியவர். அற்புதத் திருவந்தாதி இவரது தமிழ்ப் புலமைக்கும், இறைப்பற்றுக்கும் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

இவரது தெய்வப் பனுவல்கள் இறைத்தன்மையை நாம் உணர்வதற்கு வகை செய்பவை. இறைவன் என்று ஒருவன் உண்டா? ஆம் எனில் எங்கிருக்கிறான்? எவ்வகை உருவம் உடையவன்? என்றெல்லாம் கேட்போருக்கு விடைதருபவர் போலத் தாம்பெற்ற இறை அனுபவத்தை

***"அன்றும் திருஉருவம் காணாதே ஆட்பட்டேன்***
***இன்றும் திருஉருவம் காண்கிலேன் - என்றும்***
***தான்***
***எவ்வுருவம் தம்பிரான் என்பார்கட்கு***
***என்னுரைக்கேன்***
***எவ்வுருவோ நின்னுருவம் ஏது?"***

என்று நுண்மான் நுழைபுலம் விளங்க வினாவாகவே விடைதருகிறார். அதுமட்டுமல்ல அப்படியானால் இந்த இறைவன் வானில் உள்ளானா?, மண்ணகத்தில் உள்ளானா? என்றெல்லாம் கேட்பவருக்கு அற்புதமாக விடைதருகிறார்.

***"வானத்தான் என்பாரும் என்க மற்று உம்பர்கோன்..."*** ஆலயங்கள் தோறும்

சென்று அற்புதப்பாக்களைப் பாடினார். திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்னும் பாடல்தொகுதிகளை நமக்குத் தந்தார். அருள் என்பதைப் பற்றிச் சந்தான குரவர்கட்கும், சமய குரவர்கட்கும் முன்பு பாடிவைத்தவர் இவரே. இறைவனே அம்மையே என அழைத்தவர் என்றால் அவர் பெருமையை யார் தான் விரித்துரைக்க வல்லார்.

**“மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்”**

எனச் சேக்கிழாரால் போற்றப்பட்ட அரசியாரின் பெருமைபற்றிப் பார்ப்போம். பாண்டியன் சமணச் சார்பு மிக்கவனாய் சிவநெறியை மறந்தவனாய் வாழ்ந்தமை அரசியாருக்கு பெருந்துன்பமளித்தது. சிவநெறிவழுவாத சோழர் குலத்தில் அவதரித்தவர் அவர். குலப்பற்று, மதப்பற்று, நாட்டுப்பற்று மூன்றுமுடையவர். இதனாலேயே சேக்கிழார் இவருக்குத் தனிப்புராணம் செய்தருளினார்.

“தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை” என்பதால் குலப்பற்றும் “இருந்த தமிழ்நாடு உற்ற இடர் நீக்கி” என்பதனால் நாட்டுப்பற்றும் “பொற்கொழி வெண்திருநீறு பரப்பினார்” என்பதால் சமயப்பற்றும் புலனாகின்றன. சம்பந்தர் திருவாலவாய் திருப்பதிகத்தில் “சிவன் திருநீற்றினை வளர்க்கும் பந்தனை விரலாள் பாண்டிமாதேவி” என்று பாடியருளினார். மிக நெருக்கடியான நிலையிலேயே ஏழாவது நூற்றாண்டிலே அரசியார் செய்தபணி எமது உள்ளத்தைத் தூண்டுகிறது. ஞானசம்பந்தரும் இதனை விளக்குறார். சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டு வாழும் நீர்மையிர் உமைக்காண வந்தனம்” என்று கூறுவதிலிருந்து இவர்கள் ஆற்றிய தொண்டு புலப்படும். அரசியாரின் உறுதுணையே அமைச்சரை நற்பணியாற்றத் தூண்டியது. சமணர்கள் என்ன தீங்கு செய்வார்களோ என்று குலச்சிறையார் அஞ்சி நின்ற நேரத்தில் “ஞானசம்பந்தர் நம்பால் நன்மையல்லாது செய்யும் ஊனம் வந்தடையில் நாமும் உயிர் துறந்தொழிவ” என்றார் அரசியார். கணவானருக்கே சிவநெறியின் பெருமையை நேருக்குநேர் நின்று விளக்குகிறார். வெப்பு நோய்க்குக் காரணமானது சமணர்கள் வைத்த தீயே என்பதை அச்சமின்றி அரசனுக்கு உரைக்கின்றார். இவ்வாறு தம்மைப் பேணி, கணவனைப் பேணி, மதத்தைப் பேணி, குலத்தைப் பேணித் தமது நாட்டையே பேணுகின்ற தவச்செல்வியாக விளங்குகின்றபடியால் தான் “எங்கள் தெய்வம்” என்றும் “தெய்வப்பாவை” என்றும் சேக்கிழார் போற்றினார்.

அடுத்தபடியாக கன்னிப் பெண்ணாகவே இருந்து சிவ தொண்டு புரிந்து திருநாவுக்கரசரைச் சைவ உலகுக்குத் தந்து பெரும் பணியாற்றிய திலகவதியார் விவாகம் செய்யாத நிலையிலேயே மணம் செய்யவிருந்த மணவாளன் போர்க்களத்திலிறந்து விட்டார். உடன் உயிர் துறக்கத் துணிந்த அம்மையார் தம்பியின் வேண்டுதலால் மனமாற்றம் அடைந்தார். தம்பியார் உளராக வேண்டும் எனத் தயவு வைத்தார். தந்தையாராகிய புகழனாருடைய கால் வழியற்றுப் போகாமற் காத்தவர் திலகவதியாரே. சமணத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பட்டமும் பெற்று வாழ்ந்த மருள்நீக்கியாரின் நிலை இவருக்குப் பெருங்கவலை கொடுத்தது. அக்காலத்தில் இக்கவலையை கூறியாற்றுவதற்கு எவ்வித மார்க்கமும் இருக்கவில்லை. திருவீரட்டானேஸ்வரரைத் துதித்தார். “அடியேன் பின் வந்தவனை மீண்டும் வினை பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்” என்று விண்ணப்பம் செய்தார். அவ்விண்ணப்பத்தை

இறைவனேற்று மருள்நீக்கியாருக்குச் சூலை நோயைக் கொடுத்து சைவத்துக்கு திருப்பினார். திலகவதியார் அவரைத் திருநீறு அணிவித்து திருப்பதிகம் பாடுவித்து திருநாவுக்கரசராக்கி வைத்தார். எனவே சைவ உலகுக்கு அப்பரைத் தந்த பெருமை திலகவதியாருக்குரியது.

சுந்தரரின் இரு மனைவியர்களான சங்கிலியார், பரவையார், சிறுத்தொண்டர் மனைவி திருவெங்காட்டு நங்கை, திருமருகல்தாமன் என்பவனின் மகளாகிய வணிகப்பெண் ஆகியோரெல்லாம் சிவநெறியிற் தழைத்து வாழ்ந்தார்கள். கற்பு மேம்பாடுடையவர்கள். இவர்களின் பெருமையைப் பெரிய புராணத்திற் சிறப்பாகக் காணலாம். பக்தியும், ஞானமும் பெண்களுக்கு இயல்பாய் அமைந்தவை. அதனை அவர்கள் தாமுணர்ந்து சமுதாயத்திற்கும் உணர வைக்க வேண்டும். அம்பிகையின் அருள் பெற்று விளங்கும் மங்கையர் அறம் வளர்க்க வேண்டியவர்கள். அன்பும், அருளும், அறமுந்தான் தம்மை உயர்த்துவன. இந்த நிலையில் நின்று வீட்டையும், நாட்டையும் பேணுவது மகளிர் கடனாகும்.

ஞானத்திருவடியாய், இன்மதுக்குடமாய், கானமதுகரமாய், கண்ணிறைந்த பேரழகாய் பாராட்டப்படும் பெண்மை, தாய்மைப் பண்பால், கற்பின் திண்மையால் தெய்வ நிலைக்கு உயர்கிறது.

***"வண்ண நீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில் பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது"***



**சிவன்**

# தாய்த்தெய்வ வழிபாடு

திருமதி . நித்தியவதி நித்தியானந்தன்.

இந்து சமயத்தில் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள சக்தி வழிபாடு மிகப்புராதனமானது. மானிட வளர்ச்சியின் தொடக்க காலத்தில் மக்கட் பேறு பெண்ணுக்கே உரிய இயற்கை வளம் எனக் கருதிய மனிதன் தன் இனத்தைப் பெண்ணாலேயே காப்பாற்றமுடியும் என்னும் நம்பிக்கையில் தான் வணங்கும் தெய்வத்தை பெண்ணாக உருவகித்து வழிபடத் தொடங்கினான்.

மேலும் தாய்மை பல்வேறு அம்சங்களின் உறைவிடம் என உணர்ந்த நம் முன்னோர் தமது அறிவு வளர்ச்சிக்கேற்ப இம் மகாசக்தியை அவள் அள்ளிச்சொரியும் கருணைக்கு ஏற்ப துர்க்கையாக, லக்ஷ்மியாக, சரஸ்வதியாக உருவம் கொடுத்து வழிபட்டனர். அத்துடன் அவளை சிறு குழந்தையாகக் கொண்டு வழிபடுமிடத்து சந்திரிகா என்றும், ஏழு வயதில் சண்டிகா என்றும், எட்டு வயதில் சாம்பவி என்றும் பத்துவயதில் கௌரி என்றும் சிருஷ்டியின் மகாகாளி என்றும் பிரளயத்தில் மகா-மாரி என்றும் செல்வத்தை அளிப்பதில் லக்ஷ்மி என்றும், செல்வத்தை அழிப்பதில் மூதேவி என்றும் கொள்வர். இத்தகைய கோட்பாடு உண்மையில் தாய்மைத்தத்துவத்தை ஆக்க, அழிவு (சாந்த, கொடூர) மூர்த்தங்களின் அம்சங்களையே வெளிக்காட்டுகிறது. எனலாம். தாய்த் தெய்வத்தைக் கன்னியாகவும், தாயாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்து மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாக அழியாக்கன்னியாக கருதுவது இந்தியாவில் மட்டுமன்றி எகிப்திய, சமேரிய நாகரீகங்களிலும் காணப்படுகின்றது. தமிழில் "மோடி" என்ற

சொல் எல்லோரையும் பெற்ற தாயென்றே விளக்கம் பெறுகின்றது. எல்லோரையும் பெற்ற வயிறு பெரிதாக இருக்க வேண்டும் என்பதற்காக புதிய கற்கால மனிதன் தான் உருவாக்கிய சுடுமண் சிற்பங்களில் பெண் உருவங்களை பெரிய வயிற்றுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது. கி.மு 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்ட ஆதிச்சநல்லூர் சிற்பங்களும் இவ்வுருவஅமைப்பைக் கொண்டவையே. தனிப்பாடல் ஒன்று தாய்த்தெய்வத்தை "பெருமோட்டுக் காடு கிழார்" என்று கூறுகின்றது.

ஆண் உறவின்றி கன்னிகையாகவே எல்லோரையும் பெற்றதாய் என்றும் கருத்தும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. "அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்" என்று தாயுமானவர் கூறியிருப்பதும் உலக "முழுத்தீன்ற பெருங்கன்னி" என்று திருவாரூர்ப்புராணம் கூறுவதும் உலகம் முழுவதையும் ஈன்ற அன்னை கன்னியாகவே கருதப்பட்டாள் என்பதைப் புலப்படுத்துகின்றது.

கன்னியாகுமாரி தெய்வத்தைப்பற்றி கி.மு 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய தைத்திரிய ஆரண்யகத்தில் குறிப்பு இருப்பதால் கி.மு. வட இந்தியாவிலும் கன்னியாகுமரி தெய்வத்தை தெரிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது. முதலாம் நூற்றாண்டில் பெரிப்புளூஸ் குமரிமுனையில் இருந்த குகையையும், துறையையும் கூறும்போது அங்கு வாழும் கன்னித் தெய்வத்தைப்பற்றிக் கூறியுள்ளார். குமரிமுனையில் இருந்த நீர்த்துறையையும் அங்கு ஆடவரும் மகளிரும் தாங்கள் செய்த பாவங்களைப் போக்க நோன்பிருந்து நீராடியதையும் குறிப்பிட்டுள்ளார். கன்னியாகுமரி நீர்த்துறை தெய்வத்தை அகநானூறு "கடல் கெழ செல்வி" என்று குறப்பிட்டுள்ளது. மணிமேகலையும் செய்த பாவத்தைப்போக்கிக்

கொள்ள குமரித்துறையில் நீராடுவது பற்றிக் குறிப்பிட்டுள்ளது. குமரி தெய்வத்தையே காவிரிப்பூம்பட்டினத்தில் "சம்பாதி" என வணங்கினர்.

சங்க இலக்கியத்தில் தாய்த் தெய்வம் "வெல் போர் கொற்றவை" என்றும் காட்டில் உறைபவளாகவும் குறிப்புகளுண்டு. அரசர்களும் . வீரர்களும் தாம் போரில் வெற்றி பெற வேண்டிக் கொற்றவையை வழிபட்டுள்ளனர். அவளின் உறைவிடம் காடாகவே கொள்ளப்பட்டது. "கானமர் செல்வி" என அகநானூறு என்றும் "காடமர் செல்வி" என மணிமேகலையும் கூறுகின்றன. கலித்தொகையில் இந்த தாய் தெய்வமே ." பெருங்காட்டுக் கொற்றி" என அழைக்கப்பட்டாள். தாய்தெய்வத்தை "கானநாடி" என தக்க யாகப்பரணியும் "கானமோடி" என நீல கேசியும் கூறுகின்றது.

பதிற்றுப் பத்து என்னும் சங்க நூலில் கொற்றவை துர்க்கையுடன் இணைத்துக் கூறப்படுகின்றாள். இனக் குழு மக்களின் வேட்டைக்குப் கொற்றம் தருபவளாக இருந்த கொற்றவை பின்னர் வேந்தர்க்கும், வீரர்க்கும் கொற்றம் தருபவளாக கொண்டாடப்பட்டாள். வடமொழி இலக்கியத்தில் துர்க்கையை ஆறலைக்கள வர்களிடமிருந்தும், நீரில் மூழ்கி இறப்பதில் இருந்தும் மற்றும் பல ஆபத்தில் இருந்தும் காப்பவளாக கொள்கின்றனர். துர்க்கை என்ற பெயருக்கு ஆபத்துக்களை நீக்குபவளென்று வேர்ச்சொற்பொருள் கூறுவர். ஆகவே தொடக்கத்தில் தமிழர்களின் கொற்றவையும் துர்க்கையும் வெவ்வேறு தெய்வங்கள் என்று புலனாகின்றது.

வடமொழியில் உள்ள ஸ்கந்தபுராணமும், பவிஷ்ய புராணமும் துர்க்கையின் வழிபாட்டை மூன்று வகையாக பிரித்துக்காட்டுகின்றது. தாமசம், ராஜசம், சாத்வீகம் என்ற மூன்று வகை வழிபாடு கூறப்பட்டுள்ளது. மதுவும், மாமிசமும் கொடுத்துத் தொழுவது தாமசம், பலிகொடுத்து வேற்பது ராஜசம், மந்திர சொருபத்தோடு வழிபடுவது சாத்வீகம் என்றும் கூறியுள்ளன.

காடுகளுக்கு காடமர் செல்விக்கு வடுகி என்ற பெயர் உள்ளதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். வடுகி என்ற சொல் சங்ககாலத்தில் தமிழகத்திற்கு வடக்கே இருந்த நாடுகளைக் குறிக்கின்றது. எனின் வடக்கே இருந்து வந்த துர்க்கை கொற்றவை தெய்வத்துடன் இணைந்த போது இப்பெயரைப்பெற்றாள் என்று கொள்வது பொருத்தமானது. மேலும் ஆகம மரபுக்கமைய அமைக்கப்படும் ஆலயங்களில் கருவறைத் தேவகோட்டங்களில் வட திசையில் துர்க்கையின் கோட்டம் அமைக்கப்படுவதும் அவளை "வடக்குவாய்ச்செல்வி" என்றழைப்பது குறிப்பிடத்தக்கது.

மேலே கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்ற போது "வெற்றிவேல் போர்க்கொற்றவை" காடமர் செல்வி, வடக்குவாய் செல்வி இவர்கள் அனைவரும் இணைந்ததே எமது சதா வழிபாடாகும். நாயன்மார்கள் இவளை "முதுகோதை" என்று அழைத்தனர். சோழர்களின் வெற்றித்தெய்வமாக விளங்கிய நிசம்பசூதனியும் பழையோள் வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாகும்.

சக்தி வழிபாட்டு மரபில் இடம் பெறுகின்ற வாம மார்க்கம் இப் பழைய வழிபாட்டு நம்பிக்கைகளின் தொடர்ச்சியென்றே கூற வேண்டும். சாக்த வழிபாட்டுப் பாரம்பரியத்தால் தட்சிணமார்க்கம், வாமமார்க்கம் என இரண்டு பிரிவு காணப்படுகின்றது. ஒளிவுமறைவின்றி பகிரங்கமாக ஏனையோருக்கு தெரியும் வண்ணம் சக்தி வழிபாட்டுக் கிரியைகளின் ஈடுபடுவோர் தட்சிண மார்க்கத்தை சார்ந்தவர்கள் வாமமார்க்கத்தினர்

தாம் இயற்றும் கிரியைகளை ஏனையோர் அறியா வண்ணம் ரகசியமாக செய்ய விரும்புவர். நடு நிசியில் கூட இவர்கள் சக்கர பூசையில் ஈடுபடுவர். அத்துடன் மீன், ஊண், மது, புணர்ச்சி, தானியம் ஆகிய ஐவகை நுகர்வுகள் மூலம் முத்தி பெறலாம் எனவும் நம்பினர். ஆயினும் இத்தகைய வழிபாட்டு முறை காலகதியில் சக்தி வழிபாட்டின் சிறப்பை மங்கச் செய்தது எனலாம்.

சங்க காலத்தில் தாம் வழிபட்ட தாய்தெய்வத்தை பைஞ்சாய்கோரையானாலும், வண்டல்மண்ணாலும் செய்துவழிபட்டார்கள். தைத்திங்கள்நீர்த்துறையில் மூழ்கி பாவை நோன்பு நிகழ்த்திய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. இத் தாய்தெய்வ நோன்பைச் சுற்றி பிற்காலத்தில் எழுந்த நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் சடங்குகள், ஆகியவைகளை சைவர்களின் திருவெம்பாவையிலும், வைணவர்களின் திருப்பாவையிலும் காணக்கூடியதாகவுள்ளது. பரிபாடல் " அம்மா ஆடல்" பற்றிக் கூறுகின்றது. அம்மா என்பதற்கு தாய் என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. அம்மாவையோடு ஆடியதே அம்மா பாடல் என்றனர். இந்த வழிபாட்டின் பண்டைக்காலத்தில் கண்ணனுக்குத் தொடர்பில்லை. ஆனால் ஆழ்வார்கள் காலத்தில் கண்ணனுடன் தொடர்புபடுத்தி திருப்பாவை கூறப்பட்டது. அகநானூறுப்பாடல் ஒன்று சங்ககால மகளீர் தான் கையால் செய்த பாவைகளை பொய்கைத்துறையில்போட்டு குரவைக்கூத்தாடினர். என்ற செய்தியைக் கூறுகின்றது. இன்றும் வங்காளத்தில் துர்க்கா பூஜைவிழாவில் காளி, லட்சுமி முதலிய தேவிகளின் பாவைகளை ஆற்றில் போடுவதை காணக்கூடியதாகவுள்ளது. மேலும் அகநானூற்றுப் பாடலில்சிவனின் ஆலமுற்றத்துப் பொய்கையைச்சூழ்ந்த குளத்துறையில்மகளீர் பாவையை வைத்து தொழுதனர். என்ற குறிப்பு இப்பாவை நோன்பு சிவபெருமானுடன் தொடர்புபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

சங்ககாலத்தில் நடைபெற்ற இவ் வழிபாட்டின் பின்னர் பாவை நோன்பானது என்பது புலனாகின்றது. குரவைக்கூத்தே பின்னர் சிலப்பதிகாரத்தில் கண்ணனுடன் பொருத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு ஆச்சியர் குரவையாயிற்று. பின்னர் இம் மரபு பாகவதத்தும் சேர்க்கப்பட்டு ராஜகிரீடமாயிற்று.


சங்ககாலத்தில் முருகன் பழையோர் குழவியாக கருதப்பட்டார். ஆயின் சிவனின் மகனென்ற குறிப்பு இடம்பெறவில்லை. பல்லவர் காலத்தில் முருகனைச் சிவனின் மைந்தனாக கருதினர்.

***"செல்வியைப் பாகங் கொண்டான்***
***சேந்தனை மகனாகக் கொண்டான்"***

என அப்பர் பெருமான் கச்சிமேல தளி என்ற பதிகத்தில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. சங்ககாலத்தில் சிவனோடு தொடர்பே இல்லாத செல்வியும், சேந்தனும் பல்லவர் காலத்தில் சிவனுடன் உறவு படுத்தப்படுகின்றனர். தேவாரத்தில் " **முது கோதையோடாடிய நீள் மார்பன்"** என்றும் **"போகமார் மோடி கொங்கை புணர்தரும்புனிதர் போலும்"** என வரும் குறிப்புகள் சிவன் பழையாளோடு ஆடியதும் மோடியைக் மனைவியாக்கிக் கொண்டதும் தெரிகின்றது. சங்கரர் இயற்றிய லலிதா சகஸ்ரநாமத்தில் வரும் "புராதநா" என்ற பெயர் பழையோர் என்பதன் மொழிபெயர்ப்பென்றே கூறவேண்டும். தக்கயாகப் பரணி தொல்லை நாயகி என்றும் திருப்புகழ் "மூவர்க்கும் முன்னால்" என்று மும்மூர்த்திகளுக்கு கூறுவதும் கவனிக்கத்தக்கது. தொகுத்து நோக்குமிடத்து இந்தப் பளையோளே ஆதிபராசக்தி ஆகி இப்பிரபஞ்சம் அனைத்திற்கும் மூலமாக கருதப்படுகின்றாள்.















சேரல்

பெயர் :..............................................................

முகவரி :..............................................................

..............................................................